


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27/06/2020

# தமிழ் கேட்க ஆசை

## தம்பலகாமம் க. வேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்


நூல் தலைப்பு : தமிழ் கேட்க ஆசை

நூல் வகை : வரலாற்று நூல்

ஆசிரியர் : தம்பலகாமம் க.வேலாயுதம்

விலாசம் : தம்பலகமம்

பக்கங்கள் : 118

தாளின் வகை : 70கிராம் பாங்க் பேப்பர்

வெளியீடு : 2005

வெளியீடுவோர் : பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம்
பொற்கேணி
தம்பலகமம்

அச்சிட்டோர் : ரெயின்போ மினிலாப் (பிரீஇ) லிமிடட்,
361, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

விலை : ரூபா 110.00

ISBN : 955-1098-00-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

தென் கைலை எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்துடன் வரலாற்று ரீதியாக நெருங்கிய தொடர்புடைய ஆதி கோண நாயகர் கோவில் அமைந்துள்ள பழம் பெரும் பதியாம் தம்பலகமத்தில் பிறந்து வளர்ந்தவர் திரு. க. வேலாயுதம் அவர்கள்.

தென்னிந்தியாவிலிருந்து தம்பலகமம் வந்திருந்த நாடகக் கலைஞர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தமையால் இவரிடம் இயற்கையாக அமைந்திருந்த நாடகக் கலையை வளர்த்துக் கொண்டார். அத்துடன் ஆர்மோனியம், மத்தளம் போன்ற இசைக் கருவிகளைக் கையாளுவதிலும் வேண்டிய திறமைகளை பெற்றுக் கொண்டார். காலப்போக்கில் கவிதை, கட்டுரை, கதை எழுதுவதில் ஆர்வம் திரும்பியது. எழுத்துத் துறையிலும் தன்னை வளர்த்துக் கொண்டார்.

இவரது சிந்தனைகளும், படைப்புக்களும் தமிழ் இலக்கியம், சமயம், வரலாறு, வைத்தியம் அரசியல் போன்ற சகல துறைகளையும் தொட்டது மட்டுமல்லாது ஒரு தனிச் சிறப்பிடத்தையும் பெற்றது.

இலை மறை கனியாகவிருந்து தமிழுக்கும், சைவத்துக்கும், இவை வளர்த்த கலைகளுக்கும், சமூகத்துக்கும் தம்மாலான சேவைகளைச் செய்து வருகின்றார். 1917ஆம் ஆண்டில் அவதரித்து உடலால் முதுமையடைந்தாலும், சிந்தனையால், செயலால் என்றும் உயிர்த்துடிப்புடனும், உறுதியுடனும் வாழ்பவர்.

இந் நூலாசிரியரின் கட்டுரைகளில் 30 "தமிழ் கேட்க ஆசை" என்ற நூலுருவம் பெற்று வெளிவரவிருப்பதையும், நூலாசிரியர் கௌரவிக்கப்படுவதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இப்புனித பணியை முன்வந்து செய்த ஒருங்கமைப்பாளர்களுக்கும், சிறப்பாக திரு.க.திருச்செல்வம் அவர்களுக்கும் எமது நன்றியும், பாராட்டும். நூலுருப் பெறாது ஏக்கத்துடனிருக்கும் இந் நூலாசிரியரின் பெறுமதியான படைப்புக்களும் தொடர்ந்து நூல் வடிவம் பெற்று விரைவில் வெளிவரவேண்டும் என்பது பெருவிருப்பாகும். இதற்குத் தமிழ் உள்ளங்களின் அன்பும், ஆதரவும் என்றும் வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

***நன்றி***
***இங்ஙனம்***
***என்றும் தங்கள் சேவையிலுள்ள***
***க. துரைரெட்ணசிங்கம்***
***நாடாளுமன்ற உறுப்பினர்***
***திருக்கோணமலை மாவட்டம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

வரலாற்றுப் புகழ்மிக்க தம்பலகமத்திலிருந்து, திருக்கோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளரும், சிறந்த கவிஞரும், வீரகேசரிப் பத்திரிகையில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நிருபராக அனைவரும் பாராட்டும் வகையில் கடமையாற்றியவருமான எமது பெருமைக்குரிய, தம்பலகமம் க. வேலாயுதம் அவர்களின் "தமிழ் கேட்க ஆசை" என்னும் கட்டுரைத் தொகுப்பு வெளிவருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். தமது ஆற்றல் மிக்க எழுத்தால், பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களில் இடம்பிடித்தவர் திரு.க.வேலாயுதம் அவர்கள். தான் பிறந்த மண்ணை வெகுவாக நேசிக்கும் இவர் தனது பெயருக்கு முன்னால் தனது கிராமத்தின் பெயரை எழுத என்றும் மறந்ததில்லை. தம்பலகமம் க.வேலாயுதம் என்ற பெயரில், இலங்கையிலிருந்து வெளிவரும் புகழ் பெற்ற பத்திரிகைகளிலும், தமிழகத்திலிருந்து வெளிவரும் 'குமுதம்' போன்ற செல்வாக்கு மிக்க பத்திரிகைகளிலும், கதை, கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்களை இவர் எழுதி வருவது அனைவரும் அறிந்த உண்மை. அண்மையில் 'தம்பலகமம் ஆதி கோணநாயகர் வரலாறு' என்னும் ஆய்வுக்கட்டுரை ஒன்று பிரசுரமாகியுள்ளதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

புராண இதிகாசங்களிலுள்ள நுட்பமான ஆன்மீக விடயங்களை தமக்கே உரிய சரளமான நடையில் படிப்போர் மனத்தில் ஆவலைத் தூண்டும் வகையில் எழுதும் ஆற்றல் இவருக்கு இயல்பாகவே உண்டு. ஈழத்தில் புகழ்மிக்க வீரகேசரிப் பத்திரிகையில் இவரது ஆக்கங்கள் பெருந்தொகையாகப் பிரசுரமாகியுள்ளது. இக்கட்டுரைகளில் முப்பது கட்டுரைகளைத் தொகுத்து, "தமிழ் கேட்க ஆசை" என்னும் தலைப்பில், தம்பலகமம் பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம் வெளியிட முன்வந்திருப்பது அவர்களின் சமூக அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு ஒரு நல்ல உதாரணமாக அமைந்துள்ளது என நான் கருதுகிறேன். இந்த வகையில் எமது பிரதேசத்தின் மூத்த எழுத்தாளரை அவர்கள் கௌரவிக்கும் பாங்கு, உண்மையிலேயே அனைவராலும் பாராட்டிப் போற்றுதற்குரிய ஒரு செயலாகவே உள்ளது.

இத்தொகுப்பிலுள்ள முதல் கட்டுரையே தம்பலகமத்தின் பழமை வரலாற்றை அலசி ஆராய்வதற்காக அமைந்துள்ளது. 'சரசோதிமாலை' என்னும் சோதிட நூல், தம்பலகமத்தை ஆட்சிபுரிந்த மூன்றாவது பராக்கிரமபாகுவின் அரச சபையில் அரங்கேறியது என்கிறார் திரு.க.வேலாயுதம் அவர்கள். இது வெறும் கற்பனையல்ல. இலங்கை வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த விடயம். இக்கருத்தை வரலாற்றுப் பேராசிரியர் பத்மநாதன் போன்றோரும், மேலும்பல வரலாற்று ஆய்வாளர்களும் வலியுறுத்தியதை இங்கே சுட்டிக் காட்டுவது எனது கடமையாகிறது. இத்தொகுதியிலுள்ள பெரும்பாலான கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.வேலாயுதம் அவர்களின் தமிழ்ப்பற்றையும், தமிழில் அவருக்குள்ள ஆழ்ந்த புலமையையும் எடுத்தியம்புவனவாக உள்ளன.

திரு.க.வேலாயுதம் அவர்களின் எழுத்துலக வெற்றிக்கு அவரிடம் இயல்பாக உள்ள சில நல்ல பழக்க வழக்கங்களே காரணமாகும் என்பதை நான் நன்கறிவேன். அவரின் தேடல் முயற்சியை அனைவரும் பாராட்டியே ஆகவேண்டும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பதற்கு அவர் நல்ல உதாரணமானவர். தம்பலகமம் பொது நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டவர்களில் அவரும் ஒருவராவார். எப்பொழுது பார்த்தாலும் வாசித்துக் கொண்டிருப்பார். எண்பத்தேழு வயதுடைய இக்காலத்திலும் வாசிப்பதில் அவரிடமுள்ள தாகம் எமக்கு ஆச்சரியத்தையே தரும். குறிப்பாகச் சொல்லப்போனால் எவரது உதவியும் இல்லாமல் தனது முயற்சிக்கு மூலமாக எழுத்துலகில் முன்னுக்கு வந்தவர்.

தம்பலகமம் காலத்திற்குக் காலம் பல தமிழ் அறிஞர்களை தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தந்துள்ளது. 'சித்திரவேலாயுத காதல்' இயற்றிய திரு.ஐ.வீரக்கோன் முதலியார் அவர்கள் 'கோணேசர் பதிகம்' பாடிய திரு.கதிரவேற்பிள்ளை அவர்கள், தம்பலகமம் கூட்டம்புளியில் பிறந்து, கேரளப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் கடமையாற்றிய பண்டிதர் ஐ.சரவணமுத்து அவர்களைப் போன்ற புகழ்மிக்க தமிழறிஞர் வரிசையில் தம்பலகமம் க.வேலாயுதம் அவர்களையும் இணைத்துக்கொள்ளும் காலம் வெகு தூரத்திலில்லை என்பது எனது கருத்தாகும். எமது கிராமத்திலிருந்து இத்தகையதொரு நூல் வெளிவருவதையிட்டு நாம் அனைவருமே சந்தோசப்படலாம்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், குறுநாவல், எனப் பல துறைகளிலும் தம் கைவண்ணத்தைக் காட்டியுள்ள, தம்பலகமம் க.வேலாயுதம் அவர்கள், ஆதி கோணநாயகப் பெருமானின் அருளாசி பெற்று நீண்டகாலம் வாழ்வதுடன் மென்மேலும் தனது எழுத்துப் பணியைத் தொடர வேண்டும் என வாழ்த்துவதுடன், இவரது ஆக்கங்களைத் தொகுத்துத் 'தமிழ் கேட்க ஆசை' என்னும் பெயரில் இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிடும், தம்பலகமம் பொற்கேணி கிராம அபிவிருத்தி சங்கத்தையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**நன்றி**

**திரு.கு. திலகரெத்தினம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தம்பலகமம் வேலாயுதம் அவர்கள் பத்திரிகைத் துறையில் பல காலமாக தடம்பதித்தவர். பல துறைகளில் ஆற்றல் கொண்ட ஒரு கலைஞனை தமிழ் சமூகம் கண்டுகொள்ளத் தவறிவிட்டது. பத்திரிகைகளில் வெளிவந்த அவரது கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிடுவதற்கு அவரிடம் நாம் கேட்டபோது அவற்றினை அவர் தர மறுத்துவிட்டார். ஏற்கனவே சிலர் இவ்வாறு பெற்றுக்கொண்டுபோன தனது கட்டுரைகள் இல்லாமல் போய்விட்டது என்ற பயமே அதற்கான காரணமாக இருந்தது. இந்நூலை தம்பலகமத்தில் முதன்முதலாக வெளியிட வேண்டும் என்னும் ஆசை என் மனதில் இருந்தது. திரு. க. வேலாயுதம் அவர்கள் ஏற்கனவே உலகம் முழுவதிலும் உள்ள வாசகர்களிடம் அறிமுகமாகி இருந்தாலும் தற்போதைய இளம் சமுதாயத்திற்கு அவர் புதியவரே. இந்நூலை வெளியிடுவதற்கு பல தடைகள் இருந்தன. ஒரு அமைப்பு ரீதியாக இதனை வெளியிட வேண்டும் என்ற நோக்கோடு ஆரம்பத்தில் பல முயற்சிளை மேற்கொண்டேன். எனினும் அவை பயனற்றுப் போயின. நான் தலைவராக இருக்கும் பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கமே அதற்கான பொறுப்பை இன்று ஏற்றுக் கொண்டது. கிராம அபிவிருத்தி சங்கம் என்றால் சிறிய நிர்மாண வேலைகள் செய்யும் அமைப்பு என்பதே பொதுவாக வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கு முற்றுமுழுதாக வித்தியாசமான வகையில் இயங்கும் எமது சங்கத்தின் புதிய ஒரு வடிவம்தான் திரு. க. வேலாயுதம் அவர்களின் "தமிழ் கேட்க ஆசை". இந்நூலினை வெளியிடுவதற்கு என்னுடன் துணைபுரிந்த அனைவருக்கும் எனது நன்றிகள். குறிப்பாக எமது கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அட்டைப்படத்தினை உருவாக்கிய இந்தியாவிலிருந்து வருகை தந்த கட்டைபறிச்சானைச் சேர்ந்த திரு. இரத்தினசிங்கம் ஆதவன் அவர்களுக்கும், கச்சிதமான முறையில் இந்நூலை அச்சிடுவதற்கு உதவிய ரெயின்போ நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

க. திருச்செல்வம்,<br>
தலைவர்,<br>
பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம்<br>
தம்பலகமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

நான் மாணவனாகக் கற்கும் காலத்தில் தம்பலகமம் நாயன்மார் திடலில் வசித்த என் தாயாரின் மூத்த சகோதரியின் மகன், அண்ணன் வேலுப்பிள்ளை சிறந்த ராஜபாட் நடிகராகவும் ஆர்மோனியம் வாசிப்பவராகவும் கைராசிக்கார வைத்தியராகவும் திகழ்ந்தார். அண்ணா பழக்கிய நாடகங்களில் எல்லாம் என்னை நடிக்கச் செய்தார். அக்காலம் எனக்கு நல்ல குரல் வளமும் இருந்தது. முத்தமிழின் ஓர் அங்கமான நாடகங்களில் நடிப்பதில் என் கவனம் சென்றாலும் புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் எனக்கு அதிகமாகவே இருந்து வந்தது. நூல்களில் காணும் நிகழ்வுகள் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நாம் அடையும் இன்பம்போல் பிறரும் வாசித்துப் பயனடையட்டுமே என்ற நோக்கில் புத்தகங்களில் படித்த முக்கிய நிகழ்வுகளைக் கவிதைகளாக, கட்டுரைகளாக கதைகளாகப் பத்திரிகைகளுக்கு எழுதினேன்.

வீரகேசரி நிருபராக நீண்டகாலம் பணிபுரிந்துள்ளேன். என் அபிமான வீரகேசரிக்கு, மித்திரனுக்கு விஷய தானங்கள் அனுப்புவேன். அடுத்து தினபதி, சிந்தாமணி, கரிகாலனவர்கள் ஆசிரியராக இருந்த சுடர், சுதந்திரன், தினக்குரல், தினகரன், ஆத்மஜோதி, சிவநெறி, இந்தியக் குமுதம், பக்தி இதழ் எல்லாப் பத்திரிகைகளுமே என் எழுத்தை உவந்தேற்றுப் பிரசுரித்து உதவின. அந்தப் பத்திரிகைகளுக்கும் அவைகளின் ஆசிரிய பீடங்களுக்கும் என் வணக்கங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பத்திரிகைகளில் பிரசுரமானவைகளை புத்தகமாக்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் ஏற்பட்டது. ஆனால் பத்துக்கும் மேற்பட்ட காணி வழக்குகளில் அகப்பட்டு என் பொருளாதார நிலையும் குறைந்தது. புத்தகம் வெளியிடுவது பற்றி எண்ணிப் பார்க்க முடியாமலும் இருந்தது. ஆயினும் தம்பலகமத்தின் எழுத்து புத்தக வடிவில் வெளிவர வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்ட தம்பலகமம் பொற்கேணியில் வதியும் பொறியியல் கற்று தம்பலகமத்தை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும், எல்லோரும் சந்தோசமாக, மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற மேலான எண்ணத்துடன் பணிபுரிந்து வரும்" திரு.கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் பத்திரிகையில் வெளிவந்த எனது இக் கட்டுரைகளைப் புத்தகமாக பொற்கேணி கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக வெளியிடுகின்றார். அந்த இளையவருக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் ஆதிகோணேசப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்று இறைஞ்சி வேண்டுகின்றேன்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' – திருமூலர்

***தம்பலகாமம் க. வேலாயுதம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

**"முத்திருக்குங் கொம்பசைக்கு மூரித்தன் டேந்திவரும்**
**கொத்திருக்கு நேரே குலைசாய்க்கும் - எத்திசைக்கும்**
**தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்**
**ஆமணுக்கு மால்யானை யாம்".**

பாடசாலையில் படிக்கும்போது எங்களுக்குத் தமிழ் கற்பித்துத் தந்த ஆசான்களுள் பண்டிதர் வைரமுத்து, தம்பலகமம் பண்டிதர் சரவணமுத்து, பண்டிதர் வடிவேல் ஆகியோர் மனதை விட்டு - நினைவில் இருந்து அகலாதவர்கள். அவர்கள் தமிழை, தமிழ்க்கவிதைகளை அழகாக விளங்கப்படுத்துவார்கள். பதம் பிரித்து, சொற்களுக்கு அர்த்தம்கூறி பின் ஒன்றுகூட்டி விளங்கப்படுத்தி முடிக்கும்போது கிட்டத்தட்ட அந்தச் செய்யுள் மனதிலே பதிந்தே விடும். அதிலும் சிலேடைச் செய்யுள்களை விளக்கும்போது நாம் வியந்து போய் நிற்போம்.

சிலேடை என்பது, ஒரு சொல் இரண்டு பொருளைக் குறிக்கும். அன்றைய புலவர்கள் சிலேடைபாடுவதில் வல்லவராக இருந்தார்கள். அதிலும் குறிப்பாக காளமேகப்புலவர் இதில் கைவந்தவராகவே இருந்தார்.

பல புலவர்கள் கூடியுள்ள அரசசபையில், புலவர்கள் சிலேடைபாடும்படி கேட்பார்கள். அப்படிக் கேட்ட புலவர் உட்காருமுன்னே சிலேடை பாடுவான் புலவன். ஒரு கணப் பொழுதில் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு பாடுவதென்றால் இலேசான காரியமா? இது கவிஞனுடைய ஆழ்ந்த அறிவையும் சொல் ஆட்சியையும் எடுத்துக் காட்டுவது மட்டுமன்றி அந்தக் கவிஞனின் ஆத்ம பலம் இறைநம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. அந்தவகையில் புலவர் சபையில் புலவர்கள் பலரின் கேள்விகளுக்கு - சிலேடைபாடும்படி கேட்ட கேள்விகளுக்கு எந்தவித கிலேசமின்றி நிதானமாக ஒன்றல்ல பல சிலேடைப் பாடல்களை பாடியுள்ளார் காளமேகப்புலவர்

ஆமணக்குக்கும் யானைக்கும் சிலேடைபாடும்படி கேட்டபோதே மேற்கண்ட பாடலைப்பாடினார் காளமேகப்புலவர்.

எந்தத் திசைகளிலும் இனிமையாக பரிணமிக்கின்ற மலர்ச்சோலை சூழ்ந்த திருமலை ராஜனுடைய வெற்பகத்தில் ஆமணக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துடையதாகியிருக்கும், கொம்பசைய நிற்கும், நெரிகின்ற தண்டேந்தி வளரும், காய்கள் கொத்துக் கொத்தாயிருக்கும். நேர்மையாகிய குலைகள் சாய்ந்திருக்கும் ஆதலாலும், யானை தன்னகத்தில் முத்திருக்கும், கொம்பினை அசைக்கும், வலிபெற்ற இரும்புலக்கையை துதிக்கையில் ஏந்திவரும், மஸ்தகத்திற் பாகன் அங்குசத்தால் குத்தும் குத்துடையதாய் இருக்கும், பகைவர் கூட்டத்தை இரித்தோட்டும் ஆதலாலும் இவ்விரண்டும் ஒன்றனை ஒன்று ஒக்கும் என்பதாகும்.

இதுவே இப்பாடலின் கருத்தாகும்.

"காளமேகப் புலவர் சரித்திரம்" என்ற கட்டுரையில் இதுபோன்று இன்னும் பல பாடல்களைக் காணலாம். இதுபோன்று பல கட்டுரைகளைக் கொண்டு வெளிவந்த நூல்தான் "விநோதரச மஞ்சரி".

1924ஆம் ஆண்டில் பதிக்கப்பட்டுள்ள நூலாகும். இதன் ஆசிரியர் அட்டாவதானம் வீரசாமி செட்டியார் அவர்களாகும். B. இரத்தினநாயகம் அண்டு ஸண்ஸ் அவர்களால் அவர்களது அச்சகமான திருமகள் விலாச அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

"தமிழ்ப் பாஷையினுள் நூல்கள் அனைத்தும் சாதாரணமாக உணர்தற்கரிய செய்யுள் ரூபமாக இருத்தலின், அவை ஐயந்திரிபறக் கற்றோர்களன்றி மற்றோர்க்கு எளிதிற் புலப்படாமை நோக்கி வசன நடையாயிருந்தால் யாவர்க்கும் உபயோகமாமென்று கருதி சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில் திராவிடாந்தி பாஷா போதகராயிருந்த பொ்ஸிவல்துரை யவர்களுடைய அனுமதிகொண்டு அவ்வித்தியாசாலையில் பிரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் - வீராசாமி செட்டியார்களால் அக்காலத்தில் சென்னை மாகாணத்தில் பிரசுரிக்கப்பட்டு வந்த "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகையில் வெளிப்படுத்தி வந்தார்" என நூல் முகம் கூறுகின்றது.

இந்நூலில் தெய்வக்கொள்கை, கற்பு நிலைமை, கீதவாக்கிய விநோதம், கற்றாய்ந் தொழுகல், பயனிலுழவு, மகாபண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது, காலபேதவியப்பு, நன்றி மறவாமை, கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது, ஒட்டக்கூத்தர் ஈடியெழுவது பாடியது, ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண்பேசியது, புகழேந்திப் புலவர் சரித்திரம், ஏகம்பவாணர் சரித்திரம், ஔவையார் சரித்திரம், அவிவேக பூரண குரு கதை, சிறுகூனன் கதை, ஓர் பதிவிரதை சரித்திரம், காணிதாஸ் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரம் ஆகிய இருபது கட்டுரைகளை உள்ளடக்கி 438 பக்கங்களைக் கொண்ட நூலாகும். இதன் அன்றைய இந்திய விலை ரூபா 2/=

திரு. தம்பலகமம் க. வேலாயுதம் அவர்களின் "தமிழ் கேட்க ஆசை" என்ற கட்டுரைத் தொகுப்பை வாசித்த போது, எனக்கு மேற்குறிப்பிட்ட "விநோத மஞ்சரி" என்ற நூலே ஞாபகத்திற்கு வந்தது. "தமிழ் கேட்க ஆசை" என்ற கட்டுரைத் தொகுப்பில் முப்பது கட்டுரைகள் அடங்கியுள்ளன. அன்றைய நிலையில் "விநோத மஞ்சரிக்" கட்டுரைகள் எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று இன்றைய காலகட்டத்தில் இவரது கட்டுரைகள் முக்கியமானதும் அவசியமானதுமே. இவரது கட்டுரைகளில் பல இந்த மண்ணின் - இவரது மண், தம்பலகமம் மண்ணின் வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. சில கட்டுரைகள் ஆய்வை நோக்கி இருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையும் அதன் தன்மையில் தனித்துவமாகவே இருக்கிறது. திறமையாக எழுதப்பட்டிருக்கிறது.

"வாசிப்பு ஒருவனை அறிவாளியாக்கும்" என்பதற்கு தம்பலகமம் க. வேலாயுதம் அவர்கள் ஒரு உதாரணம் என்றால் அது மிகையாகாதது மட்டுமல்ல பொய்யுமல்ல.

தம்பலகமம் கிராமம் எத்தகைய வளங்களையுடையது என்பதை அறிந்தவர்கள்தான் அறிவார்கள். கல்வி வசதி குறைந்த, நூல் நிலையங்களோ, நூல் சந்தை அகங்களோ அற்ற அக்கிராமத்தில் (தன் தேடல்மூலம் நூல்களைத்தேடி வாசித்து) வாழ்ந்த க.வேலாயுதம் அவர்கள் அதனூடாக தன் கலை இலக்கிய உணர்வுகளை வெளிக்கொணர்வதில் மற்றவர்களைவிட எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல என்பதை, 'தமிழ் கேட்க ஆசை' என்ற நூலின் மூலம் நிருபித்துள்ளார்.

படிக்கவேண்டிய வயதில் நடிப்பில் தடம்பதித்து இசையால் [illegible]கப்பட்டு சிறந்த ஆர்மோனியம் வாசிப்பவர் என்ற பெயரைப்பெற்றார். [illegible]வைத்தியத்தையும் முறையே கற்ற சிறந்த வைத்தியரும் கூட.

கல்வி என்பது பள்ளிக்குள் மட்டும்தான் என்ற நிலைக்கு அப்பால் "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்ற பழமொழிக்கமைய பள்ளியின் படியறியாப் பல அறிஞர்களை நாம் கண்டிருக்கிறோம். இந்த வரிசையில் கண்டதையும் கற்றுப் பண்டிதரானார். தன் மண்ணின் இயற்கை வனப்பில் தன்னையே மறந்து லயித்துவிடுவார். அந்த லயிப்பில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளின் உந்துதலால் பல பாடல்கள் வெளிவந்தன. பத்திரிகை சஞ்சிகைகளில் தன் பேனாவைப் பதித்தார். அந்தக் காலத்திலேயே இந்திய சஞ்சிகையான குமுதத்திற்குக் கதைகள் எழுதிச் சன்மானம் பெற்றுள்ளார் என்றால் அவரின் எழுத்தாற்றலைப்பற்றி நாம் கூறவேண்டியதில்லை.

ஒரு பத்திரிகை ஊடகவியலாளனாக தன் பணியைச் செய்தபோதும், தன் கிராமத்து மக்களின் பல கஸ்ரங்களை தன் எழுத்தாற்றலால் நிவர்த்தி செய்துள்ளார்.

தன் கிராமத்தின் மகிமையை - வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர அவர் தயங்கியதில்லை. பல்வகைப்பட்ட கட்டுரைகளை வீரகேசரிக்கு எழுதியுள்ளார்.

இவரிடத்தில் போற்றவேண்டிய ஒரு சிறப்பு, தான் பிறந்த மண்ணை மறந்தாரிலை. திருக்கோணமலையில் பிறந்து, இந்தியாவில் பெரும் தமிழ்த் தொண்டு செய்த கனகசுந்தரம்பிள்ளை, சரவணமுத்துப்பிள்ளை ஆகிய இருவரும், தம் பெயருக்கு முன்னால் தாம் பிறந்த ஊரான திருக்கோண மலையை குறிப்பது போன்றே இவரும் தம் பெயருக்கு முன்னால் தம்பலகமம் என்பதை எழுத மறந்தாரில்லை.

நீண்டகாலமாகப் பத்திரிகை துறையில் பணியாற்றிய போதும், அவர் உள்ளத்தில் ஒரு குறை - வேதனை இருந்து கொண்டே வந்தது. தான் இதுவரை எழுதிவந்த கட்டுரைகள் வருங்கால சந்ததிக்குக் கிடைக்கும் வகையில் ஒரு ஆவணமாக - நூலாக உருப்பெறவில்லையே என்பதே அது.

'தமிழ் கேட்க ஆசை' என்ற இக்கட்டுரைத் தொகுப்பு அவரது நீண்டநாளைய கனவை - ஏக்கத்தை நிறைவு செய்துள்ளது. இப்பணியில் முன்னின்று, உழைத்த அவரது ஊர்மக்களான தம்பலகமம் பொற்கேணி கிராம அபிவிருத்தி சங்கமும் அதன் தலைவருமான திரு.க. திருச்செல்வமும் போற்றப்படவேண்டியவர்களே. அனைவரையும் மனமார வாழ்த்துகின்றேன்.

நன்றி

**கலாவிநோதன். கலாபூஷணம்**
**த.சித்தி அமரசிங்கம்**

**21, ஒளவையார் வீதி,**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே........

01. கண்தழையே கந்தளாய் ஆனது
02. ஆடக சௌந்தரி
03. திருக்கோணமலையின் தெய்வீகச் சிறப்பு
04. திருமலை இராஜ்ய மன்னராக்கப்பட்டவரின் பெயர் தனி உண்ணாப்பூபாலன்
05. மழையை, வெயிலை வரவழைக்கும் கிரியை ஆராதனைகளுள்ள திருத் தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயம்
06. சுதேச வைத்தியமும் சங்கீதமும் சங்கமித்து வளர்ந்த தம்பலகமம்
07. சிவனை வழிபடும் தமிழர்களின் பூர்வீகத் தாயகமே ஈழம்!
08. பொன்னி நதிக்கரையில் அநுமார் பூசித்த ஒரேயொரு சிவஸ்தலம்
09. இனிய தமிழைக் கேட்க, எழுத இறையனார் சிவனுக்கு விருப்பம்
10. தந்தை செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடிய தனயன்!
11. நீதி காத்த பாண்டிய மன்னர்கள்
12. கவிச் சக்கரவர்த்தி நிகழ்த்திய ருசிகர விளக்க உரை!
13. அணுகுண்டு போன்றதே அருச்சுனனின் பாசுபதாஸ்திரம்
14. விசித்திரமான தேவதேவலோகம்! இந்திர பதவி அடைய போட்டா போட்டி
15. உலகப் புகழ் பெற்ற தமிழர் திருவள்ளுவர்
16. "துறவிக்கு வேந்தன் துரும்பு"
17. கர்நாடகக்கலை அருகி, அழியும் நிலை
18. கவிச்சக்கரவர்த்தி கம்பரின் களிப்பூட்டும் சிரிப்புக் கவிதைகள்
19. இராமாயணமும் மகாபாரதமும் இருகண்கள் போன்றவையே
20. சரசோதி மாலை சோதிடப் பொருநூல்
21. கூந்தலில் மலர்சூடும் பழக்கம்!
22. தன்னிடம் தோற்றவர்களின் செவிகளை அறுத்த கல்விமான்!
23. உயிர் வாழ்க்கையில் "விதி" எப்படி செயற்படுகிறது?
24. குடிமக்களே உயிர் அரசு வெறும் உடலே
25. அமெரிக்காவை கண்டு பிடித்தவர் கொலம்பஸ் அல்ல?
26. ஒரு புலவரின் மன அங்கலாய்ப்பு
27. களத்து மேட்டிலும் தேன் காட்டிலும் பொலிவை நாடும் புது வார்த்தைகள்
28. தென்றலுக்கு நிகரான கொண்டல் காற்று
29. மாசற்ற இல்வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க மகான்கள் கையாண்ட வழி
30. இராவணேஸ்வரனைப் பற்றி அவதூறு பேசுவது கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்தழையே கந்தளாய் ஆனது

பண்டையில் திருமலை இராஜ்யத்தை ஆட்சி செய்த வன்னி அரசர்கள் ஆளும் வசதி கருதித் திருக்கோணமலைப் பிரதேசத்தை மூன்று பற்றுக்களாகப் பிரித்தனர்.

மாவட்டத்தின் மத்திய பற்றின் தலைமை இடமான தம்பலகமத்துக்குத் தெற்கே பதினான்கு மைல் தூரத்தில் கந்தளாய் ஊர் அமைந்துள்ளது. இந்த ஊருக்கு பண்டைக்காலத்தில் சதுர்வேத மங்கலம் என்ற பெயர் இருந்தது. நான்மறை ஓதும் வேதியர்கள் வாழ்ந்து வந்ததால் இந்தப் பெயர் காரணப்பெயராக வந்ததாக அறிய முடிகிறது. இந்த ஊரில் பெரிய குளம் ஒன்றை அமைப்பதாக அநுராதபுர அரசி ஆடக சௌந்தரியுடன் விவாக ஒப்பந்தம் செய்து கொண்ட குளக்கோட்டு மன்னர், அரசியின் துணையுடன் இங்கு கட்டிய பெரிய குளத்துக்குத் திருக்குளம் என்ற பெயரே வழக்கில் இருந்து வந்தது.

பிற்காலம் அநுராதபுரத்தில் இருந்து அரசோச்சிய புவனேயகயவாகு என்னும் மன்னன் சமணனாக மதம்மாறி திரிசங்கபோதி என்ற மற்றுமோர் நாமத்தை பெற்றான் என்று திருக்கோணாசலப் புராணம் கூறுகின்றது.

இவ்வேந்தன் சைவ ஆலயங்களை இடித்தழிக்கும் நோக்கில் படைகளுடன் காட்டு வழியே சதுர்வேதமங்கலத்தை நோக்கி வந்தபோது, அவனது தீய எண்ணத்துக்கு தெய்வ தண்டனையாக திடீரென அவன் கண்கள் பார்வை குன்றி குருடாகியது.

மன்னனும் படைகளும் ஆறாத்துயரத்தில் ஆழ்ந்து அவ்விடத்திலேயே கூடாரமிட்டுத் தங்கினர். கவலையில் மூழ்கிக்கிடந்த அரசனின் கனவில் ஒரு முதியவர் தோன்றி உன் தீய எண்ணத்துக்குத் தகுந்த தண்டனை பெற்றாய்; ஆயினும் இறைவனைத் துதித்து தர்மசீலனான குளக்கோட்டன் அமைத்த நன்னீர்க் குளத்தில் தீர்த்தமாடினால் உன் துயர் அகலும் என்று கூறி மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெரியாரின் கூற்றுக்கமைய பக்திப்பரவசம் அடைந்த அரசன் திருக்குளத்தில் தீர்த்தமாடிய போது அதிசயிக்கத்தக்க விதமாகக் கெட்டுப்போன கண்பார்வை மீண்டும் ஒளிவீசி பிரகாசித்தது.

கெட்டுப்போன கண் தழைத்த காரணத்தால் திருக்குளம் என்று வழக்கில் இருந்த பெயர் மறைந்து கண்தழை என்ற காரணப்பெயரே வழங்கலாயிற்று.

அடுத்துள்ள சதுர்வேத மங்கலம் என்ற பெயரும் மறைந்து, கண் தழை என்ற பெயரே ஊருக்கும், குளத்துக்கும் வழங்கப்படலாயிற்று. இப்பெயரே காலப்போக்கில் திரிந்து கந்தளாய் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

நோக்கு கண் விளங்கக் கண்டநுவலரும்
கயத்துக்கன்பால்
றேக்கு கண்டழையாமெனச் சிறந்ததோர்
நாமம் சூட்டிக்
கோக்கல திலகனான குளக்கோட்டு
மன்னன் செய்த
பாக்கியம் விழுமிதென்னா வியந்தனன்
பரிந்து மன்னோ.

(திருக்கோணேஸ்வர புராணம்)

பிரமாண்டமான நீர்த்தேக்க அணைக்கட்டின் இருபுறங்களிலும் பாலை, வீரை, தேக்கு, முதிரை போன்ற மரங்கள் வானுயர வளர்ந்து அணைக்கட்டை அழகு செய்தன. அணைக்கட்டின் உச்சியில் நின்று பள்ளத்தாக்கைப் போல் தெரியும் கந்தளாய் என்ற ஊரைப் பார்த்தால் ஊரில் நெடிந்துயர்ந்து நிற்கும் தென்னைமர உச்சியில் காலைவைத்து விடலாம் போல் தோன்றும்.

இன்று இது போன்ற அரிய பல சரித்திரங்கள் மாற்றப்பட்டு விட்டன. அணைக்கட்டோரங்களில் நின்று அழகு செய்த வான் தருக்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.

பழைமையில் இந்தப்பகுதியில் இன்னொரு தெய்வீகச்சிறப்பும் காணப்பட்டது. அணைக்கட்டுக்கு பாதுகாப்பாக குளக்கோட்டனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுதலுக்கமையவே, நாராயண மூர்த்தியால் அணைக்கட்டோரம் விநாயகர் ஆலயம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்குளத்தி லிருந்து குதித்தோடி வரும் பேராறு படிப்படியாக உள்ள கற்பாறைகளில் விழுந்து சலசலத்த ஓசையுடன் ஆலயத்தை வலமாக வளைந்து அஞ்சலி செய்து செல்வது பார்க்கப் பரவசமூட்டுவதாக இருக்கும்.

ஆற்றோரம் எங்கும் பலா மரங்கள் காய்களைச் சுமந்து கொண்டு நிற்கும் காட்சி மனதிற்கு உவகை ஊட்டுவதாக இருக்கும்.

இத்தகைய அழகுமிகு இயற்கைக்காட்சிகள் இன்றில்லை. ஆலயத்தை சுற்றிவளைத்து ஓடிய ஆற்றின் கிழக்குப் பகுதியைத் தூர்த்து குடியிருப்புக்களை உண்டாக்கிவிட்டார்கள். ஒரு காலத்தில் இந்த பழம் ஊரில் வேதம் ஓதும் மறையோர்கள் வாழ்ந்ததும் அதன் காரணமாக சதுர்வேத மங்கலம் என்ற காரணப்பெயர் இருந்ததும் அடியோடு மாறிவிட்டது. நாடு சுதந்திரமடைந்த பின் துரித வளர்ச்சி அடைந்து கந்தளாய்ப் பட்டினம் என்ற பெயரே நிலை கொண்டுள்ளது.

1986 இல் கந்தளாய் நீர்த்தேக்கம் உடைத்துக்கொண்ட போது நாராயணமூர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்ட அணைக்கட்டு விநாயகர் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டாலும் சைவப்பெருமக்கள் ஆலயத்தைத் திரும்பக்கட்டி இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

கந்தளாய் நீர்தேக்கத்தை அமைத்தவன் இரண்டாம் அக்கிரபோதி என்று இலங்கைச் சரித்திரம் கூறுகிறது. ஆனால் இம்மன்னனுக்கு முன்முப்பத்திமூன்று வருடம் ஆட்சிசெய்த முதலாம் அக்கிரபோதி மின்னேரியாக் குளத்தைக் கந்தளாயுடன் இணைக்க ஒரு கால்வாயையும் வெட்டினான் எனச் சரித்திரம் முன்னுக்குப்பின் முரணாகக் குறிப்பிடுகிறது.

கந்தளாய்க் குளம் இருந்தபடியால் தானே முதலாம் அக்கிரபோதி கால்வாய் வெட்டி வந்தான் என்றும் ஆகிறது. முதலாம் அக்கிரபோதி கந்தளாய்க்கு கால்வாய் வெட்டி வந்தான் என்ற சரித்திரத்தின் கூற்று முதலாம் அக்கிரபோதியின் ஆட்சிக்கு முன்பும் கந்தளாயில் குளம் இருக்கிறது என்பதை ருசுப்படுத்துவதாக உள்ளது.

திருமலை இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருந்த சதுர்வேத மங்கலத்தை இன்றைய கந்தளாயை தென்னிலங்கை வேந்தன் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றான். அவன் வென்றரசன் என்றே அழைக்கப்பட்டான்.

ஏற்கனவே இருந்த கந்தளாய் குளத்தின் கிழக்குப்புற அணைக்கட்டுடன் தானும் ஒரு குளத்தை அமைத்தான் இவன். அந்தக்குளம் வென்றரசன் குளம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

அணைக்கட்டின் உச்சியில் நின்று குளத்தின் நீர்ப்பரப்பைப் பார்த்தால் கடல்போலவும், கட்டின் அடிவாரத்தில் நின்று அணையின் உச்சியை நோக்கினால் கட்டு பெரிய மலை போலவும் தெரியக்கூடியதாகக் குளம் பிரமாண்டமானதாக அமைக்கப்பட்டதெனக் காவியம் கூறுகிறது.

இந்தக்குளத்தின் அணைக்கட்டை முதல்முதலாக பார்ப்பவர்கள் வியப்பிலாழாமல் இருக்கமுடியாது. இயந்திர சாதனங்கள் அற்ற அந்தக்காலத்தில் இப்படி ஒரு பிரமாண்டமான அணையை அமைக்க இலட்சக்கணக்கான சனங்கள் தினந்தோறும் வேலை செய்தாலும் பல்லாயிரம் வருஷங்களாவது செல்லுமே என்ற எண்ணம் எவருக்கும் வரவே செய்யும்

இந்த அணைக்கட்டில் தம்பலகமம் ஆதிகோணேஸ்வரத்தின் சுற்று ஆராதனைகளாக வேள்வி, பொங்கல், மடை போன்ற வழிபாடுகள் பல இலட்சம் ரூபா செலவில் வருடந்தோறும் நடைபெறுவது வழக்கம்.

இந்தக்குளத்து வேள்வி ஆராதனைகளிலும், தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்திலும் ஊழியம் புரிந்து கோயிலால் மாதச்சம்பளம், வயல்மானியம் பெறும் நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட தொழும்பாளர் குடும்பங்கள் திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் பரந்து வாழ்ந்துவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடக சௌந்தரி

கி.மு. 543ம் ஆண்டில் இலங்கை மண்ணில் காலடி வைத்த சிங்கபாகுவின் மகன் விஜயன் இயக்கர் குலக்கொடியான குவேனியுடன் நட்புறவு கொண்டு அவள் துணையுடன் இலங்கையின் பூர்வீக ஆட்சியாளர்களான இயக்கர், நாகர்களைப் படிப்படியாக வென்று இலங்கை முழுவதற்கும் ஏக சக்கரவர்த்தியாக முடி சூடிக் கொண்டான்.

வரராமதேவன் என்ற சோழ மன்னன் திருக்கோண மலையிலுள்ள சுவாமி மலையின் தவப் பெருமையைப் புராண வாயிலாக அறிந்து கடல் கடந்து திருமலை வந்து சுவாமி மலையில் கோணேஸ்வரர் ஆலயத்தை அமைக்கும் திருப்பணி வேலைகளைச் செய்து வந்தான் எனத் திருக்கோணாசலப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

"அந்த நன்மொழியைக் கேளா வருங் குறளடவிற் கூறும்
முந்தையோர் எறிந்த வெற்பில் மொய்க் கதிர்குலத்து வேந்தன்
மந்திரமனையை பொற்றோன் வரராமதேவ மன்னன்
வந்திங்கு ஈசற்காக ஆலயம் அமைக்கலானான்."

தந்தை வரராமதேவன் திருமலையில் கட்டிய கோணேஸ்வரர் ஆலயத்தைத் தரிசிக்கத் தனயனான குளக்கோட்டன் படைகளுடன் திருமலை வந்தான். திருக்கோணமலைக்குத் தெற்கே உள்ள தம்பலகமத்தில் ஒரு பெரும் சிவாலயம் இடிபட்டு அழிந்து கொண்டு இருப்பதாகக் கேள்விப்பட்டான். தந்தையைப்போல் தானும் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு இருந்தவனாதலால், உடனே அங்கு விரைந்து உடைபட்ட கோயிலில் கட்டடச் சிதைவுகளைப் படைவீரர்களைக் கொண்டு அப்புறப்படுத்திக் கோயில் குடியிருப்பு என்ற இடத்திலேயே கோயிலைத் திரும்பக் கட்டி ஆலய பராமரிப்புக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களையும் தென்னந்தோப்புக் களையும் ஆக்கி இவைகளுக்கு நீர்பாய்ச்சக் குளம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற யோசனையோடு இளவரசன் அங்கு தங்கி இருந்தான்.

அனுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆளும் மனுநேய கயவாகு மன்னன் வேட்டையாடப் படைகளுடன் கரையோரப் பகுதிகளுக்கு வந்து கூடாரமிட்டுத் தங்கியிருந்தான்.

கடலில் பேழைபோன்று மிதந்து வந்து ஒதுங்கும் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்கப்பட்டதும் மன்னன் கடற்கரைக்கு விரைந்து சென்று பேழையை எடுத்து ஆவலோடு திறந்தான். என்னே அதிசயம்! பேழைக்குள் தங்க விக்கிரகம் போலக் குழந்தை ஒன்று படுத்துக் கிடப்பதைக் கண்ட அரசன், குழந்தையை வாரி எடுத்து மக்கள் செல்வம் இல்லாத வறியோனுக்கு இறைவன் வழங்கிய அருட்கொடை... என்று இயம்பி, தாமரைப் பூப்போன்ற குழந்தையின் அழகிய வதனத்தில் முத்தமிட்டான். அந்த அதிசயக் குழந்தை மன்னன் முகத்தைப் பார்த்து மகிழ்ச்சி பொங்கச் சிரித்தது. பால் மணம் மாறாப் பச்சிளம் குழவி சிரித்த காரணத்தால் மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள அந்த ஊருக்கு பானகை என்ற காரணப் பெயர் ஏற்பட்டு காலப்போக்கில் திரிந்து பாணகை என்று இன்று அழைக்கப்பட்டு வருகின்றது.

நித்திய தரித்திரனுக்கு பெருந்தனம் கிடைத்ததுபோல் மகிழ்ந்து மன்னன் கண்ணை இமை காப்பதுபோல் அரசனும், இராணியும் குழந்தையைக் கண்ணும், கருத்துமாக வளர்த்து வந்தனர். அரசர் மதியூகியான தனது பிரதம மந்திரிக்கு கடலில் வந்த இக்குழந்தை பற்றிய எல்லா விபரங்களையும் கூறியதுடன் பேழையில் கண்டெடுக்கப்பட்ட ஓலைச் சுருளையும் காட்டினார். அதில் ஆடக சௌந்தரி என்று எழுத்தாணியால் வரையப்பட்டிருந்தது. அப்பெயரே அப்பெண்ணுக்குப் பிற்காலம் பெயராக நிலைத்தது. சிறுகுழந்தையிலே சிங்கள மன்னனால் வளர்க்கப்பட்ட ஆடக சௌந்தரி தான் ஒரு சிங்களப் பெண் என்றே எண்ணி இருந்தாள். தலைமை அமைச்சர் யாவும் அறிவார்; ஆயினும், சமயம் வரும்போது சொல்லலாம் என்று எண்ணி இருந்தார். வயது முதிர்ந்த அரசர் ஆடக சௌந்தரிக்கு வரன்தேடி திருமணம் செய்து வைக்கும் பொறுப்பையும் மந்திரியிடமே ஒப்படைத்திருந்தார். மனுநேய கயவாகு காலமானதும், அவன் வளர்ப்பு மகளான ஆடக சௌந்தரி அனுராதபுர இராஜ்யத்தின் அரசு கட்டில் ஏறினாள். தம்பலகமத்தில் சைவன் ஒருவன் கோயில் கட்டுவதாக அறிந்த அரசி, தந்தையின் ஸ்தானத்திலுள்ள பிரதமரை அழைத்து, ஆலோசித்ததுடன் ஒரு படையை அனுப்பிச் சைவனை இந்தியாவுக்கு துரத்தி விடுமாறும் கேட்டுக் கொண்டாள். பிரதமர் தாமே படையுடன் போய் வருவதாகக் கூறிச் சென்றார். சேனைகளை ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு கோயில் கட்டும் இடத்திற்குத் தனித்துப்போய்க் குளக்கோட்டனைச் சந்தித்தார்.

இளவரசனின் தெய்வீகக்களை ததும்பும் முகத்தைக் கண்டதும் அரசிக்குத் தகுந்த வரன் இவர்தான் என்று எண்ணி மகிழ்ந்த மந்திரி ஆடக சௌந்தரியின் வரலாறு முழுவதையும் கூறி ஆடக சௌந்தரியை திருமணம் செய்துகொள்ள இசைந்தால், மன்னன் ஆக்க எண்ணும் குள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பைத் தானே முடித்துத் தருவதாக உறுதிகூறி விவாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அனுராதபுரம் திரும்பியவுடன் ஆடகசௌந்தரியின் தலைமை அமைச்சர், சோழ இளவரசனின் தெய்வீகக்கலை பொலியும் சௌந்தரியம், அவனுடன் குளம் கட்டித் தருவதாகத் தான் செய்துகொண்ட விவாக ஒப்பந்தம், ஆகிய முழு விபரங்களையும் மறைந்த மன்னர் தன்னிடம் ஒப்படைத்த பொறுப்பான பணிகளையும் விபரமாகக் கூறினார். எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் கேட்ட ஆடகசௌந்தரி தன் முழுச் சம்மதத்தையும் தெரிவித்தாள். புத்திசேர் அமைச்சர்களின் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் திருக்குளம் என்ற பெயரில் கந்தளாய் நீர்த்தேக்கம் பிரமாண்டமாய் அமைக்கப்பட்டது. அணைக்கட்டின் உச்சியில் நின்று பார்த்தால் குளத்தின் நீர்ப்பரப்பு பெரிய கடல்போல் தெரியும். கட்டின் அடிவாரத்தில் நின்று அணையின் உச்சியைப் பார்த்தால் அணை பெரிய மலைபோலத் தெரியும். குளம் பிரமாண்டமாக இருந்தது என்று குளக்கோட்டுக் காவியம் கூறுகின்றது.

கந்தளாய்க் குளத்தை முதன் முதலாகப் பார்ப்பவர்கள் வியப்பில் ஆளாமல் இருக்க முடியாது. இயந்திர சாதனங்கள் அற்ற பழைய காலத்தில் இரண்டு மைல்வரை, மலைபோல் அணையை அமைத்திருக் கிறார்களே! தினமும் லட்சக்கணக்கானவர்கள் வேலை செய்யினும் இப்படி ஓர் அணையை அமைக்கப் பலவருடங்கள் செல்லுமே! என்ற எண்ணம் குளத்தையும் அணையையும் பார்ப்பவர்கள் மனத்தில் எழவே செய்யும். குள அமைப்பு முடிவுற்றதும் ஒப்பந்தப் பிரகாரம் அரசரை மேள வாத்தியங்கள் முழங்க படைகள் சூழ்ந்துவர அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்று குளக்கோட்டனுக்கும் ஆடகசௌந்தரிக்கும் அமைச்சர் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து திருமணத்தை மிக விமரிசையாக நடத்தி வைத்தார். கட்டி முடிக்கப்பட்ட திருக்குளத்தைப் பார்வையிட இரு திறப்படைகளும் கடலெனச் சூழந்து வர அரச தம்பதியினர் கந்தளாய் வந்தனர். கடலென விரிந்து காணப்பட்ட குளத்தைச் சுற்றிப் பார்வையிட்டு வந்தபோது கிழக்கு அணையில் ஒரு இடம் பதிந்து இருத்தலைக் கண்ட அரசி ஆடகசௌந்தரி ஒரு கல்லைத்தூக்கி அந்தப் பதிவில் வைத்தார். அரசியைத் தொடர்ந்து வந்த நூற்றுக்கணக்கான தோழிகளும் கற்களைத் தூக்கி வைத்து உயரமாகக் கட்டினர். பெண்கள் கட்டியதால் கந்தளாய்க் குளத்துக்கு கிழக்கு அணை, "பெண்டுகள் கட்டு" என்றே இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் தெய்வீகச் சிறப்பு

இந்த நில உலகத்தில் உச்சமான உயரத்தில் சிவபிரான் உமாதேவியோடு உறையும் மகா மலைத்தலம் கைலாயம். இந்த தலத்தை விட இந்த மண்ணுலகில் உயரமான உன்னதமான வழிபாட்டுத்தலம் இல்லை என்றே கூறலாம். கடலின் மேல் மட்டத்தில் இருந்து ஆகாயத்தில் 6690 மீட்டர். 22028 அடி உயரத்தில் இமய மலையின் உச்சியில் பார்வதி சமேதரரான சிவபெருமான எழுந்தருளி உள்ள கைலாய மலை உள்ளதென வரலாறு கூறுகின்றது. அருளாளர்கள் அபூர்வமாகப் பல விதமான கஷ்டங்களை அடைந்து கைலாய யாத்திரை சென்று இறைவனையும், அம்மையையும் வழிபட்டுத் திரும்பி உள்ளனராயினும், எல்லா மனிதர்களும் சென்று தரிசிப்பதென்பது நடக்கக் கூடிய காரியமல்ல.

எனவேதான் கருணாமூர்த்தியான இறைவன் ஆதிசேடன், வாயுதேவன் இவர்களின் பலப்பரீட்சை காரணமாக கைலாய மலையின் சிகரங்களில் ஒன்றை இலங்கையின் வட கடலில் விழச் செய்து தென் கைலையாகிய திருக்கோணமலை என்ற திருப்பதியை உருவாக்கித் தந்தான் எனப் பக்திபூர்வமாகச் சைவ மக்கள் நினைவு கூருகின்றனர். திருக்கோணமலைத் தலத்தின் தெய்வீகப் பெருமையை ஒரு பிராமணன் மூலம் அறிந்து வரராம சோழன் வந்து கோயில் கட்டினான் எனத் திருக்கோணாசலப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

அந்தணன் கூற்றைக் கேட்டு அகமகிழ்ந்துவகை கொண்டு முந்தையோர் எறிந்த வெற்பில் மொய்க் கதிர்குலத்து வேந்தன் மந்திரமனைய பொற்றோள் வரராம சோழ மன்னன் வந்திங்கு கோயில் கட்டும் திருப்பணி செய்யலானான். வரராம தேவசோழர் திருமலை வரும்படலம், திருப்பணி செய்படலம் என்று திருக்கோணாசலப் புராணத்தில் நூற்றுக்கணக்கான செய்யுள்களைக் கொண்ட இரண்டு அதிகாரங்கள் இருந்தும் திருமலைக் கோணேஸ்வரர் ஆலயத்தை வரராம தேவ சோழன் கட்டியதாக இன்றுவரை யாரும் கூறவில்லை.

காரணமென்ன? வரராமதேவ சோழன் கோயிலைக் கட்டி வழிபாட்டு ஒழுங்குகளைச் செய்ததுடன், அவர் பெயர் மறைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைப் போல் தானும் ஒரு பெரிய சிவாலயம் அமைக்க வேண்டும் என்ற ஆசை கொண்டிருந்த இளவரசன், தந்தை திருமலையில் செய்யும் திருப்பணி வேலைகளைப் பார்த்து மகிழ்ந்திருந்த வேளை, தம்பலகமத்தில் ஒரு பெரிய ஆலயம் அழிந்து கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற குளக்கோட்டன், உடனே படைகளுடன் அங்கு விரைந்து கோயிலைப் புதுப்பித்துக் கட்டினான். கோயில் தயாரிப்புக்கென ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்களைத் திருத்தினான். இந்த வயல்வெளிக்கு நீர்பாய்ச்சக் கந்தளாய்க் குளத்தையும் அமைத்தான்; ஆயினும் நெற்செய்கை சிறக்க ஒரு சமயம் மழையும் இன்னொரு சமயம் வெயிலும் வேண்டுமே என்ன செய்வது? என்று குளக்கோட்டன் யோசித்துக் கொண்டிருந்தான்.

அச்சமயம் வந்த குரு வசிட்ட மகரிஷியிடம் மழை, வெயிலைக்கோரிப் பெறக்கூடிய வழிபாட்டு முறையை தெரிவு செய்து தருமாறு வேண்டினான். ரிஷி சிவாகமம் முழுவதையும் துருவி ஆராய்ந்து உருவ - அருவக் கிரியை வழிபாட்டைச் செய்யுமாறு அருளினார். இந்த வழிபாடு இரு பிரிவாகக் கோயிலிலும் வெளியிலும் செய்ய வேண்டிய கிரியைகளை உடையது. வரராம தேவ சோழன் திருமலையில் கோணேஸ்வரத்தை அமைத்ததுடன், நின்று விட்டதைப்போல் தனையனான குளக்கோட்டன் தம்பலகமத்தில் கோயில் தாபரிப்புக்காக வயல் திருத்துதல், குளம் அமைத்தல் என்று தொடர்ந்து தர்ம நீர்ப்பாசனப் பணி புரிந்ததால், இளவரசன் குளக்கோட்டனின் பெயர் மிகப் பிரசித்தம் அடைந்திருந்தது.

கோணேஸ்வரர் ஆலயத்துக்குப் பறங்கியரால் ஏற்படப் போகும் தீர்க்க தரிசன உரையைக் கூறவந்தவர், "முன்னே வரராமன் மூட்டும் திருப்பணியை" என்று தந்தை வரராம தேவ சோழன் நூற்றுக்கணக்கான செய்யுள்களில் இரு படலங்களில் உள்ள திருப்பணியைக் கூறாது, பிரசித்தமான பெயர் உடைய தனையன் குளக்கோட்டன் பெயரில் "முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை" என்று கூறியிருக்கலாம் என்றே எண்ண வேண்டி உள்ளது.

கோயிலைப் பறங்கியர் அழித்தால், பிறகு கோணேஸ்வர வழிபாடு என்ன முறையில் நடைபெறும் என்ற கேள்வி அந்தக் காலத்திலேயே எழுந்தபோது......

"மாந்தளிர் போல் மேனி உடைப்பறங்கி வந்து
மாகோணைப் பதியழிக்க வரும் அந்நாளில்
லேந்த தென்பாலக் கழனி மலை ஒன்று உண்டாங்
கீசனுக்கு ஆலயம் அமைத்துப் பின்பு"

(கோணேசர் கல்வெட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும் கோணேசர் கல்வெட்டு, பின் இலங்கையை ஆளப்போகும் அரசுகளைப் பற்றிக் கூறிவிட்டு கழனி மலையில் கோணேஸ்வரரின் உருவைக் கொண்டு வந்து வைத்துப் பூசித்துக் கொண்டு இருக்கும்போது:

"வணங்குமரன் பூசை முன் போல் நடக்கும் காலம்
மகாவிலங்கைப் பதியாளும் வாலசிங்கன்
இணங்கும் நவ ரெத்தினத்தால் பொன்னால் முத்தால்
இறைவனுக்கு ஆலயமங்கியற்றும் காலம்
சுணங்கலில்லை மானிடர்க்குத் துக்கமில்லைச்
சொல்லரிய போகமெல்லாம் துய்த்து வாழ்வார்.
(கோணேசர் கல்வெட்டு)

இந்த வாலசிங்கன் என்ற அரசன், உக்கிரசேன சிங்கனுக்கும், மாருதப்புரவீக வல்லிக்கும் மகனாக உதித்த வாலசிங்கன் பராய வயதை அடைந்து மதுரை நாட்டரசன் மகள் சமதூதியை மணந்து, கண்டியை அடுத்துள்ள செங்கடக நாட்டு மன்னனாக முடி சூடிக் கொண்டதும் ஜெய துங்கவரராச சிங்கன் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றான்.

"உக்கிரசேன சிங்கன் உதவிய சிறுவனான
மைக்கிடு களிற்றுத்தானை வரராச சிங்கமன்னன்
மிக்க சீர் இலங்கை நாட்டில் விரி கதிர்ப்பரிதியோச்சிப்
புக்கமன்றவர்கள் போற்றப் பொருவிலா தரசு செய்தான்"
(திருக்கோணாசலப் புராணம் தம்பைநகர்ப் படலம்)

திருமலைக் கோணேஸ்வரர் ஆலயத்தை 1624ஆம் ஆண்டு இந்து மக்களின் சித்திரை வருடப்பிறப்பன்று இடித்து அழிப்பதெனப் பறங்கியர் தளபதி கொனட்டாண்டீசா திட்டமிட்டு இருந்தான்.

பிரஸ்தாபக் கல்வெட்டுப் பாடல்களில் கூறி இருந்ததுபோல், கோயில் முக்கியஸ்தர்கள் தங்கள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து, இடிபட இருக்கும் கோயிலுக்குள் ஒரு இரவு புகுந்து, தாங்கள் வணங்கி வந்த கோணேஸ்வரரின் திரு உருவை எடுத்துக் கொண்டு, இரவிரவாக காட்டுவழியே தெற்கு நோக்கி ஓடித் தம்பலகமம் மேற்கு மலைத்தொடரில் உள்ள கழனி மலைச் சிகரத்தைக் கண்டு பிடித்து, அதில் கோணேஸ்வரப் பெருமானின் திருவுருவை வைத்துப் பூசித்து வந்தனர். அடர்ந்த மலைக்காட்டில் சுவாமிக்கு நைவேத்தியம் வைக்க அரிசி இல்லாமல் அந்த மலைக் காட்டிலுள்ள ஒரு வகைக் கிழங்கைப் பிடுங்கி அவித்துச் சுவாமிக்கு நைவேத்தியம் வைத்துத் தாங்களும் உண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காட்டுக்கிழங்கு, "கோணா மலைக் கிழங்கு" என்ற காரணப் பெயரைப் பெற்றது. சுவாமியின் உருவை வைத்துப் பூசித்த மலைச்சிகரம் "சுவாமி மலை" என்றே அழைக்கப்படுகின்றது. இந்த மலை அடிவாரம் வரை பெரும்பான்மையினர் குடியேறி வாழ்வதாக தெரிகிறது.

இந்து மக்களின் வழிபாட்டுக்குரிய சுவாமிமலைப் பகுதியின் மிகுதியை மீட்டெடுக்க வழி இல்லாது இருப்பது வருந்துவதற்குரியது. திட்டமிட்டபடியே பறங்கியர்கள் 1624 ஆம் ஆண்டு திருமலைக் கோணேஸ்வரர் ஆலயத்தை இடித்து அழித்தார்கள். தம்பலகமத்தில் குளக்கோட்டனால் கட்டப்பட்ட கோணேஸ்வரர் ஆலயத்தையும் சமூகவிரோதிகள் அழித்தார்கள். திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து கோணேஸ்வரர் வழிபாடு அருகி மறைந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்ட காலப்பகுதியில் செங்கடக நாட்டு மன்னர் ஜெயதுங்க வரராசசிங்க மன்னன் கனவில், கோணேஸ்வரப் பெருமான் தோன்றி இட்ட ஆணைக்கமைய, அம்மன்னனால் தம்பலகமம் கோயில் குடியிருப்பில் இருக்கும் ஆதி கோணேஸ்வரர் ஆலயம் நானூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது என்று ஸ்தல புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

"கன்னல வேலி வரம்படுத்த கழனி சூழ்த்த தம்பைநக
ரென்னும் நாட்டில் இலங்கு மணிப் பொன்னாலயமும்
சொன்ன முறையிற்றான மைத்துத் தூய பூசை தேர்ந்திருந்தாள்
மன்னவ நீ செய்கென அருளி மறைந்தான் கோணமலை நாதன்"
(திருக்கோணாசல புராணம் - தம்பை நகர்ப்படலம்)

குளக்கோட்டு மன்னர் உருவ, அருவ வழிபாடாக கோயில் பூசை வழிபாடுகள் நடைபெறச் செய்திருந்தது போலவே ஆலயம் அமைத்த ஜெயதுங்க வரராச சிங்கன் தொழும்பு முறையை நிரைப்படுத்தி முன் போலவே கிரியை வழிபாடுகள் நடைபெறச் செய்தான்.

திருக்கோணமலைக் கோணேஸ்வரர் ஒரு முறை பறங்கியரால் அழிக்கப்பட்டது. தம்பலகமத்தில் எழுப்பப்பட்ட கோணேஸ்வரம் இரு முறை அழிந்து மீண்டும் கட்டப்பட்டுள்ளது. அழித்தாலும் அழியாத ஒரு தெய்வீகச் சிறப்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

"ஒன்றினையழிக்க ஒன்று தோன்றிய அற்புதத்தால்
இன்றைய உலகில் கோணைப்பதிகங்களுக்குவுமையுண்டோ
மான்கன்றினைக் கரத்தில் ஏந்தும் கடவுளின் கருணை வேண்டிவ்
சென்று போய்க் கோணைநாதன் சேவடி போற்றல் செய்வோம்"
(திருச்சிற்றம்பலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை இராஜ்ய மன்னராக்கப்பட்டவரின் பெயர் தனி உண்ணாப்பூபாலன்

ஆதியில் வாயுதேவனால் பறித்து வீசப்பட்ட கைலைமலைச் சிகரங்களில் ஒன்றே திருக்கோணமலை என்பதை வரராமதேவ சோழன் அறிந்தான். இம் மன்னன் முக்கிய கட்டிடப் பொருள்களுடன் திருக்கோணமலை வந்து, தங்கி, சுவாமி மலையில் கோணேஸ்வர ஆலயத்தை அமைத்து வழிபாடு நடைபெற எல்லா ஒழுங்குகளையும் செய்துவிட்டு அரசன் நாடு திரும்பினான். அரசனின் குமாரன் குளக்கோட்டன் தந்தையைப் போல் தானும் சிவாலயங்களை அமைக்க வேண்டும் என்ற மேலான எண்ணமுடையவன்.

பிற்காலம் இளவரசன் கோயிலும், குளமும் அமைத்ததால் இந்த அரசனுக்குக் குளக்கோட்டன் என்று பெயர் வந்திருக்கலாம் என்று சிலர் கருதினாலும், குழந்தைக்கு நெற்றியில் கொம்பு போன்ற சதைத் திணிவு காணப்பட்டதால் தந்தை வரராம தேவசோழன் மகிழ்ந்து குழந்தைக்குக் குளக்கோட்டன் எனப் பெயர் சூட்டியதாகப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

"பூமகள் செழிக்க வரு பொற்புறுமகற்கு
வாமநுதல் மேலுலவை வாய்த்திரு நவத்தால்
கோமகன் மகிழ்ந்து குளக்கோட்ட
னெனவேயோர்
நாமகரணம் பொலிய நன்கு புனைவித்தான்
திருகோணாசலப்புராணம்.

தந்தை வரராம தேவசோழன் திருமலையில் செய்த திருப்பணியைத் தரிசிக்கத் தனையனான சோழ கங்கன் என்ற குளக்கோட்டன் படைகளுடன் கடல் கடந்து கி.பி. 436ஆம் ஆண்டு திருமலை வந்தான். அடுத்துள்ள தம்பலகமத்தில் கோணேஸ்வரர் ஆலயம் கலகக் காரர்களால் உடைக்கப்பட்டுக் கிடப்பதாகக் கேள்விப்பட்ட குளக்கோட்டன் அங்கு விரைந்து கோயிலை அவ்விடத்தே சிறக்கக் கட்டி நிர்வகிப்புக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தி அனுராதபுரத்து அரசியின் தலைமை அமைச்சருடன் விவாக ஒப்பந்தம் செய்து கொண்டான்.

அவரைக் கொண்டு சதுர் வேதமங்கலத்தில் திருக்குளம் என்ற பெயரில் பெரிய குளத்தையும் அமைப்பித்தான். ஆனாலும் நெற்செய்கை சிறக்க ஒரு சமயம் மழையும் இன்னொரு சமயம் வெயிலும் வேண்டுமே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு வேந்தன் தம்பலகமத்தில் தங்கி இருந்தான்.

அதிஷ்டவசமாக அரசனை காண்பதற்காய் அவன் குல குரு வசிட்ட மகாரிஷி அங்கு வந்தார். குருவைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த குளக்கோட்டன் அவர் அடிதொழுது நெல் செய்கையாளர் வேண்டும்போது மழை, வெயிலை அருளும் ஒரு சிவ வழிபாட்டு முறையைத் தெரிவுசெய்து தருமாறு வேண்டினான்.

சிவாகமம் முழுவதையும் துருவி ஆராய்ந்து, முனிவர் பெரும் பணச் செலவும், அதிகமான மனித உழைப்பும் வேண்டியிருப்பதால் உலகத்தில் மிக அரிதாக அனுஷ்டிக்கப்படும் உருவ அருவ கிரியை வழிபாட்டை அனுஷ்டித்து வந்தால் மழை, வெயிலை வேண்டி பட்டு நோ்ந்து கிரியை ஆராதனை செய்தால் கிடைக்கும் என அரசனுக்குக் கூறினார். இந்த உருவ அருவ வழிபாடே திருத்தம்பலகமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்று வருகிறது.

கோயிலுள் நடைபெறும் பூசை, அபிஷேகம், வருடாந்த உற்சவ விழா ஆகியன உமா பங்கரான கோணேஸ்வரருக்கும் பரிவார தெய்வங்களுக்குமான உருவ வழிபாடுகளாகும். கந்தளாய்க் குளத்து அணைக்கட்டில் லட்சக்கணக்கில் பணம் செலவாகும் மகாவேள்வி, நெரிஞ்சித் தீவு வேள்வி, தம்பலகமம் நாயன்மார்திடல் வைரவத்தடியில் குழுமாடு கட்டி நடைபெறும் வேள்விகள், கள்ளிமேட்டு மைதானத்தில் நடைபெறும் பத்தினித்தேவி விழா, மாகமத்தில் நடைபெறும் மூக்காம்பிகை விழா ஆகியன உருவ வழிபாடுகளாகும்.

லட்சுமி நாராயணனுக்கும் காவல் தெய்வங்களுக்கும் ஆண்டுக்கு ஒன்றாக திறந்தவெளி வழிபாட்டு இடங்களில் நடைபெறுவது அருவ வழிபாட்டுச் சுற்று ஆராதனைகளாகும்.

திருமலையில் கோயில் அமைத்த வரராமதேவ சோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டு வரமுடியாமல் இருந்ததால், திருமலை தம்பலகமம் கோணேஸ்வரங்களைக் குளக்கோட்டு மன்னரே பார்த்துப் பரிபாலித்து வந்தார்.

தம்பலகமம் ஆலயம் உருவ அருவ வழிபாடுகள் என இரண்டு வழிபாடுகள் உடையது. ஆகையால் தொழும்பு செய்வோர் தொகை 50 பேர்களுக்கு மேல் இருந்தனர். இவர்களுக்கிடையே குறிப்பாக தானம். வரிப்பற்றுத் தொழும்பாளர்களுக்கிடையே பிணக்குகள் ஏற்பட்டு வந்தன. இவர்கள் பிணக்குகளைத் தீர்த்து கோயில் நிர்வாகங்கள் சரியாக நடைபெற திருமலை இராஜ்யம் என்றொரு தர்ம அரசை நிறுவிக் குளக்கோட்டு மன்னர் பாண்டிநாடு சென்று மதிக் குலத்துதித்த பாண்டிய இளவரசனை அழைத்து வந்து திருமலையைத் தலைநகராகக் கொண்டு தாம் நிறுவிய திருமலை ராஜ்ய மன்னராக அரசு கட்டில் ஏற்றி "வன்னிமை" என்ற சிறப்புப் பட்டத்தையும் ஈந்தார். அந்த அரச குமாரன் இயற்பெயர் தனி உண்ணாப் பூபாலன்.

குளக்கோட்டு மன்னர் இந்த அரச குமாரனை திருமலை இராஜ்ய மன்னராக அரியணை இருத்தி வழங்கிய சிறப்புப் பட்டம் 'வன்னிமை' எல்லாமாகச் சேர்ந்து திருமலை இராஜ்ய மன்னரின் பெயர் தனி உண்ணாப் பூபாலன் இன்பம். இந்த அரச குமாரர் தென் இந்தியாவில் போராடுவதில் வல்லவர்களாக இருந்து இலங்கை வந்து வன்னிப் பிரதேசத்தை சுதந்திரமாகச் சிறப்புடன் ஆட்சிசெய்த பண்டார வன்னியன் போன்ற அரச வம்சத்தைச் சார்ந்தவரல்ல, இவர் மதிக்குலத்தில் வந்தவர். திருமலை இராஜ்யம் என்ற தர்ம அரசை தனி உண்ணாப் பூபால வன்னிமை அரசன் ஆட்சிசெய்தான். ஆலோசனை கூறக் கனக சுந்தரப்பெருமாள் போன்ற தூயோர் இருந்தனர். அரசனுக்குக்கீழ் 32 தலைமைக்காரர்கள் இருந்தனர். அரசுக்கு சிறப்பம்சமாக விளங்கும் படையைப் பற்றிக் கோணேஸ்வரர் கல்வெட்டில் செய்தி எதுவும் இல்லை. தொழும்பானர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் தர்ம அரசை நிர்வகிக்கும் அரசருக்குப் படைபலமும் தேவையும் இல்லை. இதில் ஒரு புனிதமும் காணப்படுகின்றது. நாடுபிடித்தாள்வதை இலட்சியமாகக் கொண்ட அரச மரபில் வந்தவர் குளக்கோட்டு மன்னர். இதுகாலவரையும் அந்த எண்ணமே இன்றித் தர்மகாரியங்களைச் செய்தாலும் இப்போது திருமலையில் ஒரு அரசைத் தோற்றுவிக்கிறார். அந்த அரசையும் தான் ஆளாமல் மதுரை சென்று மதிக்குலத்தில் உதித்துக் குணச்சிறப்பால் மதி போல் ஒளிவீசும் தனி உண்ணாப்பூபாலனை அழைத்து வந்து வன்னிமை என்று சிறப்புப் பட்டமீந்து அரச கட்டில் ஏற்றி வைக்கின்றார். குளக்கோட்டனின் தர்மசிந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே! என்று வியக்க வேண்டி உள்ளது.

இந்த அரச குமாரனை தனி உண்ணாப் பூபாலன் என்று பெயர் குறிப்பிடுகின்றதே அது என்ன? சாதாரண மனிதர்கூட உணவை மறைவில் வைத்துச் சாப்பிடத்தான் விரும்புகிறார்கள். இந்த அரசகுமாரன் பலருடன் பந்தியாக இருந்து சாப்பிடும் மேன்மைக் குணம் உடையவனோ? குளக்கோட்டன் அப்பழுக்கற்ற தர்மவான் அவன்கொணர்ந்து திருமலை இராஜ்ய மன்னனாக அரசாள வைத்த பாண்டிய இளவரசன் எப்படிஎனில் இரு தர்ம சீலர்களின் இணைவு சக்கரைக் கட்டியை கற்கண்டு தேடிச் சென்று இணைந்து கொள்வது போல் இருக்கிறது. திருக்கோணமலைக்குப் பக்கத்திலே திருத்தம்பலகமம் இருக்கிறது.

உதாரணமாக தம்பலகமத்தில் செய்கை பண்ணிய மாரி வேளாண்மை அற விளைந்து விட்டது; ஆயினும் அறுவடை செய்ய முடியாமல் ஒவ்வொரு நாளும் பிற்பகலில் இருந்து மழை. கோயிலின் தற்கால அர்ச்சகர்கள் புதியவர்கள். வெயிலைக் கோரிப்பட்டுச் சாத்தி வழிபாடு செய்யும் கிரியை ஆராதனை இருந்தும் ஏனோ செய்யவில்லை.

மழை தொடர்ந்து மாரிகாலம் போல் பெய்து வந்தது. இந்த நிலை கண்ட சில பெரியவர்கள் முயற்சியால் கோணேஸ்வரப் பெருமானுக்குச் சிகப்புப் பட்டுச் சாத்தி வரட்சி வெட்டாப்பை அருளுமாறு கிரியை செய்தனர். அதிசயிக்கத்தக்கவாறு அன்றுடன் மழைநின்று அறுவடை தொடங்கி முடிவுறும் நிலையில் உள்ளது. இது போன்ற எத்தனையோ பிரார்த்தனை அதிசயங்கள் இங்கு நிகழ்ந்துள்ளன. திருமலைக் கோயில், பக்குவநிலை அடைந்த பெரியார்களுக்கு முக்திப்பேறை அருளும் மகா மலைத்தலமாகவும் தம்பலகமம் கோணேஸ்வரமே மழை, வெயில் மற்றும் பொருள்களை மனிதர்களுக்கு அருளும் தலமாகவும் இருக்கும் என்று நூல்கள் கூறியது போலவே கிரியை ஆராதனைகளுக்கு ஆச்சரியகரமான முறையில் பலன் கிடைத்தும் வருகின்றன. தர்ம சீலரான குளக்கோட்டு மன்னர் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களையும், நூற்றுக்கணக்கான தென்னஞ்சோலைகளான வளவுகளையும், தங்க ஆபரணமான பொருள்களையும் தேடி வைத்திராவிடில் மாதம் பல ஆயிரக்கணக்கான ரூபா பெருஞ்செலவுடைய தம்பலகமம் கோணேஸ்வர ஆலய வழிபாடு முட்டின்றித் தொடர்ந்து நடைபெற முடியாது. ஆலயத்தில் இருந்து ஒரு சிறிய துரும்பை வெளியில் கொண்டு போய்ப் போடுபவரும் வயல் மானியமோ, மாதச் சம்பளமோ பெறுபவராக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இந்த ஆலயத்தில் அனுஷ்டிக்கப்படும் உருவ அருவ வழிபாடுகளான இரண்டு வழிபாடுகளிலும் தொழும்பு செய்வோர் அதிகமாக உள்ளனர். இவர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கவே திருமலையைத் தலைமை இடமாகக் கொண்டு திருமலை இராஜ்யம் என்ற தர்ம அரசை நிறுவ வேண்டிய நிலை குளக்கோட்டு மன்னருக்கு ஏற்பட்டது.

இந்த அரசைக்கூடத் தாம் பரிபாலிக்காமல் மதுரை சென்று மதிக்குலத்துதித்த மதியேபோலச் சிறப்புடைய தனி உண்ணாப் பூபாலன் என்ற பாண்டிய இளவரசனை அழைத்து வந்து வன்னிபம் என்ற சிறப்புப் பட்டமீந்து அரசு கட்டில் ஏற்றி வைத்தார் என கோணேசர் கல்வெட்டுக் கூறுகிறது.

தான் நிறுவிய அரசில் வேறொருவரை அரசனாக்கிய குளக்கோட்டு மன்னரின் இந்த அளப்பரிய செயல், பாரதத்துக்குச் சுதந்திரம் பெற்றுத்தர பிரிட்டிஷாருடன் முழு மூச்சாகப் போராடிய மகாத்மா காந்தி சுதந்திரம் கிடைத்த பின் அதில் பங்கு கொள்ளாமல் விலகிக் கொண்டதை நினைவூட்டுகின்றது.. திருமலை இராஜ்யம் தனி உண்ணாப்பூபால வன்னிமை அரசு பரம்பரை காலப் போக்கில் அருகிக் குறைந்தது.

இந்த அரச மரபினரில் சிலர், பிற்காலம் தம்பலகமம் தெற்கில் வாணமேட்டுக்கு அருகில் உள்ள பகுதியில் வாழ்ந்து வந்தனர். அந்த இடம் இன்னும் வன்னிச்சியார் திடல் என்றே அழைக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையை, வெயிலை வரவழைக்கும் கிரியை ஆராதனைகளுள்ள திருத்தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயம்

திருமலையில் கோயில் கட்டும் தந்தை வரராமசோழ மன்னனைப்போல், தானும் ஒரு சிவாலயம் கட்டவேண்டும் என்று நெடுநாட்களாக எண்ணி இருந்த தர்மசீலனான குளக்கோட்டன் திருத் தம்பலகமம் கோயில் குடியிருப்பில் கோயிலை சிறக்கக் கட்டி கோயில் நிர்வகிப்புக்காக ஆயிரக் கணக்கான ஏக்கர் நெல் வயல்களையும், திருத்த வளவுகளையும் ஆக்கி அனுராதபுரத்து அரசி ஆடகசௌந்தரி அரசியின் தலைமை அமைச்சருடன் விவாக ஒப்பந்தம் செய்து கொண்டு, அரசியின் தலைமை அமைச்சரைக் கொண்டு கந்தளாயில் பெரிய நீர்த்தேக்கத்தையும் அமைத்தான். தாம் திருத்திய வயல்கள் நன்றாக விளைந்ததால்தான், தான் கட்டிய ஆலய பூசை வழிபாடுகள் குறையின்றி நடைபெற முடியும். நெற்செய்கை சிறக்க ஒரு சமயம் மழையும், இன்னொரு சமயம் வெயிலும் வேண்டும். சிவாலயங்களில் மிக உயர்ந்த பிரம்ம நிலையில் அமர்ந்திருக்கும் இறைவனிடம் பக்குவ நிலையடைந்த பெரியோர்கள் முத்திப்பேற்றைக் கோர முடியுமேயன்றி பொன், பொருள்கள், மழை, மாடு, கன்றுகள் என்று உலகப்பொருள் களைக் கோரமுடியாதே என்று எண்ணினான்.

இளவரசனின் மேலான எண்ணத்துக்குத் தெய்வானுகூலம் கிடைப்பதைப் போல் அவன் குல குருவான வசிட்டமகாரிஷி அரசனைச் சந்திப்பதற்காக அங்கு வந்தார். குருவைக்கண்டு மட்டற்ற மகிழ்சி அடைந்த குளக்கோட்டு மன்னன் அவர் அடி தொழுது தன் நிலையை உணர்த்தி நெற்செய்கையாளர் வேண்டும் போது வெயிலையும், மழையையும் அருளும் சிவவழிபாட்டு முறையை ஆக்கித்தருமாறு வேண்டினான். அரசனின் வேண்டுதல் அருந்தி கேள்வனைச் சிவாகமம் முழுவதையும் துருவி ஆராய வைத்தது. மன்னன் கேட்டுக் கொண்டதைப் போல் சிவகாமத்தில் சிவ நாராயணவழிபாடு இருப்பதைப் பார்த்தார். பெருந்தொகையான பணமும், அதிகமான தொழும்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழும்பாளர்களின் உழைப்பும் வேண்டி இருப்பதால் மனிதர்கள் இந்த வழிபாட்டை அனுஷ்டிப்பதில்லை என்பதையும் அறிந்தார். ஆயினும் குளக்கோட்டன் ஓர் அரசன். இந்த வழிபாட்டை அனுஷ்டித்துப் பயன் பெறச் செய்ய முடியும் என்று எண்ணிய முனிவர் அரசனைப் பார்த்து,

''அன்புடன் இரங்கும் வேந்தை அருந்ததி கொழுனன் நோக்கி இன்புற ஆசி கூறி நீ எண்ணிய படி ஆகுமென்றான்......''

(திருக்கோணாசலப்புராணம்)

இந்தப் புராணம் திருக்கோணமலை திருத்தம்பலகாமம் ஆதி திருக்கோணேஸ்வரங்களின் பொது ஸ்தலபுராணம் திருமலைக் கோணேஸ்வரம் பற்றிக் கூறுவது போலவே, இப்புராணத்திலுள்ள தம்பை நகர்ப்படலம் என்ற அதிகாரம் திருத்தம்பலகமம் ஆதிகோணேஸ்வரம் பற்றி விரிவாக எடுத்துக் கூறுகிறது. தம்பலகமத்தின் வளச் சிறப்பைப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது.

''கரியகுவளைத் தளிர்மேய்ந்து கடைவாயால் அசை போடுகின்ற எருமை கிடந்து மூச்செறியும் எழிலார் தம்பை வளநாட்டில்'' என்று ஊரின் நீர்,நில வளச் சிறப்பைச் சிலாகித்துக் கூறுகின்றது. திருத்தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் கோயில் வழிபாடு உலகிலுள்ள சிவாலய வழிபாடுகளுக்கு வித்தியாசமான முறையில் உருவ, அருவ வழிபாடுகளாக இரு பிரிவாக உள்ளன. ஆதிகோணேஸ்வரர் ஆலயத்துள் நடைபெறும் பூசை, அபிசேகம், ஆண்டுகொடியேற்ற உற்சவ விழா ஆகியவைகள் உமாபங்கரான ஆதி கோணேஸ்வரருக் கும், பரிவார தெய்வங்களுக்கும் நடைபெறும் உருவ வழிபாடுகளாகும்.

ஆலயகொடியேற்ற உற்சவ விழாவை மையமாகக் கொண்டு வருடம் ஒன்றாக நடைபெறும் நியதி உடைய கந்தளாய்க்குளத்து அணைக்கட்டில், லட்சுமி நாராயண திருமண வைபவமாக நடைபெறும் மகா வேள்வி இயற்கை அழகு மிக்க குளத்தை நிறைக்கும் பொட்டியன் ஆற்று முகத்துவாரத்தில் மேள, தாளச் சீர்களுடன் கன்னிக்கால் நட்டு, பல கொட்டகைகள் அமைத்து மாதக்கணக்கில் நாராயண மகாலட்சுமி திருமண விழாவாக நடைபெறும். இவ்விழாவுக்கு இரவும், பகலும் வரும் மக்களை கொட்டகைக்குள் வெள்ளை விரித்து பந்தியாக இருத்தித் திருமணச் சாப்பாடு வழங்கப்படும். அடுத்து தம்பலகமம் நாயன்மார் திடல் மடை வைபவம், மூன்றாம் வருடம் கள்ளிமேட்டு ஆலையடி மைதானத்தில் கொட்டகைகள் அமைத்து கோவலன் கண்ணகி திருமண விழா விமரிசையாக நடைபெறும். அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகமம் கிழக்கிலுள்ள மாகமத்தில் மூர்க்காம்பிகா விழா நடைபெறும். திறந்த வழிபாட்டு இடங்களில் நடைபெறும் இவ் விழாக்கள் லட்சுமிநாராயணனுக்கும், காவல்த் தெய்வங்களுக்கும் நடைபெறும் இவ் விழாக்கள் அருவ வழிபாடுகளாகும். இந்த அருவ வழிபாடுகள் ஒவ்வொன்றுக்கும் கோயில் பணம் மூன்று, நான்கு லட்சம் ரூபாய் வரை செலவிடப்பட்டு வருகின்றன. இந்த ஆலய உருவ அருவ வழிபாடுகள் தொடர்ந்து குறையின்றி நடைபெற்று வந்தால் விளைவு பெருகி மக்கள் நிதம் போகப் பெரு மகிழ்சியுடன் வாழ்வார்கள் என்றும், சொன்ன முறையில் இந்த உருவ அருவ வழிபாடுகளைச் செய்யாமல் ஏனோ தானோ என்று இருந்து வந்தால் விளைவழிந்து மக்கள் துயருற்றுச் சோருவார்கள் என்றும் கோணேஸ்வர கல்வெட்டுச் செய்யுள் பின்வருமாறு எச்சரிக்கைச் செய்கிறது.

''அன்னவரன் பூசை அபிஷேகம் விழா முதலியன அழகாய்ச் செய்தால் மின்னு நிறை விளக்கேற்றிக் கிராம தேவதை பூசை விளங்கச் செய்தால் இன்னலின்றி மக்களெல்லாம் இரு நிதி சந்ததியுன் இனிதாய் வாழ்வார் சொன்ன இந்த முறை தவறின் விளைவழிந்து துன்பமுற்றுச் சோருவார்கள். ''காய்ச்சலுக்கு ஒரு மருந்து, தலையிடிக்கு இன்னொரு மருந்து, வயிற்று வலிக்கு இன்னொரு மருந்து என்று வைத்திய சாத்திரம் கூறுவது போல் திருத்தம்பலகமம் ஆதிகோணேஸ்வரர் வழிபாட்டில் கிரியை ஆராதனைகள் உள்ளன. கோணேஸ்வரருக்குப் பச்சைப்பட்டு சாத்தி, மழையைக் கோரி, ஆராதனை செய்துசாதாரண மழையை வரவழைத்தல், வெயில்கோரி சிவப்புப் பட்டு நேர்ந்து, ஆராதனை செய்தல். கந்தளாய்க் குளம் வரண்டு கிடந்தால் அணைக்கட்டில் கால் நாட்டி மகாவிஷ்ணு மூர்த்திக்கு மாவேள்வி செய்து தொடர் மழையை வரவழைத்துக் குளத்தை நிரப்புதல், குளம் உடைத்துக் கொள்ளும் அபாயம் ஏற்படின் தத்துவங்கண்டி என்ற இடத்தில் வரட்சியைக் கோரி பல நாள் யாகம் செய்து முடிவு நாள் அன்று தங்கக் குண்டு போட்டு கெட்டித்த தோட்டாவை துப்பாக்கியில் இட்டு யாகத்தை நடத்தி வைத்த கட்டாடி என்ற பூசகர் குளத்து நீருக்கு மேலால் வேட்டுத்தீர்த்தல் போன்ற கிரியை ஆராதனைகளை அனுஷ்டித்த காலங்களில் ஏற்பட்ட அற்புத பலன்களைக் கண்டு நாஸ்தீக மனப்பான்மை உடையவர்களும் வியப்பில் ஆழ்ந்தனர் என்றால் அது மிகையாகாது. இராமபிரான் அவதரித்த அயோத்தியில் வாழ்ந்த சுவாதியம்மை என்னும் பிராமண மாதின் புத்திரர்கள் என்று கூறப்படும் மங்கலர்கள் என்ற நூற்றியொரு வாலிபர்கள் காடுகளில் புகுந்து யானைகளை அடக்கி குழு மாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து விளையாடி வீரசாகசங்கள் புரிந்து இலங்கை வந்தனர் என்று மங்கலர் காவியம் கூறுகிறது. இந்த வீரச்சகோதரர்கள் தம்பலகமம் நாயன்மார்திடலில் உள்ள ஒரு வாகைமரக்கன்றின் நிழலில் இருந்து இளைப்பாறினர். பின் பக்கத்தே உள்ள திடலில் தங்கி இருந்து ஆயுதபாணிகளாக மகாவலி கங்கையை அடுத்துள்ள காடுகளில் அலைந்து குழு மாடுகள் பிடித்து வந்து நாயன்மார்திடலில் கட்டி அந்த இடத்தில் இடம் பெற்று வந்த நாராயண அருவ வழி பாட்டில் கலந்து கொண்டனர் என்று மங்கலர் காவியம் என்ற செய்யுள் நூல் கூறுகின்றது.

இங்கு வீசிய புயலில் பெரிய மராமரங்களெல்லாம் அடி சாய்ந்துள்ளன. ஆனால் மங்கல வீரர்கள் வந்து நிழலுக்கு இருந்து இளைப்பாறிய வாகங்கன்று புயலுக்கு அசைந்து கொடுக்காமல் பெரிய மராமரமாய் வளர்ந்து கிழடு தட்டிய நிலையில் நாயன்மார்திடலில் இன்றும் நிற்கிறது. இந்தத் தொகையான வீரர்கள் தங்கியிருந்த இடம் அண்ணன்மார் திடல் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வீரர்கள் கையாண்ட பழைய கால ஆயுதங்கள் அடங்கிய ஆயுதப் பெட்டகம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்துள் இருக்கிறது. தர்ம சீலனான குளக்கோட்டன் குளமும், கோயிலும் கட்டியதால் குளக்கோட்டன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டாலும் பிறக்கும் போதே நெற்றியில் கொம்பு போன்ற அவயவம் தென்பட்டதால் தந்தையான வரராமதேவனே அப்பெயரைச் சூட்டினார் என்று திருகோணசலப் புராணத்தில் உள்ள ஒரு அதிகாரம் பின்வருமாறு கூறுகிறது.

"பூமகள் செழிக்க வகு பொற்புறு மகற்கு
வாம நுதல் மேலுலவு வாய்த்திடு நலத்தால்
கோமகன் மகிழ்ந்து குளக்கோட்டனெனவேயோர்
நாம காரணம் பொலிய நன்கு புனைவித்தான்"

திருக்கோணமலை நகருக்குத் தெற்கே பதின்மூன்று மைல் தூரத்தில் ஆதிகோணேஸ்வரர் ஆலயம் என்ற மகாதலம் இருக்கிறது. அருவ வழிபாடு ஒவ்வொன்றும் சுவைமிகுந்த பெரிய கட்டுரைகளாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வைத்தியமும் சங்கீதமும் சங்கமித்து வளர்ந்த தம்பலகமம்

இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகச் சிவவழிபாடு நடைபெற்று வரும் தெய்வீகச் சிறப்பு உள்ளதால் ஊர் பெயருக்கு முன்னால் ''திரு'' என்ற சிறப்பும் சேர்ந்து திருத்தம்பலகமம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

மிகுந்த அருள் சிறப்புடைய மகாதலங்களுக்கே ஸ்தல புராணம் இருக்கின்றது. திருத்தம்பலகமம் கோணேஸ்வரர் ஆலயத்துக்கு ஸ்தல புராணம் இருப்பதுடன் தம்பலகமம் ஊருக்கும் புராணம் இருக்கிறது.

திருக்கோணமலைக் கோணேஸ்வரத்தின் ஸ்தல புராணமான திருக்கோணேசலப்புராணமே தம்பலகமம் கோணேஸ்வரத்தின் புராணமாகவும் இருக்கிறது. இப்புராணம் திருக்கோணமலை நகரச் சிறப்பு, கோணேஸ்வரம் திருக்கோணமலைக்கு வந்த விபரங்கள், கோணேஸ்வரத்தின் தெய்வீக அருள் சிறப்பு போன்றவைகளைக் கூறுகிறது. அத்துடன் திருக்கோணாசலப் புராணம் ''தம்பை நகர்ப்படலம்'' என்ற அதிகாரத்தில் தம்பை நகரின் வளச்சிறப்பு, தம்பலகமம் ஆதி கோணேஸ்வரத்தின் அருள் சிறப்பு, வழிபாட்டுமுறை போன்றவைகளை விபரமாகக் கூறுகிறது.

ஆகவே திருக்கோணமலை, தம்பலகமம் கோணேஸ்வரங்கள் இரண்டுக்கும் பொதுவான ஸ்தல புராணம் திருக்கோணேசலப் புராணம் என்பது தெரிய வருகிறது. கோணேஸ்வரம் பற்றிய நூல்கள் தம்பலகமத்தை தம்பை நகர் என்றே கூறுகின்றது. திருக்கோணேசலப் புராணம் தம்பை நகர்ப்படலத்திலுள்ள ஒரு பாடல் பின்வருமாறு:-

''கரிய குவளைத் தளிர் மேய்ந்து
கடைவாயால் அசைபோடுகின்ற
எருமை கிடந்து மூச்செறியும் ஏழி
லார்தம்பைவளநாட்டில்''

இப்பாடல் தம்பை நகர்ப் பிரதேசத்திலுள்ள நீர்வள நிலச் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றது. இப்பாடல் குறிப்பிடும், நில நீர்வளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய தம்பலகமத்தை ஒத்ததாக உள்ளதால் பழைய தம்பை நகரின் தெற்குப் பகுதி என்று தம்பலகமத்தைக் கூறலாம்.

தம்பை நகரின் நகரப் பகுதி எங்கே? என்றுதான் தேடவேண்டி உள்ளது. இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் கப்பல் துறைக் கடலைக் கடல் துறையாகக் கொண்டு இலங்கையின் சரித்திர தொடக்க காலத்துக்கு முன் தம்பை நகர் பெரிய வணிக நகராக இருந்தது.

மனித வாழ்க்கையில் பொருள் வகிக்கும் முக்கியம் கருதிப் பெரியோர்கள் புகன்ற அறிவுரைக்கேற்ப தம்பை நகர்த் தமிழ் வாலிபர்கள் தங்கள் கடல் துறையான கப்பல் துறைக்கடலில் இருந்து மரக்கலங்களின் வழியாக தாம் வங்கப் பெருங்கடலைக் கடந்து வேறு நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி வந்தனர்.

தென்பாரதத்தில் நடந்த புறநானூறு சம்பவங்கள் இங்கும் இடம்பெற்றன என அறியக் கிடக்கின்றது.

இப்படித் தமிழ்ச் சைவர்களின் வாழ்விடமான தம்பை நகரில் கலகங்கள் ஏற்பட்டு உயிர் இழப்புக்கள் அதிகரித்து வந்ததால் பலர் அங்கு வாழ முடியாத சூழ்நிலை ஏற்படவே வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர்; எனினும் ஒரு பிரிவு மக்கள் தங்கள் பிரதேசத்தை விட்டுப்போக மனமில்லாமல் தெற்குப் பகுதிக்கு வந்து வடக்கே பால்துறைக் கடல்வரை உள்ள தாழ்ந்த பிரதேசத்திலுள்ள திடல்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இதுவே இன்றைய தம்பலகமம் என்று கூறப்படுகின்றது. ஊர்ப்பேர்கள் திடல்கள் என்று இருப்பதும் இதற்குச் சான்றுபகர்கிறது. நெல்வயல்களுக்குள் கால்மைலுக்குக் குறைந்த இடைவெளியில் சங்கிலித் தொடர்போல் இருபத்திநான்கு சிறு ஊர்கள் வலமாக, வளையமாகக் காணப்படுகின்றன.

இந்த ஊர்களில் தமிழ் உழவர்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடம் சுதேச்சவைத்தியக்கலையும், நாடகம், நாட்டியம், வாய்ப்பாடு போன்ற சங்கீதக் கலைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்தோங்கி வந்தன.

மாரி காலங்களில் பெரும் சத்தமாகக் கத்தும் தவளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியுடன், சுற்றி இருக்கும் ஊர்களில் கூத்துப் பழகும் கொட்டகைகளில் இருந்து எழும் மிருதங்கங்களின் ஒலியும் சேர்ந்து ஒலிக்கும்.

வேர் பிடுங்கி குளிசை தயாரிக்கும் பரியாரிமாரும், வயல்களில் நெல் விளைவிக்கும் உழவர்களும் கால்களில் சலங்கையணிந்து அரங்கேற்றும் மேடைகளில் ஜல் ஜல் என்று தாளந்தீர்ந்து நடித்துப் பார்வையாளர்களை மகிழ்விப்பார்கள்.

மருந்தீந்து பிணியகற்றும் பரியாரிமார்கள் சிறந்த புகழ்பெற்ற பெற்றோர்கள் இட்ட இயற்பெயர் மறைந்து பாத்திரப் பெயருடன் வாழ்ந்தவர், இன்னும் வாழ்பவர் பலருள்ர்.

பல்லவ அரசில் புகழ் பெற்ற சேனாதிபதி பரஞ்சோதி இறைவ னின் சோதனையால் சிறு தொண்டராகத் திறம்பட நடித்தவர். கடைசி வரை சிறுதொண்டர் என்ற மறைமுகப் பெயருடனேயே இவர் வாழ்ந்தார். விசுவாமித்திரர், அனுமர், ஜானகி, மந்திரி, யமன் என்றும் பலர் இருந்தனர்.

சினிமா வந்தது. அரச உதவியுடன் ஆங்கில வைத்தியம் வந்தது. செழித்து வளர்ந்தோங்கி வந்த இரு கலைகளும் அருகி மறைந்தன. பிரிட்டிஷ் ஆட்சி இருக்கும் வரையும் கிண்ணியாவில் வசித்த மகாத்தாஜியார் என்ற கனவான் தம்பலகமம் அருகிலுள்ள கடலை அரசிடம் இருந்து குத்தகையாகப் பெற்று கடலுக்குக் காவல் போட்டு பலமுறை முத்துக் குளிப்பை நடத்தினார்.

இந்தக் கடலின் மேற்புறம் முத்துக் குளிப்பையொட்டி முத்து நகர் என்ற பெயருடன் ஒரு நகர் தோன்றி வளர்ந்து வந்தது. தம்பலகமம் வடக்கில் கடலருகே உள்ள நெல்வயலுள் முத்துச் சிப்பிகளைக் கொண்டு குவித்து அறுத்து முத்தெடுத்து விட்டுச் சிப்பிகள் உயர்ந்த ஊரான இடம் கடலருகே சிப்பித்திடல் என்ற காரணப் பெயருடன் இன்றும் உள்ளது. தம்பலகமத்திலுள்ள வயல்வெளிகளில் செந்நெல் அமோகமாக விளைந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வந்தர்கள் ரூபா நோட்டுத்தாளை எடுத்து வந்து தம்பலகமத்தில் மாதக்கணக்கில் தங்கி தரகர்களை வைத்து நெல் வாங்கி மூட்டைகளாகச் சேர்த்துக் கடல் வழியாகவும் ரயில் மூலமாகவும் யாழ்ப்பாணம் கொண்டு போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக் குளிக்கும் காலங்களிலும், நெல்வயல்களில் அறுவடை நடைபெறும் காலங்களிலும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரம் தொழிலாளர்களும் வந்து கூடுவார்கள்.

தம்பலகமப் பற்றிலுள்ள கிண்ணியா, ஆலங்கேணி, உப்பாறு, முனையிற்சேனை, நெடுந்தீவு, குறிஞ்சாக்கேணி, காக்காமுனை, சூரன்கல், கந்தளாய் போன்ற ஊர்களுக்குத் தம்பலகமம் தலைமை தாங்கித் தொழில் ஈந்து வருவதால் தம்பலகமத்தை தாய் ஊரென்றும் அருகிலுள்ள ஏனைய ஊர்களைச் சேயூர்கள் என்றும் அழைப்பது வழக்கமாகும்.

மேற்படி சேயூர்களில் ஒரு பத்திரம் எழுதுவதானால் திருத்தம் தம்பலகமப் பற்றைச்சேர்ந்த கிண்ணியா, ஆலங்கேணி, கந்தளாய் என்று எழுதுவதே வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனை வழிபடும் தமிழர்களின் பூர்வீகத் தாயகமே ஈழம்!

இந்து சமுத்திரத்துள் பச்சை மாங்காய்போல் மிதக்கும் ஈழம் சிவபக்தி மிக்க தமிழர்கள் பூர்வத்தில் தனித்து வாழ்ந்த நாடாகும். சங்க நூல் 'பட்டினப்பாலை' இந்த நாட்டுக்கு ஈழம் என்று பெயர் கூறுகின்றது. கடலுள் கிடந்து இலங்கிக் கொண்டு கிடந்ததால் இந்தத் தீவுக்கு இலங்கை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இராம - இராவண யுத்தம் கி.மு. 1810இல் நடந்ததென சரித்திர விமர்சகர் சேர் வில்லியம் ஜோன்ஸ் போன்றவர்கள் கருதுகின்றனர்.

அதன் பின் எழுந்த இராமாயணத்தில் இராவணன், இலங்கை போன்ற பெயர்களைக் காணமுடிகிறது.

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் என்று இளங்கோ அடிகள் இலங்கையின் பெயரையும் கூறுகிறார். திருமூலர் போன்ற பல ஞானிகள், ஈழத்தைச் சிவபூமி, என்று சிலாகித்துக் கூறியுள்ளனர்.

பிரமாண்டமான இந்தப் பரந்த உலகத்தில் எங்குமில்லாது இந்தச் சின்னஞ்சிறு இலங்கையின் தென்பகுதியில் சிவனொளி பாதமலை என்ற அற்புதம் எழுந்து சிவமணம் வீசி நிலைத்து நிற்கின்றது.

இந்தப் புனித நிலத்தில் முன்னர் வாழ்ந்த விச்சிரவாகு பெரிய தவசிரேஷ்டர். அவர் மனைவி நிசித்திரி அம்மையார், கங்கை சூடிய கோணேஸ்வரப் பெருமானிடம் மாறாத பக்தி உடையவர்.

இந்தத் தவத் தம்பதியரின் குமாரனான இராவணன் பெரிய சிவ பக்தன். சைவ சமயக் குரவர்களில் முதல்வரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் "இராவணன் மேலது நீறு" என்று பாராட்டப்பட்டவன். அரசனின் தர்ம பத்தினி மண்டோதரி தேவியின் சிவபக்தியை மகாஞானியான மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர்தரும் ஏழுலகு ஏத்த எவ்வுருவும் தன்னுகுவாய் ஆர்.தமிழ் தென்னிலங்கை அழகமார் மண்டோதரிக்கு பேர் அருள் இன்பம் அளித்த பெருந்துறை மேவிய பிரானை சீரிய வாயால் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவுவாய்''

(திருவாத ஊர் அடிகள்)

பாட்டன் மாலியவான் போன்றோர்களும் சிவனடியார்களே. அரசன் ஏவ்வழி குடிகளும் அவ்வழி என்பதற்கமைய இராவண ஆட்சிக் காலத்தில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் சிவநேயச் செல்வர்களே. இராம இராவண சமருக்குப் பின் திராவிடர் இயக்கர், நாகர் எனப் பிரிந்து இலங்கையை இரு பகுதியாக ஆட்சி செய்து வந்தனர்.

தந்தையால் கடல் வழியே துரத்தப்பட்ட விஜயனுக்கு இயக்கர் குலத்தினள் குவேனி உதவினாள். அதனால் விஜயன் தமிழர் பகையைச் சுலபமாகப் புறம் தள்ளி நாடு முழுவதற்கும் அரசனானான். இது கி.மு.543இல் இடம்பெற்றதாகச் சரித்திரம் குறிப்பிடுகின்றது.

தன் இனத்துக்குச் செய்த துரோகத்திற்கு குவேனிக்கு தண்டனை கிடைத்தது. அவள் காட்டுக்குச் செல்ல நேர்ந்தது. புற்றீசல் போல் பாரதத்தில் வந்து குவிந்த ஆரியர்கள், இலங்கையின் மல்வத்து ஓயா பிரதேச வழியாகக் குடியேறி ஆட்சிகளை நிறுவினர். இரண்டாயிரம் ஆண்டுக் கணக்கில் காலம் நீண்டது.

இப்பகுதிகளில் வாழ்ந்த திராவிடர்கள் புறந்தள்ளப்பட்டனர். மேலுயர்ந்து வரும் புதியவர்கள், இந்த அழகிய நாடு எங்களுடையது என்று சொல்கின்றனர். தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று ஏளனமாக உரைக்கின்றனர். நாங்கள் பெரிய மரா மரங்கள். சிறிய கொடிகள் போன்ற இவர்களுக்குப் புத்தி இருந்தால் எங்களில் படர்ந்து வாழலாமே'' என்கின்றனர்.

**சிவனொளிபாதமலை**

விஞ்ஞான அறிவு நுட்பமாக உச்சநிலையில் வளர்ந்து இந்தக் காலத்தில் சர்வ உலக அறிஞர்களும் விரும்பும் ஒரு அறிவுநூல் திருக்குறளாகும். இந்த மேலான குறள் நூலின் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலுள்ள பத்துப் பாடல்களின் ஏழு குறள்களில் இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி, திருப்பாதக் கமலங்களில் வணக்கம் செய்வதையே கூறி உள்ளார்.

வள்ளுவப் பெருந்தகையே மனிதர்களுக்குக் கடவுள் வழிபாடாற்றவும் வழிகாட்டுகின்றார் என்று எண்ணுவது ஏற்புடையதாகும்.

இந்தப் பெரிய பரந்த உலகில் சின்னஞ்சிறிய நாடான ஈழத்தில், பரம் பொருளான சிவனின் பாதச்சுவடு பதிந்த சிவனொளிபாதமலை அமைந்த தெய்வீகச் சிறப்பு உள்ளது. இறை பரம்பொருள் என்ற சக்தியை நம்பமுடியாது என்று சமயங்களே வாதிக்கும்.

இக்காலத்தில் சிவனொளி பாதம் என்ற தடம் இந்த நாட்டில் பதிந்திருக்கிறது. இந்த மலையை மறைக்கவோ பெயரை மாற்றவோ இயலாது.

ஈழம் சிவவழிபாடுடைய தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதற்கு சிவனொளிபாதமலை அமைந்திருப்பது சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னி நதிக்கரையில் அனுமார் பூசித்த ஒரேயொரு சிவஸ்தலம்

தென் பாரதத்தில் காவேரி நதிக்கரையிலுள்ள திரு முக்கூடல் என்ற திருப்பதியில் ஸ்ரீராம பக்தனான அனுமார் பூசித்த ஒரேயொரு சிவஸ்தலமாக அனுமந்தேஸ்வர ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயம் அமைய அனுமார் காரணமாக இருந்தபோதிலும், மாருதி இந்த ஆலயத்தில் ஈஸ்வரனைப் போற்றித் துதித்து வந்ததாலும் இந்த ஆலயத்துக்கு அனுமந்தேஸ்வரம் என்று பெயர் வந்ததாகத் தெரிய வருகிறது.

இரு கரைகளும் பச்சைப் பசுமையான நெல் வயல்கள். நடுவில் இரு கரைகளையும் தழுவித் தழுவி சுழல் இட்டு ஓடும் காவேரியாற்றின் நீர்ப் பிரவாகம்.

இயற்கை எழில் நிரம்பிய முக்கூடல் திருப்பதியின் அழகிய மனம் லயித்த அரச பாவலர் இளங்கோவடிகள் பொன்னி நதியின் அழகை பின்வருமாறு சிலாகித்துக் கூறுகிறார்.

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மண்பூ ஆடை அது போர்த்து
கருங் கயற் கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயற் கண் விழித் தொல்கி!
நடந்த தெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

(இளங்கோவடிகள்)

செய்யுள்களில் தேன் தடவும் இளங்கோ போன்ற மகா புலவர்கள் காலத்தில் உயிர் வாழ்ந்த இலக்கிய ரசிகர்கள் பாக்கியசாலிகளேயாவர். பசுமையான நெல்வயல்களுக் கிடையால் நெளிந்து சுழல்இட்டு ஓடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு கொஞ்சும் பொன்னி நதிக்கரையில் உள்ள முக்கூடல் திருப்பதியை வாசகர்கள் கண்டு மகிழப் பெறும் எழுத்தளாரும் ஆன்மீக ஆராய்ச்சியாளருமான...... மணியம் என்பவரை ஆசிரியராகக் கொண்ட ஞானபூமி இதழ் நல்ல படங்கள் போட்டு முக்கூடல் பதி பற்றி விளக்கி உள்ளது.

"அகஸ்திய மகரிஷி தமிழ்நாடு வந்தார். வில்வலன் வாதாபி சகோதரர்கள் குறுக்கிட்டு முகிழ்ந்து முழுங்கும் பனிக்கடலை உண்டு, அமரர் கோனுக்கு சகாயம் புரிந்த அகஸ்திய மகரிஷி ஆண்டவனின் ஆணையை ஏற்றுக் கிறிஸ்துவுக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன் பாரதத்தில் இருந்து தென்னாடு நோக்கி கால்நடையாக நடந்து வந்து கொண்டிருந்தார். அக்கால அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையே நடந்த போர்களில் அசுரர்களுக்குத் தொடர்ந்து தோல்வியே ஏற்பட்டு வந்தது.

ரிஷிகள் தேவர்களுக்கு அனுகூலமாக இருப்பதே காரணம் என்று அசுரர்கள் அறிந்தார்கள். அறிந்து என்ன செய்வது? கிட்ட நெருங்கினால் சபித்துத் தொலைத்து விடுவார்களே? இந்தப் பிச்சாண்டிகளை எப்படி அழிப்பது என்று தெரியாமல் அசுரர்கள் கலங்கினார்கள். வடதென் இந்தியாவுக்கு மத்தியில் காடும் விந்திய பர்வதமும் இருந்தது. அம் மலைப்பகுதியில் வில்வலன் வாதாபி என்ற அசுரச் சகோதரர்கள் இருந்து வந்தனர்.

அவர்கள் தங்கள் நன்மைக்காக முனிவர்களைக் கொல்ல ஒரு திட்டம் வகுத்தனர். மலைச்சாரலில் ஒரு ஆச்சிரமம் அமைத்து அண்ணனான வில்வலன் முனிவர் வேஷத்தில் அமர்ந்து கொள்வது. தம்பி வாதாபி ஆடாக உருமாறி ஆச்சிரம வாசலில் கட்டப்பட்டு இருப்பது. அந்த வழியே யாரேனும் பெரியவர் இளைத்துக் களைத்து வருவதைக் கண்டால் முனிவர் வேஷத்தில் உள்ள வில்வலன் எதிரே போய் ஐயா வரவேண்டும். சாப்பிட்டு இளைப்பாறிப் போகலாம் என்று அழைத்து வந்து அவர்கண் முன்னே கட்டப்பட்டிருக்கும் தம்பி வாதாபியாகிய ஆட்டை அறுத்துக் கறிசமைத்து அந்தப் பெரியவருக்கு ஆட்டு இறைச்சிக்கறியுடன் வில்வலன் உணவு வழங்குவான். அவர் சாப்பிட்டு விட்டு ஒரு இடத்தில் இருந்து அப்பெரியவர் இளைப்பாறிக் கொண்டிருக்கும் வேளையில் அமுதம் கடைந்த காலத்தில் அமுதம் கிடைக்காத ஏமாற்றத்தால் கடும் தவம் செய்து சிவனிடம் இருந்து பெற்ற மிர்த்தி சஞ்சீவி மந்திரத்தை ஒரு மறைவிடத்தில் நின்று வில்வலன் உச்சரித்து "தம்பி வாதாபி" என்று அழைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுக்கறியாக பெரியவரின் வயிற்றுள் சென்ற வாதாபி உயிர்த்தெழுந்து அவரின் வயிற்றைக் கீறிப் பிளந்துகொண்டு வெளியே வந்து வாதாபியாக உருமாறி விடுவான்.

பின் அண்ணனும், தம்பியும் முனிவரைச் சமைத்து உண்பார்கள். இப்படி எத்தனையோ பெரியவர்களைக் கொன்று சாப்பிட்டு விட்டார்கள். குறுமுனி இளைத்துக் களைத்து வருவதைக் கண்டனர்.

அவரை அழைத்து வந்து வழக்கப்படி வாதாபி ஆட்டை அறுத்து கறிசமைத்து வில்வலன் அவருக்கு உணவு வழங்கினான். முனிவர் சாப்பிட்டு விட்டு ஒரு இடத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது வில்வலன் வழக்கம்போல் ஒரு மறைவிடத்தில் நின்று மந்திரத்தை உச்சரித்து "தம்பி வாதாபி" என்று அழைத்தான்.

மந்திரத்தின் சக்தியால் முனிவரின் வயிற்றில் உயிர்த்தெழ வாதாபி கடா முடாவென்று வருத்தத்தை உண்டாக்கினான். அகஸ்தியர் வயிற்றில் என்ன நடக்கிறது என்று ஞான திருஷ்டியால் பார்த்து அந்த நாசகாரர் செய்த சதியை அறிந்து கொண்ட முனிவர் இஷ்டதெய்வமான சிவனைத் துதித்து முப்புரம் எரித்த அக்கினியை மந்திரமாகத் தியானித்துத் தன் கையால் வயிற்றைத் தடவிக் கொண்டார்.

வாதாபி எந்த உலகத்தையும் எட்டிக்கூடப் பார்க்க முடியாத அந்தகன் உலகில் அடிவாரத்தைச் சேர்ந்தான். இதை அறியாத வில்வலன் மந்திரத்தை உச்சரித்து, "தம்பி வாதாபி வாதாபி" என்று அழைத்துக் கொண்டு நின்றான்.

அவன் குரல் கேட்டு நகைத்து முனிவர் "அடே பாவி உன்தம்பிக்கு எந்த உலகங்களிலும் இனி இடமில்லை. அவன் அந்தகாரத்தைச் சேர்ந்தான். நீயும் இந்த இடத்தை விட்டு ஓடித் தொலைந்து விடு" என்று உறுமினார். அவரின் கோபக் குரலைக் கேட்டு நடுங்கிய வில்வலன் திக்குத் திசை தெரியாமல் ஓடி மறைந்தான்.

விந்தியமலை வழியில் பெரியோர்களைக் கொன்று தின்னும் நீசர்கள் ஒழிந்த பின்பே முனிவர்களுக்கு அரசனான அகஸ்தியர் காவேரி ஊற்றெடுக்கும் உற்பத்தித் தானத்துக்கு வந்தார்.

சிறு குழந்தை துள்ளிக் குதித்து விளையாடுவதைப் போல் காவேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் இரு கரைகளையும் தொட்டுத் தழுவிச் சுழல் இட்டு ஓடுவதைக் கண்டு மகிழ்ந்து, முனிவர் காவேரி நதிக் கரையில் நடந்து வந்தார். அழகு கொஞ்சும் முக்கூடல் திருப்பதியை வந்தடைந்ததும் நர்மதையில் கண்ட சிவலிங்கத்தைக் கொண்டு வந்து இந்தப் படித்துறையில் பிரதிஷ்டை செய்து பூசிக்க வேண்டும் என்றும் முனிவர் எண்ணினார்.

அவ்வளவு தூரத்தில் இருக்கும் லிங்கத்தை எப்படிக் கொண்டுவருவது? என்று யோசித்தார். வாயுவேகமென வேகமாகப் பிரயாணம் செய்யும் மாருதியை முனிவர் அகஸ்மாத்தாக அங்கு சந்தித்தார். இது தெய்வ சித்தம் என்று எண்ணிய முனிவர் அனுமாரிடம் லிங்கம் இருக்கும் இடத்தின் அடையாளங்களைச் சொல்லிப் பூசிக்க நிச்சயித்து இருக்கும் முகூர்த்தத்தையும் சொல்லி லிங்கத்தைக் கொண்டு வந்து தருமாறு கேட்டுக் கொண்டார். லிங்கம் கொண்டுவர நர்மதைக்குப் போன அனுமார் முகூர்த்தம் நெருங்கி வந்த வேளையிலும் திரும்பி வரவில்லை.

இனி என்ன செய்வது என்று வருந்திய அகத்தியர் முகூர்த்த வேளைக்கு மணலைக் குவித்து லிங்கமாகப் பூசையை முடித்தார். அதன் பிறகே அனுமார் நர்மதை லிங்கத்தைக் கொண்டு வந்தார்.

மணலைக் குவித்து லிங்கமாகப் பூசை நடந்து கொண்டிருப்பதைக் கண்ட அனுமார் அகஸ்தியர் உருவாக்கிய மணல் லிங்கத்தைத் தகர்க்க எவ்வளவோ முயன்றும் முடிவில்லை.

லிங்கத்தின் உச்சியில் மட்டும் ஒரு சிறு பள்ளம் ஏற்பட்டது. அந்தப் பள்ளத்தில் இருந்து கோயிலுக்கு நூறு பக்தர்கள் வந்தாலும் ஐம்பது பேர் வந்தாலும் வரும் பக்தர்களுக்கு பிரசாதமாகப் பகிர்ந்தளிக்கக்கூடிய அளவாக கங்கா தீர்த்தம் பீறிட்டு எழுகிறது. இந்த அதிசயத்தைப் பத்திரிகையாளர்களும், நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்களும், மற்றும் பலரும் கூட்டம் கூட்டமாகப் போய்ப் பார்த்து துருவித் துருவி ஆராய்ந்து ஆச்சரியம் தெரிவிக்கின்றனரேயன்றிச் சரியான விளக்கம் கூறியவர்கள் இதுவரை இல்லை. பக்தர்கள் தெய்வீக அற்புதம் என்று கூறுகின்றனர். அதை விட்டால் வேறு கூறுவதற்கு வழியும் இல்லை. சிவலிங்கம் இருக்கும் பீடத்துக்குப் பல அடி தாழ்ந்த பகுதியிலேயே ஆறு ஓடுவதால் சிவலிங்கத்தின் உச்சிப் பள்ளத்துக்கு நீர் வர எந்த விதமான வழியும் இல்லை என்பது துருவித் துருவி ஆராய்ந்தவர்கள் கண்ட உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் அனுமாரைச் சமாதானப்படுத்தி அவர் கொண்டு வந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து எழுப்பிய கோயிலே அனுமந்தேஸ்வரம். இந்த ஆலயத்தில் சிவனை அனுமார் பூசித்து வந்தார் என்று கூறப்படுகின்றது. பொன்னி நதிக்கரையில் உள்ள இந்த அழகு இடம் பாஸ்கரக்ஷேத்திரம் என்று போற்றப்படுகின்றது. "ப்கேஸ்வர அகஸ்தியேஸ்வர தாருகேஸ்வர மூலத்தானேஸ்வர ஆனந்தேஸ்வர ஜோதியேஸ் வரங்கேஸ்வர அனுமதிந்தேஸ்வர" என்று அட்டஸ்வரங்களும் உறையும் புண்ணியபதி என்று போற்றப்படுகின்றது. காவேரி நதியுடன் உறவாடி வரும் அகத்திய மகாரிஷி தஞ்சையிலுள்ள கோடீஸ்வரரைப் போற்றிப் பணிந்தார் என்று ஆன்மீகக்கவி சேக்கிழார் பின்வருமாறு கூறினார்.

ஆதிமாதவரிஷி அகத்தியன் தரு
பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவேரி
மாதர் மடந்தையின் மார்பில் இலங்குமோர்
ஓதநீர் தலத் தாமம் ஓங்குமால்

(சேக்கிழார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழைக்கேட்க, எழுத இறையனார் சிவனுக்கு விருப்பம்

"தென்நாடுடைய சிவனே போற்றி" என்றுதான் சிவபிரான் வணங்கப்படுகிறார். அடுத்ததாகத்தான், "எந் நாட்டவர்க்கும் இறைவா" என்று கூறப்படுகிறது.

இஷ்டமானவர்கள், இஷ்ட தெய்வம் என்று கூறப்படுவது போல் சிவனுக்கு தென்னாட்டில் வாழும் தமிழர்கள் மீதும் அவர்களின் தாய் மொழியான தமிழின் மீதும் பற்று அதிகம் என்பது பலமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மதுரைப் பெருமன்னன் செண்பகமாறப் பாண்டியன் மகாராணியின் கூந்தலில் இருந்து வீசும் நறுமணத்தை மாடியில் இருந்து நுகர்ந்தான். கற்புடைய மடக்கொடிகளின் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் உண்டோ என்ற எண்ணம் அரசனுக்கு ஏற்பட்டது.

தன் கருத்தினைத் தெரிவிக்கும் செய்யுள் எழுதுவோர்க்குப் பத்தாயிரம் பொன் கொண்ட முடிப்பினைப் பரிசளிப்பதாக சங்கப்புலவர்கள் குழுமியிருந்த சபையிலே அறிவித்தான். தருமி என்ற வறுமையாளன் சோமசுந்தரக் கடவுளைத் துதித்து அரசன் அறிவித்த பரிசினைப்பெற ஒரு பாட்டுக் கிடைக்கவேண்டும் என்று இரந்து வேண்டினான்.

சுவாமி கும்பிட கோயிலுக்கு வந்த ஒருவர் தருமியிடம் பாடல் மடல் ஒன்றைக் கொடுத்தார்.

"கொங்குதோர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழியே நட்பின் மயிலியற்
செறியெயிற்றரிவை கூந்தலின்
நறியவுமுளவோ நீயறியும் பூவே" (குறுந்தொகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலின் பொருள் இதுதான். பூவின் வாசனையை ஆராய்கின்ற வாழ்க்கையையும் அழகிய சிறகையுமுடைய வண்டே, விருப்பத்தின் படி சொல்லாமல் நேரே தெரிந்ததை உள்ளபடி சொல்வாயாக. பழகிய பொருளோடு பொருந்திய சினேகம் பற்றி மயில்போன்ற சாயலையும், நெருங்கிய பற்களையுமுடைய கற்புடைய நங்கையினது கூந்தலின் இயற்கை மணம் போல் நீ அறிந்த மலர்களுள் மணம் உள்ளனவும் உண்டோ?

தமிழ் மொழிமீது ஆசை உள்ள சிவன் சோமசுந்தரராக இந்தப் பாடலை எழுதியதால் நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்ற நேரான விமர்சனக் கலை தமிழரிடையே பிறந்தது.

இமயம் முதல் குமரிவரை வாழும் மக்கள் பேசும் மொழியாக ஆரியமும், தமிழும் தொன்மை வாய்ந்த மொழிகளாக இருந்து வருகின்றன. வடமொழியாகிய ஆரியத்தில் இருந்து பல மொழிகள் தோன்றியுள்ளன.

அதேபோல் தமிழ் மொழியில் இருந்து பல மொழிகள் தோன்றி இருக்கின்றன. இந்த இரு மொழிகளையும் ஒப்புநோக்கிப் பார்த்த பெரும் புலவர் வண்ணக்கன் சாத்தனார் பின்வருமாறு கூறுகிறார்.

''ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது
சீரியது என்றொன்றைச் செப்பரிதால் ஆரியம்
வேதமுடைத்து தமிழ் திருவள்ளுவர் ஓதும் குறட்பா உடைத்து''

என்று வண்ணக்கன் சாத்தனார் கூறியுள்ளார். இப்படி இந்தியப் பெருநிலத்தில் சரிசமமாக இருந்து இரு மொழிகளில் வட நாட்டில் பல மொழிகளை ஈன்று மகோன்னத நிலையில் இருந்து வடமொழி உலக வழக்கு அழிந்தொழிந்து சிதைந்து விட்டது.

ஆனால் தென்னாட்டில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய பல மொழிகளுக்குத் தாயாகிய தமிழ், கன்னித் தன்மை குறையாத இளமையோடு இருப்பதை நினைத்து மனோன்மணியம் ஆசிரியர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் வியந்து பின்வருமாறு கூறுகிறார்.

''பல்லுயிரும் பல உலகும் படைத் தமித்துத் துடைக்கினும் ஓர் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல் கன்னடமும் (களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுதரத்துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் ஆரியம் போல் உலகு வழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமை திறன் எண்ணிச்செயல் நினைத்து வாழ்வோமே.”

மகாவித்துவான் இந்த உலகங்களையெல்லாம் படைத்தழித்துக் காத்தினுமோர் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடியே எவ்வித குறைவுமின்றி என்றும் பூரணப்பொருளாக இருப்பதுபோல் கன்னடம், தெலுங்கு, கவின், மலையாளம், துளு எனப்பல மொழிகளை ஈன்றாலும் பரம்பொருள்போல் எவ்வித குறைவும் இன்றி கன்னியாக வளர்ந்து கொண்டிருக்கும் உன் சிறப்பென்னே என்று பேராசிரியர் ஈன்னித் தமிழின் கவின் சிறப்பை மனம் நிறைந்து பாராட்டுகிறார்.

## தமிழ் கேட்க ஆசை

சேரமான் பெருமாள் பெரிய சிவபக்தர். ஒவ்வொருநாளும் பூசைசெய்து ஐயனை என்று மனமுருகிப் போற்றுவார். அப்போது அற்புதமாக மணி ஒலி கேட்கும். மணி ஒலியைக் கேட்டதும், பரமனே முன் வந்து நிற்பதுபோல் புளகாங்கிதம் உண்டாகும்.

ஒரு நாள் பூசை தொடங்கி முடிவுறும் நேரத்தை அண்மித்தும் மணியோசை கேட்கவில்லை.

‘‘என்ன பிழை செய்தேனோ” என்று அரசர் அழ ஆரம்பித்து விட்டார். சிறிது நேரம் சென்றபின் ஆகாயத்தில் ஒருகுரல் ‘‘அன்பனே! வருந்தாதே சுந்தரன் வந்து தமிழ்ப்பாட்டு பாடுகின்றான். கேட்டு லயித்து நின்று விட்டேன்: தமிழ் ஒலியைக்கேட்க ஆசையாக இருந்தது..” என்று அந்தக்குரல் கூறியது.

இரண்டாவது முறையாகவும் சிவனுக்கு தமிழ் மீதுள்ள விருப்பம் வெளிப்பட்டது.

## சிவன் தமிழில் சீட்டுக் கவி எழுதினார்

மதுரை மாநகரில் நான் மாடல் கூடலில் அருளாட்சி செய்யும் சோமசுந்தரக்கடவுள் அறுபத்தி நான்கு திருவிளையாடல்கள் புரிந்தார். செண்பக பாண்டியன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கைவாசனை உண்டா? என்றொரு கவிதைப்போட்டியை ஏற்படுத்தி வெற்றி ஈட்டுவோர்க்கான பரிசுத் தொகையும் அறிவித்திருந்தான். தருமி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையனுக்காக மதுரைச் சோமசுந்தரனார் கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி என்று பாட்டெழுதிக் கொடுத்து சங்கத்தலைமைப் புலவர் நக்கீரரோடு தகராறுபட்டவர்.

இப்போது பாணபத்திரன் என்ற சிவபக்தனுக்கு பொருள் கொடுக்குமாறு சேர அரசருக்கு கடிதம் ஒன்று எழுதினார். சர்வேஸ்வரனுக்கு தமிழ்மொழிமேல் மோகம். அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்குக் கவிதை எழுதுவது கடிதம் என்று தமிழ் எழுத்து வேலையை வலிந்து செய்தார். பாணபத்திரன் என்ற அந்த வாக்கியதாரின் கனவில் சோமசுந்தரர் தோன்றி ஆலயத்தில் எழுதி வைத்திருக்கும் கடிதத்தைக் கொண்டுபோனார்.

கடிதத்தைக் கொண்டு சேரமன்னர் ஆனந்தக் கூத்தாடி நான் ஆளும் அரசும் ஆண்டவன் சொத்தே. அரசை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இசைக்கலைஞரிடம் வேண்டினார்.

''அரசே வாத்தியம் இசைக்கும் நான் ராஜ்யம் எங்கே ஆளப் போகிறேன் ஏதோ பொருள் கொஞ்சம் தந்தால் போதும்''. பாணபத்திரா மன்னரின் காலடியில் வீழ்ந்து பணிந்து வேண்டினார்.

பாணபத்திரரின் இல்லத்துக்கு சேர அரசில் இருந்து வாகனங்களில் செல்வம் போய்க்குவிந்தது. பைந்தமிழ் மீதுள்ள காதலால் சர்வேஸ்வரன் ''சுந்தரன் வந்து தமிழ்ப்பாட்டுப் பாடுகின்றான். அதைக்கேட்டு ரசித்து நின்றேன்'' என்கிறார்.

பாணபத்திரருக்காகச் சேரமன்னருக்குத் தமிழில் கடிதம் எழுதுகிறார். கற்புடைய பெண்ணின் கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டா? என்ற கவிதைப் போட்டிக்கு ''கொங்கு தேர்வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி'' என்று பாட்டெழுதி நக்கீரருடன் வாதிட்டார்.

''அங்கம் வளர்த்த வரிவாளில் நெய்தடவி பங்கப்படவிரண்டு கால்பரப்பிச் சங்கதனைக் கீர் கீரென்று அறுக்கும் கீரனோ வென்கவியைப் பாரில் பழுதென்பவன்''

என்று வசை சொல்லி நக்கீரனோடு சண்டை போடுகிறார். இதெல்லாம் சிவனாரின் தமிழ்மொழி மோகத்தினால் ஏற்பட்ட விளைவுகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடிய தனயன்!

வட பாரதத்தில் குப்த பேரரசை நிறுவிய முதலாம் சந்திர குப்தனுக்குப்பின் கி.பி. 330இல் அரசு கட்டில் ஏறிய சமுத்திர குப்தன், குப்த மன்னர்களுக்குள் தலை சிறந்தவன்.

குப்தர்களால் ஒரு பேரரசு நிறுவப்படுமுன் சில நூற்றாண்டுகளாக வலுவிழந்து, சிறப்பிழந்து இருந்த மகதம், சமுத்திரகுப்தனது தொடர்ந்த வெற்றிகளால் மீண்டும் தலை நிமிர்ந்து சிறப்புக்களைப் பெற்றது. குப்த மன்னர்கள் இந்து சமயத்தவர்களாதலால் இந்து சமயம் வளர்ச்சியடைந்து நன்னிலை எய்தியது.

இலக்கியம், விஞ்ஞானம் முதலானவை போற்றப்பட்டு வளர்ச்சி அடைந்து வந்ததால் குப்தர்கள் காலம் இந்திய வரலாற்றில் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது. இலக்கியம் நாட்டின் சுபிட்சம், மன்னர்களின் கலையார்வம், கலை முயற்சிகள் என்பன பெருகி வளர்ந்தமைக்கு இது காரணமாகியது.

வைதீக மதமாகிய சைவமும், வைணவமும் வளர்ந்தோங்கி வந்தன. இந்த மதங்களின் வளர்ச்சியிலும் பக்திப் பாடல்கள் இடம்பெற்றுச் சங்கீதத்துடன் கலைகளும் இணைந்து வளர்ச்சி அடைந்து வந்தன.

சமய கலைத்துறையிலும் மன்னர் மன்னனான சமுத்திரகுப்தன் வல்லவன். சில கவிதை நூல்களை இயற்றி அரங்கேற்றி - கவிராஜா என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டான். வடமொழிப் புலவர்களில் தலையான காளிதாஸன் 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தான் எனக் கொள்வர். இவன் இயற்றிய சாகுந்தலம் என்ற நாடகம், மேக தூதம் என்ற தூது இலக்கியம், ரகுவம்சம், குமாரவம்சம் முதலிய காவியங்கள் வடமொழிப் போற்றுதலுக்குரிய நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவி என்ற பெரும் கவிஞனும் விசாகத்தரும், தண்டியும் இக்காலத்தவர்களே. விஞ்ஞானத்துறையில் தசம முறையைப் புகுத்திய ஆரியபட்டர், வராகமித்திரர், மருத்துவத்துறையில் சிறந்த வாக்பட்டர் போன்ற பேரறிஞர்கள் குப்தர் காலத்தில் முன் - பின்னாக வாழ்ந்தவர்களே. என அறியக்கிடக்கின்றது. சிற்பக்கலையிலும் குப்தர்கால அறிஞர்கள் சிறந்து விளங்கினர். ஓவியங்களிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு அஜந்தா குகை ஓவியங்கள் சான்றாக உள்ளன. நாந்தாவில் ஒரு பெரும் கல்விக்கழகமும் குப்தர் காலத்தில் நிறுவப்பட்டது. சமுத்திரகுப்தன், இந்தியாவை ஒன்றிணைத்து ஒற்றுமையை நிலவச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் செய்த வெற்றிப் போர்கள் ஏராளம் என்று வரலாறு கூறுகின்றது.

படை கொண்டு வடக்கிலுள்ள நாடுகளை ஆண்ட உருத்திரதேவன் - நாகதத்தன் - சந்திரவர்மன் - கணபதி நாகன் - நாகனேசன் போன்ற ஆட்சியாளர்களை தோற்கடித்து அவர்கள் ஆள் நிலங்களை தன் பேரரசுடன் இணைத்துக் கொண்டான்.

சமுத்திர குப்தன் பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்து தெற்கே காஞ்சிவரை ஒரு திக் விஜயத்தை மேற்கொண்டதாக வரலாறு கூறுகிறது. இந்தப் படை நடத்தலில் மகேந்திரன், கௌராவின் மந்தராஜா, கெட்டுராவின் ஸ்வாமித்தன், பிஷ்ட புரத்தும மகேந்திரகிரி, ஏரண்ட பள்ளவின் தமண, காஞ்சியின் விஷ்ணு கோபன் ஆகிய மன்னர்கள் தோற்கடிக்கப்பட்டனர்; ஆயினும் அவர்களின் அரசு அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டன. இந்தத் திக் விஜயத்தினால் இப்போதைய மத்திய மாகாணங்கள், ஒரிஸ்ஸா மாகாணம், தக்கணத்தின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் சமுத்திர குப்தனது மேலாணை நிலவியது.

வாகாடர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த மத்திய இந்தியா, சமுத்திர குப்தனது மேலாணையை ஏற்றது என்று சரித்திரம் குறிப்பிடுகிறது.

அவனது திறை அரசுகள் சமுத்திர குப்தன் அடைந்து வரும் வெற்றிகளைக் கண்டு அஞ்சி தவறாது திறையைச் செலுத்தி வந்தன. தொலைவில் பல்வேறு கிளைவகுப்பினரும், வடகிழக்கு எல்லைப்புற அரசுகளும் அவனுக்கு திறை செலுத்தி வந்தன.

நேபாளம், காமரூபம், சமதத ஆகிய எல்லைப்புற ஆட்சியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், மாளவர், யௌதேயர், அபிரர், அர்ஜுனயனர், மத்திரகர் முதலான கிளை வேந்தர்களும் சமுத்திர குப்தனுக்கு அஞ்சி கப்பம் செலுத்தி வந்தனர்.

வடமேற்கு இந்தியாவை ஆட்சி செய்த சாகர், குஷானர் ஆகியவர்களும் இந்தியாவுக்கு வெளியே உள்ள தீவுகளில் இலங்கை உட்பட வாழ்ந்தவர்களும் இவனுக்குப் பணிவும், மரியாதையும் தெரிவித்து வந்தனர்.

சமுத்திர குப்தனது பேரரசின் எல்லைகள் பரந்து விரிந்து மிகவும் அகண்ட சாம்ராஜ்யமாக விளங்கியது. இவனது ராஜ்யத்தைச் சுற்றிவர நட்பு நாடுகள் பல இருந்தன. திக் விஜயங்களை முடித்துக் கொண்ட இவன் மன்னன் என்ற "சாம்ராட்" என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டான்.

மௌரியப் பேரரசன் அசோகனை அடுத்து இந்தியாவில் சாம்ராட் பட்டம் பெற்றவன் சமுத்திரகுப்தனே.

உஜ்னியில் ஓய்வுகால வெற்றித்திரு நகரை நிறுவி வெற்றி பெற்றவன் என்ற கருத்தமைந்த விக்கிரமாதித்தன் காலத்திலேயே பாகியன் என்ற சீன யாத்திரீகன் வந்து பௌத்த தலங்களைத் தரிசித்துப் பின் இலங்கை வந்தனர்.

சீரும், சிறப்புமாக மகோன்னத நிலையில் இருந்த குப்த பேரரசு, குமார குப்தர், ஸ்கந்த குப்தர்கள் காலத்தின் பின் 5ஆம் நூற்றாண்டு முடியும் முன்பே சீர்குலையத் தொடங்கிவிட்டது. புஸ்ய மித்திரர் என்ற சாதியாரின் தாக்குதல்களும், ஹுணர் படையெடுப்பும் குப்தப் பேரரசுக்கு வீழ்ச்சியாக அமைந்தன.

ஸ்ரீ மேக வண்ணன் சமுத்திரகுப்தப் பேரரசின் சம காலத்தவன். ஸ்ரீ மேகவண்ணன் (கீர்திஸ்ரீ மேவன்) மகாசேனனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த இவனே சூளவம்சத்தின் முதல் அரசன். பௌத்த மத வளர்ச்சியில் இடம்பெற்ற பல முக்கிய நிகழ்ச்சிகள் இம்மன்னன் காலத்தவையாக இருப்பதும், இவன் காலத்தில் குப்த பேரரசுடன் கலாசார உறவுகள் கொண்டு இருந்தமையும் இம் மன்னன் ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 303 தொடங்கி ஸ்ரீ மேக வண்ணன் 331 வரை ஆட்சி செய்தான் என்பது சரித்திரம். சமுத்திர குப்தனுக்கும் ஸ்ரீமேக வண்ணனுக்கும் இடையே இருந்த தொடர்பை ஒரு சீன ஆதாரமே குறிப்பிடுகின்றது.

அதில் வரும் கதையின் படி ஸ்ரீ மேகவண்ணன் காலத்தில் இலங்கையில் இருந்து இரு பிக்குமார் இந்தியாவுக்கு யாத்திரை போய் மீண்டபின், இந்தியாவிலுள்ள புத்தகாயாவில் போதி மரம் உள்ள இடத்துக்கு அண்மையில் யாத்திரீகர்கள் தங்குவதற்கு இடம் இல்லாதிருப்பதை அரசனுக்கு அறிவித்தனர் என்பது தெரிய வருகிறது.

உடனே மேகவண்ணன் பல வெகுமதிப் பொருட்களுடன் ஒரு தூதுக் குழுவைப் பேரரசன் சமுத்திரகுப்தனிடம் அனுப்பி புத்த காயாவில் ஒரு விகாரை நிறுவுவதற்கு அனுமதி வேண்டினான். சமுத்திர குப்தன் சம்மதம் அளிக்கவே ஸ்ரீ மேகவண்ணன் அங்கு ஒரு விகாரையை அமைத்தான்.

ஏழாம் நூற்றாண்டில் ஹுவான் சாங் என்ற சீன யாத்திரீகர் வந்த போது மேகவண்ணன் கட்டிய அந்தக் கட்டிடம் நல்ல நிலையில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலகாபாத் தூண் பொறிப்பில் அப்பேரரசனுக்குச் சிங்களவரும் திறை செலுத்தினர் என்று கூறப்பட்டிருப்பது ஸ்ரீ மேகவண்ணன் அனுப்பிய வெகுமதிப் பொருள்களையே இது குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

தன் தந்தை மகாசேனன் மகாவிகாரைக்கு இழைத்த தீங்குகளுக்கு பிராயச்சித்தமாக ஸ்ரீ மேகவண்ணன், பொன்னால் செய்த மகிந்தர் சிலையொன்றை வைத்துப் பெரும் விழா நடத்தினார்.

மேகவண்ணன் புதிதாக மேலும் பதினெட்டு விகாரைகளைக் கட்டியதாகவும் கூறப்பட்டுள்ளது. இம்மன்னனது ஆட்சியில் முக்கிய நிகழ்ச்சியாகப் புத்த பெருமானின் தந்ததாது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாக சரித்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

பிராமணப்பெண் வேடம்தரித்த கலிங்க இளவரசி நந்தபுரத்தில் இருந்து புத்தரின் புனித சின்னத்தை இங்கு கொண்டு வந்தாள். அதற்கென தலைநகரில் அரண்மனைக்கு அணித்தாக மேகவண்ணன் ஒரு கோயிலைக் கட்டி தந்த தாதுவைக் கோயிலுள் வைத்து இதனைப் பாதுகாக்கும் பொறுப்பை அபயகிரி விகாரையினிடம் ஒப்படைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே இன்று பெரஹெராவாகக் கொண்டாடப்படுகின்றது.

ஸ்ரீ மேகவண்ணனுக்குப் பின் அவன் தம்பி 2ஆம் ஜெட்டதிசன் ஆட்சிபீட மேறினான். இம் மன்னன் யானைத் தந்தங்களில் சித்திரம் வரையும் கலைஞன்.

இவன் காலத்துக்கு (331 - 339) சற்று முன்பாகவே போதிசத்துவ வழிபாடு இலங்கையில் பரவியதாகக் கூறப்படுகின்றது. இவனைப் போலவே இவன் மகன் புத்ததாசன் நல் இயல்புகளின் சுரங்கமாகப் போதி சத்துவ வாழ்க்கையை வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டினான்.

மருத்துவக்கலையில் தேர்ச்சி பெற்ற இம்மன்னன் மக்களுக்கு மட்டுமின்றி நோயுற்ற பிற உயிர்களுக்கும் கருணையுடன் வைத்தியம் செய்து நோய்களைப் போக்கினான் என்று சரித்திரம் கூறுகின்றது.

மருத்துவ நூல்களைத் தொகுத்து எழுதியதுடன் நாடு முழுவதும் வைத்தியசாலைகளை நிறுவி மக்களும் பிற உயிரினங்களும் பிணி இன்றி நல்வாழ்வு வாழ வழி செய்ததுடன் புத்த தர்மத்தைப் போதிக்க வெவ்வேறு பாகங்களில் ஒழுங்குகள் செய்து மகா விகாரைக்கு மொரபரிவெனா போன்ற கட்டிடங்களையும் அமைத்துக் கொடுத்த இந்தக் கருணை வேந்தன் 368 அளவில் காலமானதாக சரித்திரம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி காத்த பாண்டிய மன்னர்கள்

இந்திய உபகண்டத்தின் தென் பகுதியில் மூன்று தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர்.

இவர்களில் பாண்டிய மன்னர்களே தங்கள் தாய்மொழியான தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமுடையவர்களாக விளங்கினர்.

சங்கம் அமைத்துப் புலவர்களுடன் தாங்களும் உடனிருந்து ஆராய்ந்து இவர்கள் தமிழ் வளர்த்தனர் என்பதைத் தமிழ் உலகம் நன்கறியும்.

இம்மன்னர்கள் கல்வியில் சிறந்த மேதைகளாகவும், தங்கள் ஆட்சியில் நீதி பிழைத்தால் தங்கள் உயிரை ஈந்து செங்கோலை நிமர்த்தும் நீதி மன்னர்களாகவும், வீரத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பராக்கிரமசாலிகளாகவும் விளங்கினர் என்பது வரலாறு.

நெடுஞ்செழியன் மன்னன் கல்வி கற்றலை மனித வாழ்க்கையில் பெரும் பயனாகக் கருதுபவனாகத் திகழ்ந்தான்.

இவன் பாடிய பின்வரும் பாடல் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலாற்றாயுமனந் திரியும்**
**ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக வென்னாதவருள்**
**அறிவுடையோனாரரசுஞ் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாள் பாலுள்ளும்**
**கீழ்ப்பாலொருவன் கற்பின்**
**மேற்ப்பாலொருவனும் அவன் கட்படுமே.**

(புறநானூறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கு ஒரு ஊறு நேர்ந்தால் உடனே விரைந்து உதவியும் பொருளுமீந்து கற்றலே மிகவும் இன்றியமையாதது. ஒரு தாய்வயிற்றில் பிறந்தோரில் மூத்தோன் வருக என அழைத்தாலும் அவர்களுள் கற்ற அறிவுடையோனின் வருகையையே சபையும், அரசும் விரும்பும். நாற்குலத்தோரும் கற்றவனை வணங்குவார்கள். இப்படி அரசர் கற்றலின் சிறப்பைச் சிலாகித்துக் கூறுகிறார்.

கண்ணகி வழக்கில் தன் தவறுணர்ந்தும் "கோவலன் கள்வனல்லன், யானே கள்வன்" என்றரற்றி அரசு கட்டிலில் அமர்ந்தபடியே உயிர் துறந்து வளைந்த செங்கோலை நிமிர்த்தி நீதி காத்தான் அந்த அரசன்.

படைகொண்டு வடநாடு சென்று ஆரிய அரசர்களை அடக்கி வெற்றி வாகைசூடியதால் இளங்கோவடிகளது அருமைத் திருவாக்கால் இந்த அரசன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று பாராட்டப்பட்ட மன்னர்.

பாண்டிய வேந்தர்களில் பெரும்பாலானோர் நிறை கல்விமான்களாகவும், சிவ பக்தர்களாகவும் விளங்கினர்.

தலையாலகானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், வீரத்துக்குப் புகழ் சேர்த்தவன். சித்திர மாடத்தில் துஞ்சிய நன் மாறனின் புதல்வனான இவன் இளைஞனாக இருந்தபோது தந்தை இறந்ததால் இளமையிலேயே அரசு கட்டில் ஏறினான்.

இராஜசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளி, சேரன் யானைகட்சேய் மந்தாரஞ் சேரலிரும் பொறை, திதியன், எழினி, எருமையூரான், இருங்கோவேண்மான், பொருனன் ஆகிய ஏழு படைகளுடன் வந்து பாண்டி நாட்டைச் சூழ்ந்து கொண்டனர். நெடுஞ்செழியன்மீது போர் தொடுத்தனர்.

அது கண்டு வெகுண்ட பாண்டிய இளவல் சமர்க்களம் சென்று கடும் போர் தொடுத்தான். இந்த இளம் வீரனின் ஆற்றலுக்காற்றாது அந்த ஏழு மன்னர்களும் படைகளும் புறமுதுகிட்டு ஓடியும் விடாது போர்ப்பறை முழங்க துரத்திச் சென்று தலையாலங்கானத்தில் மறித்துப் பெரும் வெற்றி வாகை சூடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் இவ்வளவோடு நில்லாமல் பகைவர்களின் உறையூர், வஞ்சி ஆகிய தலை நகரங்கள்வரை துரத்திச் சென்று நாடுகளைத் தன்னடிமைப்படுத்தினான்.

அதன் காரணமாகவே இம்மன்னனுக்குத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற அடைமொழியுடன் கூடிய பெயர் வழங்கப்பட்டது என்று புறநானூறு கூறுகின்றது.

கி.பி. 125ஆம் ஆண்டில் பாண்டிய இராச்சியத்தின் அரியாசனம் ஏறிய சுந்தர பாண்டியன் தென்னிந்தியாவிலுள்ள சேர, சோழ, பல்லவ, தெலுங்கு, கர்நாடக, போசன போன்ற எல்லா அரசர்களையும் வென்று தன்னடிமைப்படுத்தி ஒவ்வொரு அரசின் தலைநகரிலும் வீராபிஷேகம் செய்தான். எம்மண்டலமும் கொண்ட சுந்தரபாண்டியன் என்ற புகழ்பெற்று செங்கோலோச்சினான் எனக் கல்வெட்டுகள், வரலாறுகள் தெரிவிக்கின்றன.

இவ்வேந்தன் தில்லையம்பலம், திருவரங்கம் போன்ற பேராலயங்களுக்குப் பொன் வேய்ந்து பொன்வேய்ந்த பெருமான் என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றான். இம்மன்னனின் புகழ்நிலை பற்றி அக்காலப் புலவர் ஒருவர் இவ்வாறு பாடியுள்ளார்.

"வாழ்க கோயில் பொன் வேய்ந்த மகபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தரபாண்டியன் தென்னவனே"

இலங்கை அமைச்சர் ஒருவரின் வேண்டுகோளுக்கமைய தன் தம்பி சடையவர்மன் வீரபாண்டியனைப் பெரும் படையுடன் இங்கு அனுப்பி வைத்தான்.

வீரபாண்டியன் இலங்கையில் பல வெற்றிப் போர்களை நிகழ்த்தி இலங்கையரசருள் ஒருவனைக் கொன்றும் மற்றொருவனுக்கு முடிசூட்டி திருகோணமலை, திரிகூடகிரி என்பவற்றில் கயல் இலச்சினையைப் பொறித்து மீண்டான் என வரலாறு கூறுகின்றது.

இவ்வீரபாண்டியன் தன் சகோதரனாகிய சுந்தரபாண்டியனைப் போல் கொங்கு நாடு, ஈழநாடு, விஜயகண்ட கோவலன் நாடு ஆகியவற்றையும் வென்றவன். பல்லவ அரசனிடம் திறைபெற்றுத் தில்லைமா நகரில் சிவகாம கோட்டத்துக்கு தென்புறமுள்ள நூறுகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தில் கி.பி. 1267ஆம் ஆண்டில் வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும் செய்து கொண்டான். இதனால் அம்மண்டபம் வீரபாண்டியன் திருமண்டபம் என்னும் பெயர் எய்தலாயிற்று என்றும் அம்மண்டபத்தின் முன்வாயிலில் அப்பெயர் பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம் என்றும் சொல்லப்படுகின்றது.

பேராசிரியர் சதாசிவப் பண்டாரத்தார் இது பற்றி தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

பாண்டிய மன்னர்கள் சிவ பக்தர்களாகவும், கற்றுத் தேர்ந்த புலவர்களாகவும், மாவீரர்களாகவும் விளங்கினர் என்பதை வரலாற்றில் காணமுடிகிறது.

தென்நாடு முழுவதும் வென்று இலங்கை வரை சென்று தங்கள் புகழ் பரப்பியவர்கள் சடைய வர்மன் சுந்தர பாண்டியனும், இவன் தம்பி வீரபாண்டியனுமாவார்.

அலாவுதீன் கில்ஜியின் படைத் தலைவன் மாலிக்கபூரின் படையெடுப்பால் மதுரை மாநகரும், பாண்டிய இராச்சியத்தின் பல பகுதிகளும் முகமதிய வீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. ஆலயங்கள் தகர்க்கப்பட்டன. மக்கள் என்றும் அறியாத துன்பத்தில் ஆழ்ந்தனர்.

மாலிக்கபூர் பொன்னையும், பொருளையும் கொள்ளையடித்துச் சென்றான் என பார்னி எனும் ஆசிரியர் கூறியுள்ளார். மாலிக்கபூரின் கொள்ளையடிப்பைத் தொடர்ந்து பாண்டிநாடு முஸ்லிம் அரசுகளின் வேட்டைக்காடாகியது.

பாண்டிய இராஜ்யத்தில் இடம்பெறும் அநீதிகளையும், இந்துமத ஒடுக்கத்தையும் கேள்வியுற்ற விஜயநகர மன்னர் குமார கம்பண்ணர் பெருமையுடன் தமிழ் நாட்டிற்கு வந்தார்.

விஜயநகரப் பேரரசர் குமார கம்பண்ணரின் பட்டத்துத் தேவி கங்காதேவி கணவரின் வெற்றி குறித்து எழுதிய மதுரா விஜயம் என்னும் வடமொழி நூலின் தமிழாக்கம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

ஒருநாள் இரவு தன் கணவரின் கனவில் ஒரு தெய்வப்பெண் தோன்றிப் பாண்டிநாட்டில் துலுக்கர் ஆட்சியினால் மக்கள் அடையும் துன்பத்தையும், திருக்கோயில்கள் இடிபடுவதையும், வைதிக சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவு படுத்தப்படுவதையும் எடுத்துக் கூறினாள். தன் கையில் உள்ள வாளை மன்னர் கையில் கொடுத்தாள். இவ்வாள் சிவபெருமானால் பாண்டியர்களுக்கு கொடுக்கப்பட்டது.

இவ்வாள் படையை எடுத்துப் போர் புரியும் வன்மை பாண்டியர்களுக்கு இல்லாது போகவே அகத்தியரிடம் வந்தது. அகத்தியர் இந்த ஆயுதத்தை என்னிடம் தந்து உன்னிடம் கொடுக்கும்படி கூறினார். ஆகவே இந்த வாளினால் துலுக்கர் பகையை வென்று பாண்டி நாட்டையும் மக்களையும் காப்பாயாக என்று கூறி மறைந்தாள். இப்படி மதுரா விஜயம் கூறுகின்றது.

இதன் பின் கல்வியிலும், நீதியிலும், வீரத்திலும் புகழ் பெற்று விளங்கிய பாண்டியப் பேரரசு அருகிமறைந்தது என்று அறியமுடிகிறது.

பாண்டியச் சகோதரர்கள் அந்நியரைக் கூவிஅழைத்துத் தங்கள் அரசுக்கும், வாழ்வுக்கும் முடிவு தேடிக்கொண்டது இன்று தம்முள் மாறுபட்டுச் சண்டையிடும் தமிழர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

ஒற்றுமையே முன்னேற்றத்தின் ஒரே வழி என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து செயல்படுவது தமிழ் இனத்தின் முன்னேற்றத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச் சக்கரவர்த்தி நிகழ்த்திய ருசிகர விளக்க உரை!

நான்காண்டு கற்றும் வகுப்பில் சித்தியெய்தாமல் வறுமையின் தீவிரத்தால் கற்றலை நிறுத்தியவன் வாலிபனாகித் திருமணம் செய்துகொண்ட பின் காட்டில் சென்று விறகுவெட்டிச் சுமந்து வந்து விற்று, அவனும் மனைவியும் மிகக் கஷ்டமாகச் சீவித்து வந்தனர். அவன் மனைவி கல்வி கற்காவிட்டாலும் "கேட்டல்" என்ற முறையில் கற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக் கேட்டு கொஞ்சம் தன் அறிவை விசாலமாக்கிக் கொண்டாள்.

அவளுக்குக் கணவன் செய்யும், கால் வயிறு உணவுகூட உண்ணப் போதாத விறகு வெட்டும் தொழில் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. வியர்வை சிந்தாமல், உடை கசங்காமல் அரச சபையில் பாட்டுப் பாடிப் புலவர்கள் அதிகமான பொருள் பெற்றுச் செல்வதாக அறிந்தாள். அப்படித்தான் நாமும் பொருள் பெறவேண்டும் என்று எண்ணிய அவள் விறகு வெட்டக் காட்டுக்குப் போகாமல் சோழ அரசன்மீது பாட்டுப்பாடிப் பெரும் பொருள் பெற்று வருமாறு கணவனிடம் தினமும் சொல்லி வந்தாள்.

நன்றாகக் கற்காத நான் எப்படி பாட்டு எழுதுவது என்று தோன்றாமல் அவன் பைத்தியக்காரன் போல் எழுதுகோலும் ஓலையும் கொண்டு அங்கு மிங்கும் திரிந்தான். அங்கோர் இடத்தில் நாலைந்து பிள்ளைகள் கூடி இருந்து ஒரு பாவைப் பிள்ளையை நடுவில் வளர்த்தி அதன் வாயில் மண்போட்டு "மண் உண்ணி மாப்பிள்ளையே" என்று பாடிக்கொண்டிருந்தனர்.

அதைக் கண்ட அவன் நம் பாடல் அமைப்புக்கு இதைத் தொடக்கமாகக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு போய் ஓலையில் "மண்ணுண்ணி மாப்பிள்ளையே" என்று எழுதி பலமுறை படித்துப் பார்த்துக் கொண்டான். விறகுவெட்டி அப்பால் சென்றான். அங்கொரு காகம் விடாமல் கத்திக் கொண்டிருந்தது. குயில் ஒன்றும் குக் கூ என்று கூவியது. "காவிறையே, கூவிறையே" என்று இந்தப் புதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிகளுடன் ஏட்டில் எழுதிக் கொண்டான். அப்பால் ஒரு கோயில் இருந்தது. இவன் கோயிலடிக்குச் சென்றபோது ஒரு பெரிய பெருச்சாளி ஓடிக் கோயிலுக்குள் புகுந்தது.

அதைக் கண்ட இவன், 'எங்கப்பா எவ்வளவு பெரியது'' என்று எண்ணியவன், இதை எப்படி எழுதுவது என்று சிறிது நேரம் யோசித்து விட்டு "உங்கப்பன் கோயில் பெருச்சாளி'' என்று ஏட்டில் எழுதிக் கொண்டான்.

அடுத்து இருவர் பேசி வாய்த்தர்க்கமிட்டுக் கொண்டிருந்தனர். இவன் அவ்விடம் சென்றபோது, கன்னாபின்னா என்று பேசிக் கொண்டிராதே என்று ஒருவன், மற்றவனை அதட்டினான். அதையும் கன்னா பின்னா என்று எழுதிக் கொண்டு கவி இவ்வளவு போதும் என்று விறகுவெட்டி வீடு திரும்பித் தான் எழுதிவந்த கவிதையை மனைவிக்குப் பின்வருமாறு படித்துக் காட்டினான்.

"மண்ணுண்ணி மாப்பிள்ளையே! காவிறையே, கூவிறையே உங்கப்பன் கோயில் பெருச்சாளி. கன்னா பின்னா என்று கவிதையை வாசித்து முடித்தான்.

பாட்டு நன்றாக அமைந்திருக்கிறது. ஆனால் கவிதை முடிந்த மாதிரியும் தெரியவில்லை. சோழ அரசனைப் பற்றி ஒரு குறிப்புக்கூட இல்லையே இதற்கு என்ன செய்யலாம் என்று அவன் மனைவி நெடு நேரம் யோசித்து "தென்னா சோழரங்கப் பெருமானே'' என்று இறுதியில் எழுதச் செய்து பாடலை முடிவுறச் செய்தாள். தன்னுடைய கற்பனையும் பாடலில் இடம்பெற்றதை இட்டு அவளுக்கு கொள்ளை மகிழ்ச்சி.

மறுநாள் தான் இயற்றிய பாடலை அரச சபைக்குக் கொண்டுபோக முயன்றபோதுதான் புதுக் கவிஞனுக்கு உதறல் எடுத்தது. ஆயினும் பெண்டாட்டி கூறிய தைரியத்தால் கவிதை ஓலையையும் கொண்டு சமாளித்துக் கொண்டு அரச சபைக்குள் வந்து விட்டான். சோழ மன்னன் சிங்காசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். அமைச்சர்கள் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். சேனாதிபதிகள், அதிகாரிகள் என்று சபை நிறைந்து காணப்பட்டது.

கையில் ஓலையுடன் விறகுவெட்டி வெட, வெட என நடுங்கும் நிலையில் காவலர்கள் நிற்கும் பகுதியில் நின்றிருந்தான். அரச சபையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் அனைவருக்கும் விறகுவெட்டியை நன்கு தெரியும். வீதியில் இவன் விறகு சுமந்து சென்றதை பலரும் பலமுறை பார்த்திருக்கிறார்கள். இவன் ஏன் இப்போது சபைக்குள் வந்திருக்கிறான். கையில் ஓலையும் வைத்திருக்கிறான்.

சபையிலுள்ள அனைவரது கண்களும் கவிஞரின் முகத்தில் மொய்த்தன. இந்தக் காட்டு மனிதனை வைத்துக் கம்பர் ஒரு நாடகம் நடத்தப் போகிறார் என்று எரிச்சல் கொண்ட புலவர்கள் தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக் கொண்டனர். "அரசர் பெருமானே! சபையோர்களே! அந்த மனிதரைச் சுட்டிக்காட்டி "இவர் ஒரு கவிஞர். நம் மன்னரைப் பாராட்டிக் கவிதை எழுதி வந்திருக்கிறார். இவர் சார்பாக நான் அதைப் படிக்கிறேன். கவிதையின் பொருள் கூறவேண்டியது சபைப் புலவனாகிய எமது கடன் என்று கூறிவிட்டு ஓலையைப் பின்வருமாறு வாசித்தார்.

"மண் உண்ணி மாப்பிள்ளையே, கா இறையே- கூ இறையே உங்கப்பன் கோயில் பெருச்சாளி. கா்ணா- பின்னா - தென்னா- சோழரங்கப் பெருமானே" என்று வாசித்துவிட்டு, அழகான போற்றுதல் என்று பாராட்டிய கவிச்சக்கரவர்த்தி "புலவர்களே பாடலுக்குப் பொருள் உரையுங்கள்" என்றார்.

புலவர்கள் ஓலை கொண்டுவந்த மனிதனையும், கம்பரையும் மாறிமாறிப் பார்த்து ஏதோ இரகசியமாக கதைத்து சிரிக்க முயன்றார்களேயன்றிப் பொருள் கூறுவார் யாருமில்லை. மீண்டும் பொருள் கூறுங்கள் என்று சொல்லியும் யாரும் பேசாததால் "யானும் ஒரு புலவனாதலால் எனக்குத் தெரிந்த அளவில் புலவரின் பாடலுக்குப் பொருள் கூறுகின்றேன்" என்றார் கம்பர்.

"மண்உண்ணி மாப்பிள்ளையே. கிருட்ணபகவான் குழந்தையாக இருந்து விளையாடிக்கொண்டு இருந்தபோது மண்ணை வாரி உண்டார். வளர்ப்புத் தாயார் யசோதை ஓடிவந்து வாயைத் திறடா? என்று அதட்டியபோது வாயைத்திறந்து வாய்க்குள் உலகங்கள் தெரியக்காட்டி எல்லோரையும் ஆச்சரியத்துள் மூழ்கச் செய்தார். இத்தகைய கண்ணபரமாத்வாவின் அம்சமாகத் தோன்றி சோழநாட்டை நல்லாட்சி செய்யும் மன்னர். பிரானே வணக்கங்கள். கா இறையே. குடிமக்களாகிய எங்களை எல்லாவிதமான கஷ்டங்களிலும், துன்பங்களில் இருந்தும் காத்து இரட்சிக்கும் மாட்சிமை தங்கிய வேந்தே. கூவிறையே' தூர இடங்களில் அபாயம் வர இருந்தாலும் கூவி அழைத்துத் துணைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நம்பிக்கை தரும் சோழ அரசு என்னும் வல்லமைச் சக்தியே. "உங்க அப்பன் கோயில் பெருச்சாளி" உங்கள் தந்தை பெரிய மகாவீரர். சிங்கக் கூட்டத்தில் பாய்ந்தடக்கும் யாளியைப்போல எதிரிகளைப் புறங்கண்டு ஓடச்செய்பவர். "கர்னா சிறந்த வில் வீரரும் உலகப் புகழ்மிக்க கொடையாளியான கர்ணனுக்குப் பின்வந்த யுதிட்டிரரைப் போன்ற பார் போற்றும் வேந்தே "தென்னா சோழரங்கப் பெருமானே" தென் பாரதத்தில் சோற்றுக்குப் பஞ்சம் வராத சோழப் பெருநிலத்தை ஆளும் வலுபெற்ற மன்னர் பெருந்தகையே வணக்கம் என்று கவிச்சக்கரவர்த்தி தன் உரை கூறலை முடித்தார்.

அரசரைப் போற்றும் இவ்வளவு சிறப்புகளும் விறகுவெட்டி எழுதி வந்த பாடலில் இருக்கிறதா? அல்லது நமது கவிச்சக்கரவர்த்தியின் கற்பனையான வர்ணனையா? என்று சபையோர்கள் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்து கரை ஏற முடியாமல் திண்டாடினார்கள். கம்பர் சொன்ன சிறப்புக்கள், பெருமைகள் பெரும்பாலாகத் தன்னிடம் இல்லாவிடினும் கவிச்சக்கரவர்த்தி சொன்ன பாங்கு மனதை உருகச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டு போன்றதே அருச்சுனனின் பாசுபதாஸ்திரம்?

கவசம் போர்க்காலங்களில் வீரர்கள் உடல் பாதுகாப்பாக அணியும் இரும்புச் சட்டைக் கவசம் பாரமுடையதாக இருப்பதால் போர் புரிய வேண்டிய சமயத்தில் மட்டுமே வீரர்கள் கவசம் அணிவார்கள்.

ஆனால் ''நிவாத கவசர்கள்'' என்ற பெயருடைய மூன்று கோடி வீரச் சகோதரர்கள் தேகத்தில் அணிந்த கவசத்தை ஒருபோதும் கழட்டுவதே இல்லை எந்நேரமும் போர் செய்வதே அவர்கள் நோக்கம்.

யுத்தம் இல்லாத காலங்களில் தான் இவ்வீரர்கள் சோர்ந்து காணப்படுவார்கள். இவர்கள் செருக்குடன் தேவலோகத்தை பலமுறை தாக்கி பொன்னுலகை அல்லோலகல்லோலப்படுத்தினார்கள்.

தேவர்களும் இந்திரனும் ஓடி ஒளிய வேண்டிய நிலை பலமுறை ஏற்பட்டது. இந்திரனின் சக்திவாய்ந்த வச்சிராயுதமும் இவர்களைப் பொறுத்தவரையில் பயனற்றதாகியது. என்ன செய்வது? யாரைக் கொண்டு இந்தக் கொடியவர்களை அடக்குவது என்ற கவலையில் இந்திரனும் தேவர்களும் மூழ்கி இருந்தனர்.

அச்சமயம் பாண்டவர்களில் நடுவனான அருச்சுனன் கடும் தவம் ஆற்றி ஒருவரும் பெற்றிராத பாசுபதாஸ்திரத்தை இறைவனிடம் இருந்து பெற்றான். அது கண்ட தேவராசன் ஓடோடி வந்து மகன் முறை கொண்டாடித் தன் பொன் உலகத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கு மகனுக்கு முடிசூட்டிப் பெரும் விழா எடுத்தான்.

இந்த ஆரவாரங்கள் சற்று அடங்கியதும் நிவாத கவசர்களால் தான் அடைந்து வரும் துயரங்களை அருச்சுனனுக்கு எடுத்துக்கூறி இந்திரன் அருச்சுனனை அவர்களுடன் போர் புரிய அனுப்பி வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாத கவசர்கள் வாழும் நகரை நெருங்கியதும் அருச்சுனன் வில்லை வளைத்து இடிமுழக்கம் போல் குணந்தொனி செய்தான்.

அந்தப்பேரோசையைக் கேட்டதும், எங்கே யுத்தம், என்று காத்திருந்த நிவாத கவசர்களும், படைகளும் கடல் பொங்கி வருவது போல் வந்து அருச்சுனனின் தேரை வளைத்து நின்று பாண மழை பெய்தனர். அவைகளை எல்லாம் வேறு அஸ்திரங்களால் வெட்டி அழித்து விட்டு பயபக்தியுடன் சிவ கணையை எடுத்து வில்லில் தொடுத்து அதற்குரிய மந்திரத்தைச் சொல்லி சிவனை வணங்கித் துதித்து நிவாத கவசகர்கள் மீது பிரயோகித்தான் அருச்சுனன்.

சூரியப் பிரகாசமாகப் புறப்பட்ட அந்தப் பரமன்வாளி மூன்று கோடி நிவாத கவச வீரர்களையும் அவர்கள் படைகளையும் ஒரு நொடிக்குள் கபளிகரம் செய்து யுத்த களத்தை வெறும் களம் ஆக்கிவிட்டு கடலில் குளித்து சிவனிடம் வந்தது.

சித்திரசேனன் இந்தப் பேரழிவைக் கண்டு நடுங்கிப் பிரமித்துப் போனான். தேவர்கள் பூமாரி பெய்து ஆனந்தத்தில் துள்ளினர்.

தேவராசன் அளவிடமுடியாது ஆனந்தம் அடைந்து மனதுள் இறைவனை வணங்கித் துதித்தான். பாசுபதாஸ்திரம் கடலில் குளித்துச் சிவனிடம் போய்ச் சேர்ந்தது. அதன் பிறகு அருச்சுனனிடம் அந்தச் சிவகணை இருக்கவில்லை. அபிமன்யூ இறந்த சோகத்தில் மூழ்கிக் கிடந்த விஜயனை கண்ணன் தேற்றி ''வா அந்தச் சிவகணையை வாங்கி வருவோம்'' என்று கைலைக்கு அழைத்துச் சென்ற போதிலும் அந்தக் கணையைச் சிவனிடம் இருந்து பெறமுடியவில்லை.

அவுணர்கள், அமரர்களை விட பேராற்றல் வாய்ந்தவர்கள். நிவாதகவசர், கால கேயர் என்ற அவுணர்கள் அழிக்கப்பட்டபின் பாசுபதக் கணைக்கு உலகத்தில் வேலை இல்லை என்பது இறைவனின் சித்தமாக இருந்த போதிலும், மனித விஞ்ஞான அறிஞர்கள் தங்களின் அதீத புத்திகூர்மையால் பாசுபதாஸ்திரத்தின் அம்சமாக அணுக்குண்டை உருவாக்கி விட்டார்கள் என்பதைக் கிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பான் நகரங்களில் அணுகுண்டு வெடித்து பல லட்சக்கணக்கான மனித உயிர்களும், மற்றும் உயிர்களும் பலியான போது அறியமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு விஞ்ஞானிகளே சிவசக்தியை நன்கு அறிந்து அணுகுண்டை உருவாக்கும் அதீத சக்தி வாய்ந்த லேஸர் இயந்திரத்துக்கு சிவனின் பெயர் வைத்துள்ளனர்.

இந்து சமயத்தவர் சாஸ்திரங்கள் மூலமே சிவதத்துவத்தை அறிய முற்படுகின்றனர். ஆனால் அமெரிக்க விஞ்ஞான அறிஞர்களோ! ஆராய்ச்சி மூலம் சிவசக்தியை நேரடியாகக் கண்டு அந்தப் பிரமாண்டமான சிவசக்தியைச் சொல் கொண்டு விளக்க முற்படுகின்றனர். உலகை ஆக்கும் சக்தியாகவும் காக்கும் சக்தியாகவும், அழிக்கும் சக்தியாகவும் அண்டம் முழுவதும் பரந்துள்ள சிவன் இன்றி அணுவும் அசையாது என்று அணு விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

கலிபோர்னியாவில் லாரன்ஸ் லிவமோர் தேசிய ஆராய்ச்சிக்கூடத்தில் சக்தி வாய்ந்த லேஸர் இயந்திரத்துக்கு விஞ்ஞானிகள் ஒருமித்து சிவனின் பெயரை வைத்திருக்கின்றனர். ஆராய்ச்சியின் முடிவில் முதல் அணுகுண்டு வெடிக்கப்பட்ட போது அதில் இருந்து எழுந்த அசாத்திய ஒளியையும், பிரமாண்டமான புகை மண்டலத்தையும் பார்த்த பிரபல அணுசக்தி விஞ்ஞானி ஒப்பன் ஷிமர் ''இது சிவபெருமானை நினைவூட்டுகிறது'' என்று சொன்னாராம்.

சிவா என்ற இந்த லேஸர் இயந்திரத்தின் சக்தி என்ன என்பதை ஜென்பைஒன்ஸன் என்ற அணு விஞ்ஞானி விளக்குகிறார்.

உலகத்தின் சக்தி வாய்ந்த இந்த இயந்திரத்தில் கிடைக்கும் லேஸர் கதிர்கள் சிவனின் இருபது கரங்களைப்போல் இருபது பகுதிகளைக் கைகளாக நீட்டிக்கொண்டு நிற்கின்றது.

மிக நுட்பமான ஹைட்ரஜன் அணுக்களில் இருந்து இந்தச் சக்தியின் ஐக்கியம் உருவாக்கப்படுகிறது. ஒரு சிறு உப்புக்கல்லின் அளவில் உள்ள பொருளில் இருந்து பல்வேறு சூரியன்கள் ஒளியுடன் பிரகாசிக்கச் செய்யும் சக்தி இதற்குண்டு. சிவ விஞ்ஞானிகளுக்கு அதிஷ்டம் இருந்தால் ஒரு நாள் அவர்கள் ஒரு செயற்கைச் சூரியனையே உருவாக்கி விடுவார்கள். ஒரு வினாடியில் நூறு கோடியில் ஒரு பங்கு நேரத்தில் மனிதனால் கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவு சக்தியை வெளிப்படுத்துகிறது என்று எழுதுகிறார் மற்றொரு அணு விஞ்ஞானி எம்பெட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணப்பொழுதில் நெற்றிக்கண்ணில் இருந்து சக்தி மிகுந்த ஒளியையும், நெருப்பையும் சிந்த வைக்கும் சிவபெருமானின் பெயரை உலகத்திலேயே உச்ச சக்திவாய்ந்த லேஸர் இயந்திரத்துக்கு வைத்தது எவ்வளவு பொருத்தம்? என்றும் அவர் கூறுகிறார்.

இந்துக்களைவிட ஆதிப் பரம்பொருளை ஆராய்ந்து அறிந்து இன்று சிவபெருமானின் சிறப்புகளை உலகுக்கு உணர்த்துபவர்கள் புது உலகமான அமெரிக்காவில் விஞ்ஞான விந்தைகளை நிகழ்த்திவரும் அணு விஞ்ஞான அறிஞர்களே என்று கூறலாம்.

அமெரிக்கர்கள் மிகவும் விரும்பும் தெய்வ வடிவம் சிவனின் மற்றொரு வடிவமான ஆடல் அரசனான நடராசனின் திரு உருவமே என்றும் அறிய முடிகிறது. ஒரு காலத்தில் இந்த உலக இயக்கத்துக்குக் கடவுள் என்றொருவர் தேவை இல்லை என்று நாஸ்தீகம் பேசிய விஞ்ஞான அறிஞர்களே இன்று சிவ தத்துவம் பற்றி ஆராய்ந்து அறிந்து கூறுகின்றனர்.

அமெரிக்காவில் சிவன் திட்டு என்று ஒரு இடம் இருப்பதாகத் தெரியவருகிறது. பழம்பெரும் நாடான சீனாவில் சங்கரி ஆறு என்ற பெயரில் ஒரு ஆறு ஓடுவதாக அறியமுடிகிறது.

இலங்கையில் சிவனொளிபாதமலை இருக்கிறது. அதன் உச்சியில் பாதச் சுவடு இருக்கிறது. பழைமையில் இங்கு அரசு செய்தவர்களின் பெயர்கள் மூத்த சிவன், கிரிகண்ட சிவன் என்று சிவ நாமமாகக் காணப்படுகின்றது.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிககால மக்கள் பசுபதி என்ற சிவனை வழிபட்டதாகத் தெரிகிறது. உலகம் முழுவதும் சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இவை எல்லாம் உலகத்தில் முதல் தோன்றிய மக்கள் சிவ வணக்கமுடையவர்களாகவே இருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று நாமும் வணங்குவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரமான தேவலோகம்! இந்திர பதவி அடைய போட்டா போட்டி!

நாம் வாழும் இந்த மண்ணுலகம் மட்டும் தான் உள்ளதா? அல்லது வேறு உலகங்களும் உண்டா? இவ்வாறு நாம் எண்ண முடியாதபடி தெய்வப் புலமைத் திருவள்ளுவர். ''அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை" என்று இன்னொரு உலகையும் அறிமுகப்படுத்தி வைக்கின்றார். தம்மைப்போல் உணவுண்டு வாழாமல் அருளைக் கொண்டு வாழும் அவ்வுலகம் தான் தேவருலகமான பொன்னுலகம் என்று தெரியவருகிறது. இந்தப் பொன்னுலகம் நாம் வாழும் இந்த மண்ணுலகுக்கு வித்தியாசமானதாக, விசித்திர நடைமுறைகளைக் கொண்டதாக இருக்கின்றமை தெரிகின்றது.

குறிப்பாக, முப்பது நாட்களைக் கொண்ட பன்னிரெண்டு மாதங்கள் முன்னூற்றி அறுபது நாள். மனிதர்களுக்கு ஒரு வருடம் மனிதர்களுக்கு இந்த ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள்.

இந்த முறையில் கணக்கிட்டு நூறு தேவவருடங்களே சொர்க்க, மத்திய பூலோகம், பாதாளம் என்னும், மூன்று லோகங்களில் அதிபதியாகிய தேவராஜனின் பதவிக்காலம், நூறு தேவ வருடங்கள் சென்றதின் பின் பதவியில் இருந்த இந்திரன் தேசு குன்றி மறைய, தபோ பலத்துடன் புதிய இந்திரன் தேவர் உலக அரசுகட்டில் ஏறுவான் இந்திர பதவிக்கு உரித்தான உபயோகப் பொருள்களான ஏவும் இலக்கை நிர்மூலமாக்கும் மகா சக்தி வாய்ந்த வச்சிராயுதம் ஐராவதம் என்ற வெள்ளை யானை, உய்ச்சிரவம் என்ற வெள்ளைக் குதிரை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ரம்பை போன்ற ஆடல் அணங்குகள், கேட்டவைகளை நல்கும் கற்பகதரு காமதேனு மற்றும் இந்திர தேவனுக்குரிய போகப் பொருட்கள் அனைத்தும் புதிய இந்திரனிடம் வந்து சேரும்.

இப்படி நூறு தேவ ஆண்டுகள் சென்று பழைய இந்திரன் கழிந்து புதிய தேவ அரசன் ஆட்சிக்கு வருவது மரபாக இருந்தாலும் இந்திரர்களின் மனைவி இந்திராணி என்றும் இளமை குன்றாமல் பேரெழில் மங்கையாய் பதவிக்கு வரும் புதிய இந்திரர்களுக்கு" மனைவியாக இருக்கும் நியதி உடையவள் என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோமிசை என்று அமரர் உலகம் புகழ்ந்து பேசும் இந்திராணியால் எழுந்த விளைவுகளை மகாபாரதம் எடுத்துக் கூறுகிறது. திரிலோகாதிபதியான தேவராஜன் நூறுதேவ வருடங்கள் ஆட்சி செய்து மறைய தபோபலம் மிக்க புதிய இந்திரன் ஆட்சிக்கு வருவது தான் நேரான முறை.

இவ்வித நேரான வழியில் வரும் இந்திரர்களுக்கே இந்திராணி மனைவியாக இருந்து வந்தாள். இந்த நேரிய வழியை விட இந்திர பதவியை அடைய இன்னொரு குறுக்கு வழியையும் சாஸ்திரங்கள் குறிப்பிட்டிருந்தன.

நூறு முறை எதிர்க்கும் வீரர்களையெல்லாம் தோற்கடித்து அவர்களிடம் திறைப்பொருள் வாங்கி நூறு அஸ்வமேதயாகங்களைக் குறையின்றி நிறைவு செய்யும் வீரனை யாகபலன் இந்திர பதவியில் இருத்தும் என சாஸ்திரங்கள் கூறியுள்ளன.

அஸ்வமேதயாகம் செய்பவர் தன் வீர பராக்கிரமங்களை ஒரு பட்டயத்தில் எழுதி யாகக்குதிரையின் கழுத்தில் தொங்க விட்டு இக்குதிரையைப் பிடித்துக் கட்டிச் சமராட விருப்பமுள்ளவர் குதிரையைப் பிடித்துக் கட்டலாம் என்று சவாலான வாக்கியங்கள் பட்டயத்தில் எழுதப்பட்டிருக்கும் இப்படியான வீரவசனங்கள் கொண்ட பட்டயத்தினைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தன் விருப்பத்துக்கு செல்லும் யாகக் குதிரையை யாராவது பிடித்துக் கட்டினால் அவருக்கும் குதிரையுடன் வரும் சைன்யத்துக்கும் பெரும் போர் மூளும். அவரைத் தோற்கடித்து திறைப் பொருள் பெற்றே யாகக்குதிரையும் சைனியமும் மேலே செல்லும்.

இப்படி பாரத வேந்தர்களை வீரர்களை நூறு முறை தோல்வியுறச் செய்து நூறு அஸ்வமேதயாகங்களை விக்கினம் இன்றிச் செய்து முடிக்கும் மகானுபாவரை யாக பலன் பழைய இந்திரனை நீக்கி விட்டு இந்திரபதவியில் இருத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

பாரத தேச சூரியகுல, சந்திர குல வேந்தர் பெரும் பிரயத்தனங்களுடன் தொண்ணூறுயாகங்கள் கூடச் செய்துள்ளனர். நூறு யாகங்களைச் செய்ய யாராலும் முடியவில்லை இந்த யாக அனுஷ்டிப்பு இந்திர பதவியை எதிர் நோக்குவதாக இருப்பதால், பதவியில் இருக்கும் இந்திரன் ஏதாவது செய்து யாகம் நிறைவேறாமல் தடுத்து விடுவான்.

சகரர் என்ற சூரிய குல மன்னர் தன் வீரப் புகழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி குதிரைக்கழுத்தில் கட்டி குதிரையை தன் இஷ்டப்படி போக விட்டு குதிரைக்குப் பின்னால் தன் மக்களையும் பெரும் சைனியத்தையும் அனுப்பி இருந்தார்.

இந்திரன் மழைமேகங்களால் உலகை இருளச் செய்து குதிரையைப் பாதாளம் கொண்டு போய் கபில முனிவரின் ஆச்சிரமத்தில் மறைத்து விட்டான்.

யாகக் குதிரையை எங்கு தேடியும் காணாததால் சகர குமாரர்களும் படைகளும் வட கீழ் பகுதியில் பூமியைத் தோண்டி பாதாளம் சென்று கபிலர் ஆச்சிரமத்தில் குதிரையைக் கண்டனர், முனிவர்தான் குதிரையைக் கொண்டு வந்து மறைத்து வைத்தார் என்று தவறாக எண்ணிப் படையினர் ஆர்ப்பாட்டம் செய்ததால் முனிவர் கண்களைத் திறந்து பார்த்தார். முன் வரிசையில் நின்ற சகர குமாரர்களும் படையில் ஒரு பிரிவினரும் எரிந்து சாம்பராயினர்.

இதைக் கேள்வியுற்ற சகர மன்னர் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்தார். அந்த அரச வம்சத்தினர் ஆட்சி செய்து இறக்கும் தறுவாயில் முனிவரின் பார்வையால் எரிந்த அரச குமாரர்கள் நற்கதி எய்தத் தக்க தருமங்கள் செய்யுங்கள் என்று கூறி மறைந்ததால் வரும் வரும் அரசர்கள் பெரும் முயற்சி செய்து வந்தனர்.

இந்தக் குலத்தில் பல மன்னர்களுக்குப் பின் ஆட்சிக்கு வந்த பகீரதன் என்னும் மன்னன் சிவபிரானைக் குறித்தும் கங்கையைக் குறித்தும் விடா முயற்சியாய் மாறி மாறித்தவம் செய்துசிவ பெருமான் முடியில் இருக்கும் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்து எரிந்தவர்களின் அஸ்தியைக் கங்கை நீர் நனைத்ததால் சகர குமாரர்கள் நற்கதியடையச் செய்தான்.

இக்கதையை விஸ்வாமித்திரர் இராமாயணத்தில் குலமுறை கிளர்த்தும் படலத்தில் இராம இலட்சுமணர்களுக்குக் கூறுகிறார் இதனால் தொடர் முயற்சிகளுக்குப் பகீரத முயற்சி என்றும் கங்கைக்குப் பகீரதி என்றும் காரணப் பெயர்கள் வந்தன.

இந்த விதமாகப் பதவியில் இருக்கும் இந்திரன் யாகக் குதிரையைக் கொண்டு போய் மறைத்து வந்ததால் நூறு அஸ்வமேத யாகம் செய்து குறுக்கு வழியில் இந்திர பதவியை அடைவதென்பது நடக்க முடியாத காரியமாகவே தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் பெற்ற தமிழர் திருவள்ளுவர்

தமிழ் முன்னோர்கள் வாழும் முறைகளை நன்கு ஆராய்ந்து திட்டமிட்டு அமைத்து மிக மேலான நிலையில் வாழ்ந்துள்ளனர். வாழும் நிலங்ளை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பிரித்தனர். உண்ணும் உணவை அறுசுவை என்று ஆறாக வகுத்தனர். கேட்கும் சுவைகளை நவரசம் என்று ஒன்பதாகப் பிரித்தனர். தமிழ் நங்கையர்களின் ஒழுக்க வாழ்வுக்கு நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பு என ஒழுக்க வேலி அமைத்தனர்

வாழ்க்கையின் முக்கிய துறை ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் வகுத்து இப்படித் தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் மிக மேலான முறையில் வாழ்க்கையை நடத்தினார். தங்கள் உயிர் மூச்சான தங்கத் தமிழ்மொழி வளர்ச்சிக்காகச் சங்கம் அமைத்து தாய் மொழி வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வந்துள்ளனர்.

உலகில் தோன்றிய மனித இனங்கள் தங்கள் வாழ்வு நிலையில் இவ்வளவு அக்கறை செலுத்தி வந்திருப்பதாகத் தெரியவில்லை. இவ்வளவு கவனமாக வாழும் நிலைகளை ஆராய்ந்து அமைத்த வணக்கத்துக்கு உரிய முன்னோர்கள் தங்கள் இனத்துக்கு அகில உலகிலும் புகழ் சேர்த்த அறிஞர்கள், பெரியார்கள், அறிஞர்களை சரித்திர ரீதியாக எழுதி வைக்கும் பழக்கம் இல்லாது இருந்து வந்திருப்பது தமிழினத்தின் மிகப்பெரிய துரதிஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

கல்வியில் பெரிய கம்பர், உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவர் போன்ற மாமேதைகளுக்கே சரித்திரம் இல்லை என்பது வேதனைக்குரியதே. கர்ணன் பிறப்பும் பின்னாளில் துலங்கியது. கம்பர் பிறப்பைப் பற்றி இன்னும் அறிந்தார் இல்லை என்று புலவர் புராண ஆசிரியர் தண்டாயுதபாணி சுவாமிகள் மிகுந்த வேதனையோடு கூறியுள்ளார். கம்பருக்கு ஒரு வரலாறு தயாரித்து விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகீரதப்பிரயத்தனம் செய்து வரும் ஆராய்ச்சியாளர்கள் சுவாமிகள் கூறுவது முக்காலும் உண்மை என்று ஏற்றுள்ளனர். அகில உலக மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு உலகிலுள்ள எல்லா இனமக்களாலும் போற்றப்படும் அறிவு நூலை இயற்றிய தெய்வீகப்புலவருக்கு வரலாறு இல்லை எனில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியினர் என்று தமிழர்கள் பெருமை பேசிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.

திருவள்ளுவநாயனார்புராணம், ஞானாம்ருதஅகவல், ஞானவெட்டியான் போன்ற மற்றுமுள்ள நூல்களில் திருவள்ளுவர் பற்றி குறிப்புக்களைக் காணக்கூடியதாயுள்ளது.

படைப்புக் கடவுளான பிரம்மா ஆதியில் யாகம் செய்தார். நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த யாக கும்பத்தில் இருந்து குறுமுனி அகத்தியர் தோன்றினார். இவர் சமுத்திர கன்னியை மணந்து பெருஞ்சாகரன் என்றொரு புத்திரனைப் பெற்றார்.

அவர் திருவாரூர்ப் புலச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப் பெற்று அவருக்குச் சகல சாஸ்திரங்களையும் கற்பித்து செப தீபங்களில் ஈடுபட்டு பிராமண முறையில் வாழ வழி வகுத்தார். அந்நாளில் பிரம்ம வம்சத்தில் வந்த தவ முனி என்பவர் அருள் நங்கை என்ற பிராமண மாதை மணந்து ஒரு புத்திரியைப் பெற்று அவ்விடத்திலேயே விட்டுத் தவம் செய்யக் கணவனும் மனைவியும் விரால்மலைக்குச் சென்றனர்.

அவர்கள் ஈன்ற பெண் குழந்தையை உறையூர்ப்பெரும் பறையன் எடுத்து வளர்த்து வந்தார். நோய் கண்டு பறையன் இறக்க அடுத்த ஊர் மேலூர் அந்தணன் நீதிஐயன் என்பவர் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார்.

சாஸ்திரப் பண்டிதரான பகவன் காசியாத்திரையாக வந்து மேலூர் மடத்தில் தங்கி இருந்து உணவு சமைத்துக் கொண்டிருந்த வேளையில் நீதிஐயனால் வளர்க்கப்படும் பெண் அங்கு வந்தாள். அவளைக் கண்டதும் பகவன் ''நீ புலச்சியோ, வலச்சியோ'' ஏசித்துரத்தியதுடன் கையில் இருந்த சட்டு வத்தாலும் அவள் தலையில் அடித்து விட்டார். அவளுக்கு தலையில் சிறு காயம் ஏற்பட்டு இரத்தம் வர அவள் பயந்து வீட்டுக்கு ஓடினாள்.

பகவன் காசிக்கு யாத்திரை சென்று கங்கைக் கரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டுகாலம் தவம் செய்து இருந்து விட்டு கங்காதீர்த்தமுடன் பகவன் இராமேஸ்வரத்துக்கு யாத்திரையாக வந்த இடத்தில் மேலூர் மடத்தில் மீண்டும் தங்கி இருந்தார். நீதிஐயன் வளர்த்த பெண் பெரியவளாகி மகாலட்சுமி போல் பேரெழில் மங்கையாகக் காட்சியளித்தாள். வாலிபரான பகவன் அப்பெண்ணின் வனப்பில் மயங்கினார் .இதை அறிந்த நீதிஐயர் பகவனிடம் வந்து ''என்பெண்ணை மணந்து கொண்டு இங்கேயே தங்கிவிடுங்கள் '' என்று வேண்டினார். அப்பெண்ணுக்கும் பகவனுக்கும் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

ஐந்தாம் நாள் மணமகளை நாற்காலியில் இருத்தித் தலைமயிரை வகிர்ந்து எண்ணெய் தடவி முழுக்காட்ட முயன்ற போது முன் தான் சட்டுவத்தால் அடித்த வடு இருப்பதைக் கண்ட பகவன் ''நீ ஆதியில் வளர்ந்தவளல்லவா? '' என்று திருமணத்தை முறித்துக்கொண்டு விலகிச் சென்றார். பகவன் நீ ஆதியில் வளர்ந்தவளல்லவா?'' என்று கேட்ட ''ஆதி '' என்ற பெயரே திருவள்ளுவரின் அன்னையின் பெயராக விளங்குகிறது. அவரின் இயற்பெயரை எந்த நூலிலும் காண முடிவதில்லை.

திருமண சமயத்திலேயே கணவனைப் பிரிந்து அந்த அபாக்கியவதி பகவனைத் தேடிச்சென்று கண்டு ''ஐயா உமக்கும் எனக்கும் தெய்வச் செயலாலே தான் இந்த இணைப்பு ஏற்பட்டது. அப்படி இருக்க ஒரு குற்றமும் புரியாத என்னை விலக்கி விட்டுச் செல்லுதல் கற்றறிந்த மேலோர் ஆகிய தங்களுக்கு ஏற்புடையதா?'' என்று கேட்டாள்.

அப்பெண்ணின் கேள்வியால் இரங்கிய பகவன் ''நீ பெறும் பிள்ளைகளை அவ்விடத்திலேயே விட்டு வர சம்மதித்தால் உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன்'' என்றார். எந்தப் பெண்ணாலும் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டே ஆதிபகவனுடன் இல்லறம் நடத்தினாள்.

இவர்களுக்கு ஔவை, உப்பை, அதிகமான், கபிலர், சள்ளியம்மை என்று பல குழந்தைகள் வெவ்வேறு இடங்களில், காலங்களில் பிறந்தன. பிள்ளைகளை விட்டுப்பிரிய முடியாமல் தாய் கலங்கிய போது அந்த ஞானக்குழந்தைகள் ஒவ்வொன்றும் அன்னைக்குத் தைரியமூட்டி ஒவ்வொரு பாடல் கூறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைலாப்பூர் இலுப்பைத் தோப்பில் திரு வள்ளுவர் பிறந்தார். இந்தப்பிள்ளையை எப்படி விட்டுப்பிரிவேன் என்று தாய் கலங்கிய போது அந்தப் பச்சிளம் பாலகன், ''அம்மையே! எல்லா உயிர்களையும் காக்க ஒரு ஈசன் இருக்கிறான். அவ்வுயிர்களில் நானும் ஒருவன். நீ பயப்படாமல் போ அம்மா'' என்ற கருத்துப்பட அந்தப்பாலகன் கூறிய வெண்பா பின்வருமாறு

''எவ்வுயிரும் காக்க ஒரு ஈசன்
உண்டோ இல்லையோ
அவ்வுயிர்களில் யானும் ஒருவனல்லவோ - வவ்வி
யருகுவது கண்டிங்கு கலங்குவதேனன்னே
வருகுவது தானே வரும்....''

என்று அப்பிள்ளை கூற அதுகேட்டு அதிசயித்த பெற்றோர் யாத்திரை சென்றனர். பின் இக்குழந்தையை எடுத்து ஒரு குடும்பத்தினர் வள்ளுவன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். ஓரளவு பராய வயதடைந்த வள்ளுவர் பக்கத்திலுள்ள மலைக்குச் சென்று தவம் செய்யப் போகிறேன் என்று வளர்த்தவர்களுக்குக்கூறி விடை பெற்று மலைக்குச் சென்று போகர். திருமூலர் போன்ற மகான்களைத் தரிசித்தார். அவர்களிடம் கல்வி கற்று தவம் செய்து கொண்டு இருந்தார்.

காவரிப் பாக்கம் என்னும் ஊரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் சொந்தமாக உள்ள மார்க்க சகாயம் என்னும் கனவான் வந்து திருவள்ளுவரிடம் தன் கமச் செய்கையில் ஒரு பீடை பிடித்து நெற்பயிர்கள் நாசமடைவதாகவும் அந்தப் பீடையை இல்லாமல் செய்தால் பெரும் தானம் தருவதாகவும் வேண்டினார்.

திருவள்ளுவர் வயல்களில் விழுந்து நாசம் செய்யும் பீடை இல்லாதொழிய அருளுமாறு இறைவனிடம் வேண்டி திருநீற்றுப் பஞ்சாட்சர செபம் செய்து வந்தார். ஆச்சரியகரமாக வயல்களில் அந்நோய் இல்லாதொழிந்தது. அது கண்டு மகிழ்ந்த செல்வர் திருவள்ளுவருக்கு இரட்டிப்பாகத் தானம் வழங்கினார். அதை அவர் கண்முன்னே வள்ளுவர் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து விட்டார். அது கண்டு பிரமித்த செல்வர் தன் மகள் வாசுகியை திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார்.

அதற்குத் திருவள்ளுவர் ''நான் தரும் மணலைச் சோறாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்துத்தர உங்கள் மகளால் முடியுமானால் செய்து கொள்கிறேன்'' என்றார். அதை வாசுகி அம்மையார் ஏற்றுத் தன் பதிவிரதைச் சிறப்பால் வெறும் மணலை சோறாகச் சமைத்து பக்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக விளங்கினார்.

வாசுகியை திருமணம் செய்து கொண்ட திருவள்ளுவர் மைலாப்பூரில் ஒரு மனையில் இல்லறம் நடத்திவந்தார். ஏலவே சிங்கன் என்ற வர்த்தகரிடம் நூல் வாங்கி ஆடை நெய்து விற்று மிகச் சிக்கனமாக வாழ்ந்து வந்தார்.

அந்நாளில் திருவாலங்காட்டில் காளி தேவியைத் தோற்கடிக்க இறைவன் ஊர்த்தவத்தாண்டவம் ஆடிய போது காதில் இருந்த குழை பறந்து எங்கேயோ விழுந்து விட்டது. அந்தக் குழை எங்கே? போய் இருக்கும் என்று தேவர்கள் வந்து மயிலாப்பூரில் வாழும் திருவள்ளுவரிடம் கேட்டனர். அதற்கு அவர் தாமரை மலரில் இருக்கும் பிரம்மா, தேவர் உலகை ஆளும் தெய்வேந்திரன், மூன்றடி நிலம் யாசித்து வாங்கி இந்தப் பூ உலகை ஒரு அடியால் அளந்து பிரம்மிக்க வைத்த நாராயணன், என்று மிக மிகப் பெரியவர்கள் இருக்கத் தாண்டவம் ஆடும் போதெல்லாம் காதில் அணிந்துள்ள குழை வந்து வந்து கன்னத்தில் இடிக்கும். பிஞ்ஞகனின் கூத்துப் பற்றி இழை நக்கி நூல் நெருடி ஆடை நெய்து கஷ்டஜீவியம் செய்யும் இந்த ஏழை அறிவேனோ? என்ற கருத்தில் திருவள்ளுவர் அமரர்களுக்குக் கூறிய வெண்பா பின்வருமாறு.

''பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவியளந்தோனும் தாமிருக்க -நாவ்
விழை நக்கி நூல் நெருடும் ஏழையறிவேனோ
குழை நக்கும் பிஞ்ஞகனின் கூத்து

இல்லிற்கு வரும் அதிதிகளுக்கே முதலில் அமுது வழங்க வேண்டும் என்றும் தாம் பிறகே சாப்பிடுவதாகவும் வள்ளுவர் மனைவிக்கு கூறி இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துறவிக்கு வேந்தன் துரும்பு"

இந்த உலகையும் சொந்த பந்தங்களையும் முற்றாகத்துறந்து இறைவனின் அருளை நாடி நிற்கும் ஞான சீடர்களால் மட்டுமே அதிகார ஆடம்பரங்களுடன் நாடாளும் மன்னனைத் துரும்பாக் கருத முடியும்.

இதன் காரணமாகவே "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்ற வாசகம் வழக்கில் இருந்து வருகிறது. ஆனால் மன்னனின் சபையில் இருந்து அரசனைச் சிறப்பித்து பரணிபாடி முகஸ்திதி செய்து அவர்கள் மகிழ்ந்து ஈயும் சன்மானங்களால் உயிர் வாழும் புலவர்களால் அரசனின் கருத்துக்கு எதிராக ஏதாவது சொல்வதென்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத காரியமே.

ஆயினும் வல்லமை மிக்க குலோத்துங்க மன்னனுக்கும், கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கும் இடையே அரசசபையில் ஏற்பட்ட கடுமையான வாக்குவாதத்தால் சீற்றமடைந்த வேந்தன் கம்பரைப்பார்த்து,

"புலவர்கள் போற்றுவார்கள். பொருள் கொடாவிடில் போற்றிய சொற்களை மாற்றி தூற்றவும் செய்வார்கள். பொல்லாதவன் கண்ணர்கள், புலவரான நீர் என் சபையிலும் நாட்டிலும் இருப்பதை நான் விரும்பவில்லை. நீர் எழுந்து போகலாம்" என்று அரசன் நிர்த்தாட்சண்யமாகக் கூறினான்.

வேந்தனையும் துரும்பாக மதிக்கும் கல்வியாற்றல் மிக்க கம்பர் துள்ளியெழுந்து அரசனை வெறித்துப் பார்த்து, மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ, உன்னிடம் பாடிப்பிழைக்கலாம் என்ற குறுகிய எண்ணத்திலேயோ நான் தமிழ் கற்றேன். என்னை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளாத அரசனும் இருக்க முடியுமோ என்று கூறி சிரித்து விட்டு, அரச சபையை விட்டு எழுந்து போனார்.

அரசனும் சபையினரும் பிரமித்து ஆடாமல் அசையாமல் பேச்சு மூச்சு இன்றி அப்படியே சிறிது நேரம் இருந்தனர்.

தமிழ் நாட்டின் ஈடு இணையற்ற பெரும்புலவரான கம்பர் சோழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை விட்டு வெளியேறி இலங்கை சென்று பின் பாண்டிய நாட்டுக்கு வந்தார். பாண்டிய மன்னனும் தேவியும் மகிழ்ச்சி பொங்க வரவேற்று உபசரித்தனர்.

சில நாட்கள் இங்கிருந்து நாடுகளைச் சுற்றிப்பார்க்கப் போகிறேன் என்று நயமாகக் கூறி அரசனிடம் விடைபெற்று ஆந்திரநாடு சென்றார். ஆந்திராவில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வாரங்கல் நாட்டு மன்னன் பிரதாப உருத்திரனின் சபைக்குச் சென்றார்.

மன்னன் அவரது கல்வி அறிவு ஒளிரும் முகத்தைக் கண்டு யாரோ பெரியவர் என்று ஆசனம் கொடுத்து இருக்கச் செய்து உபசரித்து விசாரித்தான்.

நான் கம்பப்புலவரின் அடப்பக்காரன். புலவர் கவிதை எழுதும் சமயங்களிலும் உரையாற்றும் வேளைகளிலும் புலவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பணியைச் செய்பவன். ஐயா நாடு சுற்றிப் பார்க்கப் போய் இருப்பதால் இந்த இடைக்காலத்தில் நாமும் சில ஊர்களைப் பார்ப்போம் என்று வந்தேன் என்றார்.

அவர் கூறிய விபரங்களைக் கேட்ட அரசன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான். கம்பரின் இராமாயணத்தை அங்குள்ள புலவர்கள் போற்றிப் புகழ்வதைக் கேட்டிருந்த மன்னன் அந்த மகாகவியைக் காண முடியாவிட்டாலும், கம்பரின் அடப்பக்காரராவது நம்மிடம் இருக்கிறாரே என்பது பிரதாப உருத்திரனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

எனவே அடப்பக்காரரை மன்னன் நன்கு மதித்து வந்தான் சபையை விட்டுக் கம்பர் விலகிப் போனதும் தன்னைவிட்டு லட்சுமியே நிங்கிப் போனதாகச் சோழ மன்னன் உணர்ந்து விசனப்பட்டான்.

நேரத்துக்கு அறுசுவை உண்பதை மறந்தான். மகாராணிகளுடன் சிரித்து அளவளாவுவதும் நின்றது. அமைச்சாகளுடனும் சுமுகமாகப் பேசுவது இல்லை. காதலியைப் பிரிந்த காதலன் போல் மன்னன் மௌனம் சாதித்தான். அரசருக்கு என்ன நேர்ந்தது என்று அரண்மனை வட்டாரம் கலங்கியது.

சடையப்ப வள்ளல் வந்து பேச முயன்ற போதும் கவிச்சக் கரவர்த்தி எங்கே போய் இருந்தாலும் தேடி அழைத்து வரத்தகுந்த ஏற்பாடு செய்யுங்கள் என்று குலோத்துங்கன் கூறினான். இது புலவரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த சோகந்தான் என்று எண்ணி ராணிகளும், மந்திரிகளும் சற்று ஆறுதல் அடைந்தனர்.

புலவருக்கும், அரசனுக்கும் ஏற்பட்ட தகராறுக்குக் காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது. முன் தினம் அரசரும் கம்பரும் அரசாங்கமலர் வனத்தில் உலாவிக் கொண்டு நின்றனர். அவ்வேளை சந்தோஷ மிகுதியால் இந்தத் தேசம் எனக்கு ஐக்கியம் என்றான் மன்னன் அந்தக்கூற்றைக் கேட்ட கம்பர் இந்தத் தேசம் உங்களுக்கு ஐக்கியம். நீங்கள் எனக்கு ஐக்கியம். என்று சிரித்துக் கொண்டு கூறினார்.

கம்பரின் கூற்று அரசனின் மனதில் சுருக்கென்று தைத்தது.நான் நாடாளும் மன்னன். இந்த தேசம் எனக்கு ஐக்கியம் என்று சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. இவர் என் போல அரசர்களிடம் பாடிப் பரிசுப் பெற்று ஜீவனம் செய்பவர். இவர் என் நாட்டையும் என்னையும் தனக்கு அடிமைப் போல எப்படிப் பேசலாம். இவர் வாய்த்துடுக்கை அடக்க வேண்டும் என்று எண்ணியவனாய் புலவருக்குத் தெரியாமல் அரண்மனைக்கு வந்து பொன்னி எனும் தாசியை அழைத்து ''நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். கம்பர் பூங்காவில் நிற்கிறார் சற்று நேரத்தில் உன் மாளிகை வழியாய் வருவார். அவரை உனக்கு அடிமை என்று ஒரு சீட்டெழுதி வந்து தந்தால் மிகவும் மகிழ்வேன்" என்றான் அரசன். இதோ எழுதி வந்து தருகிறேன் என்று கூறி பொன்னி தன் வீட்டிற்குச் சென்றாள்.

உலாவிக் கொண்டு நின்ற கம்பர் பார்த்தார் அரசனைக் காணவில்லை. நீங்கள் எனக்கு ஐக்கியம் என்று கூறிய வார்த்தை அரசன் மனதை சுட்டது போலும் என்று எண்ணிச் சிரித்தவராய் வீடு நோக்கி வந்தார். பொன்னியின் சேடி வந்து ஐயா உங்களை எஜமானி அழைக்கிறார் என்றாள். கம்பர் அவள் மாளிகைக்குள் போனார். தயராக நின்ற அப்பெண் புலவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அம்மா நீங்கள் அரசருக்கு வேண்டியவர். நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன் என்றார். அப் பெண் ஒரு ஓலையையும் எழுத்தாணியும் கொடுத்து எனக்கு அடிமை என்று எழுதி ஒப்பமிட்டுத் தாருங்கள் என்றாள். பொன்னிக்குள் கம்பன் அடிமை என்று எழுதிக் கொடுத்து விட்டு இதெல்லாம் தனக்கு அவமானம் உண்டாக்க அரசன் செய்யும் சூழ்ச்சி என எண்ணியவராய் வீட்டுக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு நாள் கவிஞர் அரச சபைக்குப் போன போது குலோத் துங்கன் கும்மாளமிட்டுச் சிரித்தான் அரசனைத் தொடர்ந்து சபை சிரித்தது. ''ஏன் சிரிக்கிறீகள் " என்று கம்பர் கேட்டார். சிரிக்காமல் என்ன செய்வது நாடு போற்றும் கவிச்சக்கரவர்த்தி கேவலம் ஒரு தாசிக்கு அடிமை என்று சீட்டெழுதிக் கொடுத்திருப்பதைக்கண்டு" என்று அரசன் கிண்டலாகக் கூறினான். நான் அப்படி ஒருவருக்கும் சீட்டெழுதி கொடுக்கவில்லை. அவசரமாக மறுத்தார் கம்பர். ஓலை அவர் கையில் கொடுக்கப்பட்டது. ''பொன்னித் தாய்க்குக் கம்பன் அடிமை" ஓலையைப் பலமாக வாசித்த கவிஞர் சபையைப் பார்த்து ''பொன் பொருள் போன்ற செல்வத்துக்குத் தாய்.....ஐஸ்வரியத்தின் அதிபதி மகாலட்சுமிக்குக் கம்பன் அடிமை என்று எழுதி இருக்கிறது " என்றார் கம்பர்.

அந்த விளக்கத்தைக் கேட்டு குலோத்துங்கன் சிம்மாசனத்தை விட்டுக் கொதித்து எழுந்தான். அவன் வாக்கில் இருந்து கனல் துண்டங்களாக வார்த்தைகள் பறந்தன. ''போற்றினும் போற்றுவார் பொருள் கொடாவிடில் சொன்ன சொல்லை மாற்றித்தூற்றுவார் புலவர்கள் பொல்லாத வன்கண்ணாளர்கள் என்றான் கம்பரைப்பார்த்து; நீர் என் சபையில் மட்டுமன்றி என் நாட்டிலே இருக்கவேண்டாம் என்று நிர்த்தாட்சணயமாகக் கூறினான். கம்பரும் துள்ளியெழுந்து நீதான் ஒரு மன்னவனா? உன்னை நம்பித்தானா தமிழ் கற்றேன் என்னை ஏற்றுக்கொள்ளாத வேந்தர்கள் இருக்கிறார்களா? என்று மன்னனுக்கு நேர்ச்சவால் விட்டு சோழநாட்டை விட்டு வெளியேறினார். இதுதான் நடந்தது.

ஆதவன் புதல்வன் மூத்த அறிவினை அளிக்கும் அண்ணல் போதவன் இராம கதை புகன்றருள் புனிதன் மாதவன் கம்பன் என்ற இந்தச் செய்யுள் கம்பருடைய தந்தை ஆதித்தனா? அல்லது கம்பரே ஆதித்தனா? இப்படி எத்தனையோ இடங்கள் ஆராய்ச்சியாளர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இவைகளை எந்த ஆதாரங்களைக் கொண்டு தெளிவிப்பது என்று அவர்கள் கவலை கொண்டுள்ளனர். நாடு காக்கும் அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் ஆகையால் அரசன் உயிர், குடிமக்கள் வெறும் உடல்களே என்று காலம் காலமாகப் பேணப்பட்டு வந்த பழைய மரபை தலைகீழாக மாற்றி மக்கள் தான் உயிர், அரசன் வெறும் உடலே என்று புரட்சிகரமாக ஜனநாயகத்துக்கு வித்திட்ட கவிஞன் கம்பரே என்று போற்றப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலை அருகி, அழியும் நிலை

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பழமைஉடைய தமிழ் உழவர்களின் வாழ்விடம் தம்பலகமம். இங்கு சங்கீதக்கலையும், ஆயுள்வேத வைத்தியக் கலையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து வளர்ந்தோங்கி வந்தன.

பிரபல சுதேச ஆயுள் வேத வைத்தியர்களில் பெரும் பாலானோர் நாட்டுக்கூத்து நாடகநடிகர்களாக விளங்கினர். முன் நடந்த நாட்டுக்கூத்திலும் பின் நடைபெற்ற நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர்களின் பெற்றோர் இட்ட பெயர்கள் அடியோடு மறைந்து அவர்கள் நடித்துப் புகழ் ஈட்டிய நாடகப்பாத்திர பெயர்களே இன்றும் பிரசித்தமாக வழங்கப்பட்டு வருவது மேற்படி கலைகள் தம்பலகமத்தில் செழித்தோங்கி வளர்ந்து வந்ததற்குச் சிறந்த சான்றுகளாகும்.

தம்பலகமம் கரைச்சையில் வசித்து வந்த பொன்னையா என்பவர் சிறுத் தொண்டர் நாடகத்தில் நடித்து பார்வையாளர் மனதில் பக்தி உணர்வை ஊட்டியவர். ஆகவே இவரை சிறுத்தொண்டர் அல்லது தொண்டர் பொன்னையா என்றே மக்கள் குறிப்பிட்டனர். இவரது நான்காவது மகன் பொ.கணபதிப்பிள்ளை மாவட்டத்தில் சிறந்த மிருதங்க வித்துவான். அரங்கேற்ற மேடைகளில் மிருதங்கம் வாசிக்க திரு.கணபதிப்பிள்ளையே அழைக்கப்படுவார்.

நாயன்மார்திடலில் காளியப்பு, இவர் அரிச்சந்திரன் நாடகத்தில் விசுவாமித்திரராகத் திறம்பட நடித்து ரசிகர்களின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டவர். நாடகம் பார்க்கின்றோம் என்பதையும் மறந்து மேடையில் இவர் ஆர்ப்பாட்டமாகத் தோன்றிய போது அதைப்பார்க்க சகியாத பார்வையாளர்கள் கல் எறிந்து சிறு குழப்பத்தையே உண்டாக்கினர். அன்றிலிருந்து இவரது காளியப்பு என்று பெற்றோர் இட்ட பெயர் மறைந்து விசுவாமித்திரர் என்றே அழைக்கப்பட்டார்.

நாயன்மார்திடலில் திரு.பா.வேலுப்பிள்ளை இவர் சிறந்த ராஜபாட் நடிகர். கண்ணகி நாடகத்தில் கோவலனாகவும் சத்தியவானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமனாகவும் நடித்துப் பெரும் புகழ் ஈட்டினார். நெடியவலிய ஆகிருதியான தோற்றமுடைய இவர், கருமை உருவுடன் யமனாக தோன்றி பார்வையாளர் மனங்களில் பயத்தை ஊட்டினார். இவரை மக்கள் மறைமுகமாக யமன் என்றே அழைத்து வந்தனர். இவர் ஒரு கைராசிக்கார ஆயுள்வேத வைத்தியர், ஆர்மோனிய வாசிப்பாளர். இவரது தந்தையாரும் சுதேசவைத்தியரே இன்னும் சாமியார், மந்திரியார், சீதை போன்ற நாடகப்பாத்திர பெயர்களுடன் விளங்கிய பலர் இங்கு உள்ளனர்.

## சங்கீதக் கலையும் வைத்தியக் கலையும்

தம்பலகமத்தில் வைத்தியக்கலை, நாட்டுக்கூத்து, நாடகம், நாட்டியம் போன்ற கலைகளும் இணைந்து வளர்சியடைந்து வந்தன. கர்நாடகசங்கீதத்தை நன்கு தெரிந்தவர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். நெல்விளைவிக்கும் உழவர்களும் நோய்தீர்க்கும் மருத்துவர்களும் அரங்கேற்று மேடைகளில் தோன்றி நடித்து ரசிகர்களை மகிழ்வித்து வந்தனர். தம்பலகமத்துச் சங்கீதக்காரர்களுக்கு தென்னிந்திய ஆர்மோனிய மிருதங்க வித்துவான்களின் வரவு வரப்பிரசாதமாக அமைந்தது. இவர்களிடம் சங்கீதம் கற்றவர்கள் திறமை உடையவர்களாக உள்ளனர்.

சுமார் கால் மைல்களுக்கும் குறைந்த இடைவெளியில் வட்டவடிவமாக சங்கிலித் தொடர் போல் நெல்வயல்களுடன் தென்னஞ்சோலையாக இருபத்திரண்டு ஊர்களைக் கொண்ட ஊர்த்தொகுப்பே தம்பலகமம். இந்த ஊர்த் தொகுதிகளுக்கு மத்தியிலுள்ள கள்ளிமேட்டு ஆலையடி மைதானமே நாட்டுக்கூத்து நாடகங்கள் அரங்கேற்றும் களமாக நீண்ட காலம் இருந்து வந்தது. சுற்றியுள்ள ஊர்களில் தயாராகும் நாடகங்கள் ஆலையடி மைதானமேடையில் தான் அரங்கேற்றம் செய்யப்பட்டு வந்தன. தை மாதம் பிறந்தும் பழக்கப்பட்ட நாடகங்கள் கள்ளிமேட்டு ஆலையடி மைதான அரங்கேற்று மேடையில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மேடையேறும். தம்பலகமம் ஊர்களில் இருந்து மட்டும் அன்றி மாவட்டத்தின் பல ஊர்களில் இருந்தும் திரளான மக்கள் வாகனங்களில் வந்து நாடகம் பார்த்து மகிழ்வர்கள். சிப்பித்திடல், நாயன்மார்திடல், வைரத்தடி ஆகிய மைதானங்களில் பழக்கப்படும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. கோயில் குடியிருப்பில் டிக்கட் விக்கப்பட்டு நாடகங்கள் நடத்தப்பட்டு வந்தன. பல்லாயிரக்கணக்கான ஆண் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர்கள் இருந்தும் நாடகம் பார்த்து மகிழ்ந்த இடங்கள் இன்று பழுதடைந்து இருக்கின்றன. நாடகம் பழக்குவோரும் இல்லை. அரங்கேற்று வாரும் இல்லை திரைப்படங்களின் வரவுதான் இதற்குக் காரணம் என்று தெரிகிறது. சினிமாப்படங்கள் தயாராகும் தமிழ் நாட்டிலே நாடகக்கலை போற்றிவளர்க்கப்பட்டு வருகின்றது. சினிமாவுக்கு நாடகம் தான் தாய், பயிற்சிக்களம் என்றும் மதிக்கின்றார்கள். எனவே தம்பலகமத்தில் தொன்று தொட்டு வளர்ந்தோங்கி வந்த முத்தமிழின் ஓர் அங்கமான நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்து முன் போல் வளர்ந்தோங்கச் செய்வது இன்றைய இளம் கலைஞர்களின் இன்றியமையாத கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சக்கரவர்த்தி கம்பரின் களிப்பூட்டும் சிரிப்புக் கவிதைகள்

கல்வியில் பெரியவன் கம்பன் என்ற சொற்றொடர் பிரசித்தம் வாய்ந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாம்பின் கால்களை இன்னொரு பாம்பினால் தான் நன்கு அறிய முடியும் என்று கூறுவதற்கேற்ப ஒரு புலவராகிய இவர் இன்னொரு பெரும் புலவராகிய கம்பரைப் பற்றி நன்கு அறிந்து நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

கம்பரின் கவித்திறன் ஆச்சரியமானது என்பது பாரதியின் வாதம். கவி அரசர் தமிழ் நாட்டின் தலைசிறந்த புலவர்களைப் பற்றி பேசும் போதெல்லாம் கம்பரை முன் வைத்துப் பேசுவதையும் கம்பர், வள்ளுவர், இளங்கோ என்று கம்பரை முன்வைத்துப் புலவர்களை வரிசைப்படுத்திக் கூறுவதையும் கம்பனென்ற மானிடன் பிறந்து நடமாடிய தமிழ் மண்ணில் தாமும் பிறந்து வாழ்வதை இட்டுப் பாரதியார் பெருமை கொள்வதையும் காண முடிகிறது.

உயரிய கருத்துக்களை ஓசை நயத்துடனும் உவமான அழகுடனும் கவிதை உருவில் எடுத்துக் கூறுவதில் ஈடு இணையற்றவராக இருப்பதுடன் சிரிப்பூட்டும் நகைச்சுவைப் புலமையிலும் கவிச்சக்கரவர்த்தி நிகரற்று விளங்குவதைக் காணலாம். இலங்கை வேந்தனான இராவணன் மாலயனுக்கும் எட்டாத நெஞ்சடைக் கடவுளிடம் நெடிய ஆயுளும் கொடிய வாளும் பெற்றான்.

படைப்புக் கடவுளான பிரம்மனுக்கு கொள்ளுப் பேரன் பிரம்மனிடம் இருந்து அரிய பெரிய அஸ்திர ஸ்திரங்களைப் பெற்றவன். சிறந்த சிவ பக்தன். சமயக்குரவர்களில் முதல்வரான திருஞான சம்பந்தர், ''இராவணன் மேலது நீறு'' என்று பாராட்டி இருப்பதே இலங்கேசனின் சிவ பக்திக்குச் சிறந்த சான்றாகும். இலங்கேசன் வேதாகமங்களைத் துறைபோகக் கற்ற பெரிய கல்விமான் -பெரிய சங்கீத வித்துவான்.

வீணை மீட்டிச் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்துத் தாயார் வழிபட சிவலிங்கம் பெற்றவன். வீரத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெரும் வீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்திலுள்ள வீராதிவீரர்களையெல்லாம் தோற்கடித்து அமரர் உலகுகளையும் சாடி இந்திரன், யமன் திசை நாயகர்களையும் புறங்கண்ட வீரபராக்கிரமன். முக்கண் இறைவன் உறையும் கயிலை மலையை பெயர்த்தெடுக்க முயன்ற இராவணனின் வீரம் பிரசித்தம் வாய்ந்தது. எட்டுத்திக்கும் புகழ் பரப்பி அரசோச்சிய இலங்கை வேந்தனிடம் தேவர்கள் அடிமை வேலைகள் செய்து உயிர் வாழ்ந்தனர்.

தேவர்கள் இலங்கை நாட்டின் கடலோரங்களையும் மலர் வனங்களையும் காவல் காத்து நின்றனர். இலங்கேசனிடம் ஊழியம் புரியும் தேவரும் பிறரும் வேலைக்குச் செல்லும்போதும் வேலை முடிந்து வீடு திரும்பும் போதும் அரசன் முன் தோன்றி அவன் அனுமதி அளித்த பின்பே வேலைக்கோ வீட்டுக்கோ செல்லவேண்டும். இதற்கென ஒரு குறிப்பிட்ட நேரமும் இருந்தது. காலம் தாழ்த்தி அரசன் முன் வர நேர்ந்தால் அதற்கான தகுந்த காரணம் கூறவேண்டும். தவறினால் தண்டனையும் உண்டு.

ஒருநாள் மாலை பணிமுடிந்து திரும்பிய வானவரும் பிறரும் அவசரமாக இராவணனின் அரசிருக்கையை நோக்கி கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர். பிந்தி விட்ட ஒரு அமரர் கூட்டம், 'குறிப்பிட்ட நேரத்துள் அரச சபைக்குப் போய்ச் சேர்ந்து கொள்ள முடியாது போல் இருக்கிறதே. மன்னன் கோபிக்கப் போகிறானே' என்ற பதைபதைப்புடன் தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தது.

அவர்கள் ஓடிவரும் அவசர வேகத்தில்அவர்கள் அணிந்திருந்த மார்பு ஆரங்களும் முடியில் சூடிய மாலைகளும் அலங்கோலமாக தாறுமாறாக விழ அணிந்திருந்த ஆடைகளும் அவிழ்ந்து தொங்கின. அரசன் கோபிக்கப்போகிறானே என்று அச்சத்தால் ஒன்றையும் சரிசெய்து கொள்ள நேரமின்றி உரியும் உத்திரியத்தையும் கையில் அள்ளிக் கொண்டு அரசசபையை நோக்கி அமரர்கள் பரிதாபக் கோலத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள் என்ற கவிச்சக்கரவர்த்தி தரும் நகைச்சுவைச் செய்யுள், இலக்கிய ரசிகர்களை சிரிப்பில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை. அச்செய்யுள் பின்வருமாறு.

'சித்திரப் பத்தியில் தேவர் சென்றனர்
இத்துணை தாழ்ந்தன முனியும் என்று தம்
முத்தினாரங்களும் முடியின் மாலையும்
உத்திரியங்களும் இரிய ஓடுவார்.

சீதாவைத் தேடி இலங்கை வந்த அனுமான் அசோக வனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜானகியைக் கண்டு உரையாடிய மகிழ்சியில் எழிலுறும் அசோக வனத்தை அழித்தான். அதை தடுக்க முயன்ற காவல் வீரர்களையும் கொன்றழித்தான்.

இராவணனின் பராக்கிரமத்தால் அடங்கி ஏவல் செய்யும் அமரர்களுக்கு மாருதி அசோக வனத்தில் செய்த பேரழிவு மகிழ்சியைத் தந்தது. ஆயினும் வெளிப்பார்வைக்குத் துக்கப்படுபவர்கள் போல் நடித்தனர்.

காலனைப் போல் பயம் தரும் சம்புமாலி அனுமானால் வதையுண்ட போது தேவர்களின் ஆனந்தம் அளவு கடந்தது. ஆயினும் பெரும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு துக்கப்படுபவர்கள் போல் திறமையாக நடித்தனர். உள்ளத்தில் மகிழ்சியும் வெளியில் துயரமுமாக இரட்டை வேடத்தில் தோன்றும் அமரர்கள் அரசன் முன் சென்று சம்புமாலி மடிந்த செய்தியைச் சொல்ல முடியாமல் விக்கி விதிர்த்து விழித்து நின்றார்கள்.

வானவர்களின் இந்தப்பரிதாபக் கோலத்தைக் கண்ட இலங்கை வேந்தன் குலுங்க நகைத்து அவர்களை இகழ்சியாகப் பார்த்து ''என்ன சொல்லப் போகிறீர்கள் பயப்படாமல் சொல்லுங்கள்'' என்று அதட்டினான். இலங்கை மன்னன் மேல் உள்ள பயத்தால் தங்களின் கொடிய எதிரிகள் என உள்ளத்தில் எண்ணும் இராவணனது இலங்கை வீரர்களை ''நம்மவர்கள் மடிந்தனர்'' என்று உரிமையுடன் கூறித் தேவர்கள் திறமையாக நடித்தனர் என்பதை கவிச்சக்கர வர்த்தி உயரிய நகைச்சுவையாக கவிதை மூலம் பின்வருமாறு கூறுவதைக் காணலாம்.

''புக்கார் அமரர் பொலந்தார் அரசன் பெருவில் பெருங்கோயில்
விக்கார் நின்றார் விளம்பலாற்றார் வெருவி விம்முவார்
நக்கான் அரசன் நடுக்கல் என்றான் ஐயநம்ம ரெல்லாம்
உக்கார் சம்புமாலி உவந்தான் ஒன்றே குரங்கொன்றார் ''

ஒரு குரங்கால் சம்புமாலி உட்பட நம் வீரர்கள் அனைவரும் இறந்தனர் என வருத்தத்துடன் சொல்பவர்கள் போல் தேவர்கள் கூறுகின்றார்கள். நிகரற்ற விறல் வீரனாகிய சம்புமாலி மடிந்தான் என்பதை காதில் நாரசம் போல் ஏற்று வெகுண்ட இலங்கை நாதன் படைகளுடன் சென்று பஞ்ச சேனாதிபதிகளையும் பொருதுமாறு பணித்தான். அணையை உடைத்துக் கொண்டு பாய்ந்து வரும் பெருவெள்ளம் போன்ற இலங்கைப்படைகளையும், சேனாதிபதிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் மைந்தனான மாருதி தானொருவனாகவே நின்று நெடு நேரம் போராடிக் கொன்றழித்தான்.

இராவணனின் மைந்தனான அட்சகுமாரனை அனுமான் கல்லில் சந்தனம் அரைப்பது போல் தரையில் தேய்த்துப் பயங்கரமான முறையில் கொன்றான். அட்சயன் அழிந்தான் என்று அறிந்த போது இலங்கேசனின் அரண்மனையில் அழுகை ஓலம் வானை முட்டியது. மகனைப் பறிகொடுத்த இராவணனது பெரும் தேவி மண்டோதரி கணவனின் கால்களில் விழுந்து அழுது மாய்ந்தாள். தங்களின் மேலான தெய்வ வாழ்க்கையைச் சிதைத்து அடிமைகொண்டு ஏவல் செய்விக்கும் இராவணனின் குடும்பம் தங்கள் கண்முன்னே அல்லோல கல்லோலப் படுவதைக்கண்டு உள்ளூரப் போரானந்தம் கொண்ட தேவர்கள் பொங்கும் மகிழ்ச்சியைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு அழுபவர் போல் நடித்தனர்.

அரண்மனைப் பெண்களுடன் உண்மையாகவே அழுது இரங்குபவர் போல் தசமுகனின் அடிகளில் வீழ்ந்து அழுது வானவர் திறமையாக நடித்தனர் என்பதை கவிச்சக்கரவர்த்தி செய்யுள் மூலம் படம்பிடித்துக்காட்டுகிறார்.

'தாவரும் திரு நகர்த் தையலார் முதல்
ஏவரும் இடைவிழுந்து இரங்கி ஏங்கினர்
காவலன் கால்மிசை விழுங்து இரங்கிக் காவல் மாத்
தோவரும் அழுதனர் களிக்கும் சிந்தையர்

இராவண குமாரனின் இறப்பைக்கண்டு உள்ளூர மகிழ்ந்தாலும் வெளியில் அரண்மனைப் பெண்களுடன் சேர்ந்து தேவர்கள் போலியாக அழுகின்றனராம். உள் ஒரு நிலையும் புறம் ஒரு நிலையுமாக கூலிக்கழும் அமரர்களின் பரிதாப நிலையைப் பார்க்கும் போது வியப்பு ஏற்படுகின்றதல்லவா?

தமிழினத்தில் இப்படி ஒரு கவி தோன்றியது பெருமைதான். ஆனால் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் புரட்சிக்கவி பாரதிதாஸனும் சொந்தம் கொண்டாடிய திருநீறு பூசும் தமிழ் வேந்தனை தம் காவியம் முழுதும் ''அரக்கன்'' என்று இழிந்துரைத்திருப்பது வேதனை தருவதாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணமும் மகாபாரதமும் இருகண்கள் போன்றவையே

இந்து சமய மக்களின் இரு கண்களைப் போன்ற இதிகாசங்கள், கம்ப இராமாயணமும் மகாபாரதமும் ஆகும்.

இராமாயணம் ஸ்ரீ இராமனின் சரிதையைக் கூறும் ஒரு வழிப்போக்கான நிகழ்ச்சிகளே; ஆயினும் கல்வியில் பெரிய கவிச் சக்கரவர்த்தியின் கருத்துச் செறிவு மிக்க கவிதை அழகை நுகருவதற்காக எல்லாச் சமய மக்களும் இராமாயணம் படித்துக் கேட்டு இன்புறுகின்றனர்.

மகாபாரதம் ஒரு கதையல்ல. எண்ணிலடங்காக் கதைகளைக் கொண்டது. அக்கதைகளில் வரும் பலவிதமான குண இயல்புகளுடைய கதை மாந்தர்களையும் கணக்கில் அடக்கிச் சொல்வது இயலாத காரியமாகும்.

அன்றியும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களுக்கு ஒப்பானது வேதங்களுக்கு மேம்பட்ட ஐந்தாம் வேதமென்று முனிவர்களுக்கு அரசரான வேத வியாசர் கூற விநாயகப் பெருமான் தன் கொம்பொன்றை முறித்து எழுத்தாணியாக்கிக் கொண்டு மேரு கிரியில் எழுதிய தெய்வீகச் சிறப்புடையது.

பாரத ஏஸம் என்றே மக்கள் பாரதம் படிக்கின்றனர். கேட்கின்றனர் இராமாயணத்தில் கவிச்சக்கரவர்த்தி இடையிடையே கம்பர் சூஸ்திரம் என்று கவிதைகளில் விந்தைகள் செய்வது போல் மகாபாரதத்தில் மதுசூதனன் இடையிடையே நாடகமாடி தெய்வீக ஒளி ஊட்டுகிறார்.

மகா பாரதத்தில் இப்போது ஒரு ரஸமான சம்பவம் நடைபெற இருக்கிறது. உலகத்தில் ஒரு மனிதன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்கின்றான். அப்பெண் அம்மனிதனைப் படாதபாடு படுத்துகிறாள். பெண்ணின் கொடுமை தாங்காமல் அவன் வாழ்க்கையைத் துறந்து ஆண்டியாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நடைமுறைக்கு ஒவ்வாததாக ஐந்து சகோதரர்கள் ஒரு பெண்ணை மனைவியாகக் கொண்டிருக்கிறது மகாபாரதம் மன்னன் பெற்ற பாவை சாமானியமானவளா? ஐந்து பேரையும் பாஞ்சாலி சமமாகவே நோக்குகிறாள். நேசிக்கிறாள். கணவனுக்குரிய கடமைகளைக் குறைவின்றிச் செய்கிறாள்.

இவளல்லவா மனைவி? பதிவிரதை என்று கிருஷ்ணமூர்த்தியிடமே பலர் அடிக்கடி புகழ்ந்து பேசி இருக்கின்றனர். சத்திய பாமா பரந்தாமனைப் படுத்தும் பாட்டைக்கண்டு மைத்துனர் என்ற முறையில் பாண்டவர்கள் அவரைக் கிண்டலும் செய்திருக்கின்றனர்.

தங்கள் பத்தினி மீது உள்ள மகிழ்ச்சியால் பாண்டவர்களிலும் கர்வம் இருப்பதைக் கண்ணன் அறிவார். சமயம் வரும்போது பார்க்கலாம் என்று எண்ணி இருந்தார்.

பாண்டவர்கள் ஒருமுறை காமியவனம் என்ற வனத்துக்கு வந்திருந்தனர். அர்ச்சுனனும் திரௌபதையும் சோலைகளைச் சுற்றிப் பார்த்து வந்தனர். மிகப் பெரிய நெல்லிக்கனி ஒன்று மரத்தில் இருக்கக் கண்டனர்.

அக்கனியை பறித்துத் தருமாறு அருச்சுனனிடம் திரௌபதி கேட்டாள். அருச்சுனன் ஒரு அம்பை ஏவி அக்கனியை அறுத்து வீழ்த்தினான். அங்கு வந்த முனிவர்கள் இதனைக் கண்டு ''அரசனே என்ன வேலை செய்தாய். மித்திரமா முனிவருக்கு ஆகாரமாகும் கனியை அறுத்து வீழ்த்தி விட்டாயே. அவர் சாபத்தக்கு இலக்காகும் அபசாரத்தைச் செய்து விட்டாயே!'' என்று கூறிச் சென்றனர்.

தரும புத்திரரும் தம்பிமாரும் வந்து பார்த்துச் செய்வது அறியாது கலங்கினர். தம் ஆபத் பாந்தனாகிய கண்ணன் வந்தாலன்றி இதிலிருந்து தப்ப முடியாது என்று கண்ணனைக் கரங்குவித்துத் துதித்து வேண்டினர்.

பாண்டவர்களைப் பார்த்துப் போவதற்காக ஒரு தேரில் வந்து இறங்கினார் கிருஷ்ணமூர்த்தி.

அவர் அடி தொழுத பாண்டவர் தங்களைக் காக்குமாறு இறைஞ்சினர். அவர் சொன்னார். ''உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். நீங்கள் ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மனதில் உள்ளதை ஒழியாமல் உள்ளதை எல்லாம் சொல்லுங்கள், கனி, மரத்தில் போய்ப் பொருந்தும் உம் சொல்லுங்கள் என்றார்.

உதிட்டிரர் தன் மனதில் உள்ளதை எல்லாம் சொன்னார். என்ன ஆச்சரியம் தரையில் கிடந்த கனி எழுந்து இரண்டு முழ உயரம் உயர்ந்து அந்தரத்தில் நின்றது.

வீமன் தன் உள்ளக்கிடக்கையைச் சொன்னான். கனி மேலும் இரண்டு முழ உயரம் உயர்ந்தது. அடுத்து விஜயன் நகுல சகாதேவர்கள் சொன்னார்கள். ஒவ்வொருவருக்கும் இரண்டு முழவீதம் உயர்ந்து கிளையில் ஒட்டிக் கொள்ள கொஞ்ச இடைவெளியே இருந்தது.

திரௌபதி தன் உள்மன நிலையையும் கூற இடைவெளி மறைந்தது. இறுதியாகப் பாண்டவ பத்தினியான திரௌபதி தன் உள் மனநிலையைப் பின்வருமாறு சொன்னாள். ''ஐம்புலன்களைப் போல் ஐவர் கணவர்களாக வாய்த்திருத்தும் இன்னும்வேறொரு கொழுனனை விரும்புது என் இதயம். உலகில் பெண்ணாய்ப் பிறந்தவர் எவர்க்கும் ஆடவர் இல்லாது இருந்தாலன்றி நம்புவதற்கும் உள்ளதோ என்றாள். வசிட்டன் நல்லற மனைவியே மனையாள் என்ற கருத்தமைந்த பாடல் பின்வருமாறு.

''ஐம்புலன்கள் போல் ஐவர்கள் பதிகளாய்
இருந்தும் இன்னும் வேறொருவ
எனம் பெருங் கொழுனனாவதற்கு உருகும்
இறைவனே எனது பேரிதையம்.
அம்புவி தன்னிற் பெண் பிறந்தவர்க்கும்
ஆடவரில்லாமை யல்லால்
நம்புவதற்குனதோ வென்றாள் வசிட்டன்ன
நல்லற மனைவியே யனையாள்.''

உலக நடைமுறைக்கு வித்தியாசமாக ஐந்து சகோதரர்களும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள நேர்ந்தது. எனினும் பெரியோர்கள் வகுத்துக் கொடுத்த முறை தவறாமல் மனைவி ஐவர் மீதும் சமமான அன்பு செலுத்தி தன் கடமைகளை ஆற்றி வருகிறார் திரௌபதி. கற்பின் சிகரம் என்றும் சத்தியபாமா என்ற ஒரு மனைவியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணமூர்த்தி சில வேளைகளில் எதிர்நோக்கும் கஷ்ட நிலைமை களையும் மைத்துனர் என்ற முறையில் அவரிடமே கிண்டல் பேசியும் இருக்கின்றனர்.

இந்த முறையில் பாண்டவர்களுக்கு தங்கள் மனைவி திரௌபதி பற்றிக் கர்வம் உண்டு. இதைக் கண்ணனும் அறிவார். இப்போது பாஞ்சாலி தன் உள்மன நிலையை திறந்து கூறியதையடுத்து பாண்டவர்கள் விழித்தனர். ஆனால் கிருஷ்ண மூர்த்திக்கு இது தெளி வாக விளங்கியது. பாண்டவர்களிடம் மனைவி பற்றி இருந்த கர்வம் அகன்றதை அவர் கண்டார்.

இப்படி மகாபாரதத்தில் வரும் சம்பவங்கள் மனிதர்களின் பலவிதமான இயல்புகளை மனங்களைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரசோதி மாலை

# சோதிடப் பெருநூல்

ஈழவள நாட்டில் தம்பலகமப் பகுதி தமிழர்களின் தொல் பதியாகக் காணப்படுகின்றது. கப்பல்துறைக் கடற்துறையாகக் கொண்ட தம்பை நகரில் வாழ்ந்த தமிழர்கள் பொருளின் முக்கியம் குறித்துத் தமிழ் முன்னோர்கள் கூறி இருந்த அறிவுரைகளைக் கவனத்தில் கொண்டு தங்கள் துறையில் இருந்து மரக்கலம் ஊர்ந்து வங்கப் பெருங்கடலைக் கடந்து வேறு நாடுகளில் வர்த்தகம் செய்து பொருளீட்டி வந்தனர் என்று தெரிகிறது. அதன் காரணமாகவே இந்தக் கடற்றுறைக்குக் கப்பல் துறை என்று பெயர் வந்தது என்றும் அறிய முடிகிறது.

கப்பல்துறைக் கடல் துறையுடன் மிகப் பிரசித்தமான நிலையில் இருந்து வந்த தமிழ்ச் சைவர்களின் வாழ்விடமான தம்பை நகர். இலங்கைச் சரித்திர ஆரம்ப காலத்துக்கு முன்பே என்ன காரணத்தாலோ அழிந்து விட்டது. இப்போது இருக்கும் தம்பலகமம் தம்பை நகரின் தெற்குப் பகுதி என்று தெரிய வருகிறது. குளக்கோட்டு மன்னருக்காகச் சதுர்வேதமங்கலம் கந்தளாயில் குளம் அமைத்த அனுராதபுரத்து அரசி ஆடக சௌந்தரியின் தலைமை அமைச்சர் மதகு அமைத்து கதவு போட்டு நீரைத் தடுக்காமல் சில காலம் விட்டிருந்தார். அக்காலம் ''மாறாத புனல் பாயும் திருக்குளம்'' என்று இக்குளம் பற்றி நூல்கள் கூறின. தடைபடாமல் இக்குளத்தில் இருந்து வரும் நீர் காய்ந்து கற்பாறைபோல் ஆகி இருக்கும் தம்பலகமம் வயல்வெளியில் தொடர்ந்து பாய்வதால் வயல் களித்தரை கரைந்து கூளாகி இருக்கும். அதில் குவளைப் பசளையால் கறுத்துப்படர்ந்து பூத்திருக்கும். அதைக் கண்டு எருமைமாடுகள் கூழ்ச் சுரியில் தவழ்ந்து தவழ்ந்து போய் குவளையை மேய்ந்து களைத்துப் பக்கத்தில் உள்ள களத்து மேட்டில் வெகு பிரயாசைப்பட்டு ஏறிப்படுத்து எருமை மாடுகள் களைப்பு நீங்க மூச்செறியும் என்று திருக்கோணாச்சலப் புராணம் தம்பை நகர்ப்படலம் பின்வருமாறு கூறுகிறது.

'கரியகுவளைத் தளிர்மேய்ந்து கடைவாயால் அசை போடுகின்ற எருமை கிடந்து மூச்செறியும் எழிலார் தம்பை வளநாட்டில்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தம்பை நகர்ப்படலம் தம்பலகமத்தின் வளச்சிறப்பை சிலாகித்துக் கூறுகின்றது. யாவா மன்னன் சந்திரபானு இலங்கை மீது படை எடுக்கப் போகின்றான் என்று பரவலாகப் பேசிக் கொள்வதை அறிந்து வாலிபனான 4ஆம் விஜயபாகுவின் மகன் மூன்றாம் பராக்கிரமபாகு அரணமிக்க தம்பை நகரில் கரந்துறைத்து தங்கி இருந்தார். சந்திரபானுவை முறியடித்து உதவுமாறு இலங்கை அமைச்சர் ஒருவரின் அழைப்பை ஏற்று பெரும் படையுடன் இலங்கை வந்த ஜடாவர்மன் வீரபாண்டியன் பல வெற்றிப் போர்களை நடத்தி சந்திரபானுவைக் கொன்று இலங்கை இளவரசன் ஒருவனுக்கு முடிசூட்டி மற்ற எதிரிகளைக் கலைத்து இலங்கை அரசன் அளித்த வெகுமதிப் பொருள்களுடன் தாயகம் மீண்டான் என்பது சரித்திரம். இந்த ஆட்சி மாற்றக் கலவரங்கள் அடங்கிய பின் அங்கு பாதுகாப்பாக இருந்த பராக்கிரமபாகு பாண்டிநாடு சென்று பாண்டியர்களோடு இணக்கம் ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் அனுசரணையுடன் தலதாவை இலங்கைக்குக் கொண்டுவந்து கி.பி. 1302இல் அரசனானான்.

கிழக்குப் பாசினதேசத்தில் அரணமிக்க வணிகராகத் திகழ்ந்த தம்பை நகர் மன்னனாகத் தம்பை காவலன் என்ற புகழ்ப் பெயருடன் கி.பி. 1302ம் ஆண்டு அரசனானான். இம் மன்னன் சபையில் தெநுவரைப் பெருமாள் என்ற தமிழ் அந்தணன் இயற்றிய 934 செய்யுள்கள் அடங்கிய சோதிடப் பெரு நூல் அரங்கேற்றம் இடம்பெற்றதென அறிய முடிகிறது. கணிதம், சங்கீதை, சாதகம் என்ற சோதிட விதிகளுக்குத் தக்க விளக்கங்களைத் தெளிவாகத் தருவனவாகவும், விடய ஒழுங்குகள் செவ்வனே அமைந்து மக்களுக்கு சாஸ்திர வழிகாட்டியாக இருப்பதாகவும் கருதப்படுகின்றது. தம்பை நகர் மன்னனாக மூன்றாம் பராக்கிரமபாகு 1302இல் இருந்து 1310வரை ஆண்டான் என்றும் தெரியவருகின்றது.

ஞானக்கதிர் 1999 ஆம் ஆண்டு மார்கழி இதழில் தெல்லியூர் செ. நடராசா எழுதிய தம்பைநகர் பற்றிய எண்ண அலைகள் என்ற கட்டுரையில் சரசோதிமாலை என்ற ஆய்வு நூலை மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா வெளியிட்டுள்ளார். இந்நூல் சரசோதிமாலையை ஆக்கபூர்வமான முறையில் மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. மகாவித்துவானின் இந்நூல் அனேகருக்கு இதுகாலவரை தெரியாதிருந்ததும் தமிழ்ஈழத்து இலக்கிய விருத்தியில் முக்கியமானதுமான இந்நூலை தக்க தருணத்தில் வெளியிட்டமை போற்றுதலுக்கு உரியதாகும் என்று நடராசா குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூந்தலில் மலர் சூடும் பழக்கம்!

இந்த நில உலகில் பரிசுத்தமான, தூய்மையானவைகள் செடிகளில் அன்றாடம் மலரும் பூக்களே. எனவேதான் மனிதர்கள் இறைவனுக்குப் பூக்களை அர்ச்சித்து வணங்குகின்றனர். ஆயினும் இந்த மலர்களை விட இறைவனுக்கு மிகவும் விருப்பமான பொருள் மனிதனிடம் இருக்கின்றது என்று சுவாமி விபுலானந்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

''வெள்ளை நிறப்பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்று. இரத்தம் ஒழுகும் இறைச்சியை சப்பி ருசிபார்த்து நல்லது எனக்கண்ட இறைச்சியை காளாத்தி நாதனுக்குப் பிரசாதமாக படைத்த வேடன் கண்ணப்பனுக்கு, ஈசன் அருள் புரிந்தான். மனிதனின் கள்ளம், கபடமற்ற தூய்மையான இதயத்தையே பரமன் விரும்புகின்றான் என்பதை இது உணர்த்துகின்றது.

ஆன்ம மேம்பாட்டை நாடிச் செயற்படும் மனிதர்கள் இதய சுத்தமாக ஒழுகுவது மிகவும் இன்றியமையாதது.

தூய்மை மிக்க மலர்கள் தெய்வத்துக்கு அர்ச்சித்து வணங்கும் சிறப்பும், மேன்மையும் உடையன. ஆயினும் தமிழ் நங்கையர்களுக்கும் மலர்களுடன் தொடர்பு இருந்து வருவதைக் காணமுடிகிறது. பழைமையில் செண்பக பாண்டிய மன்னன் தன் பட்டமகிஷியோடு பூங்காவில் இருந்தபோது அரசியின் கூந்தலில் இருந்து வீசும் நறுமணம் இயற்கையானதா? செயற்கையானதா? என்பதை அறியப் புலவர்களிடையே ஒரு கவிதைப் போட்டியை நடத்தியதாகவும்; அதில் கவிதை எழுதி இறையனார் புலவர் நக்கீரனிடம் ஜெயம் அடைந்ததாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீரங்கநாத சுவாமிக்காகக் கட்டப்படும் பூமாலைகளை அந்த வீட்டுப் பெண்மணி தான் அணிந்து அழகுபார்த்து விட்டுத்தான் கோயிலுக்குக் கொடுத்தனுப்புவாராம். இதனால் அந்தப் பெண்ணுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடிக்கொடுத்த நாச்சியார் என்று காரணப்பெயர் வந்ததாகவும் இலக்கியங்கள் பேசுகின்றன. தெய்வத்துக்கு அர்ச்சித்து வணங்கும் இந்தத் தூய்மை மிக்க மலர்களில் தமிழ் நங்கையர்களுக்குத்தான் என்ன ஆசையோ?

கூந்தலில் மலர் சூடுவதைத் தங்கள் பாரம்பரிய வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தமிழ் பெண்கள் மட்டுமன்றி கூந்தலில் மலர் அணியும் வழக்கம் இந்துப் பெண்கள் எல்லோரிடமும் இருந்தது என்பது புலனாகின்றது.

கல்வியில் பெரிய கம்பர் தன் இராமாயணத்திலே ஜானகி கூந்தலில் மலர் சூடி இருந்தாள் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

''வெள்ளெருக்கம் சடைமுடியான்
வெற்பெடுத்ததிருமேனி
மேலும் கீழும்,
உள்ளிருக்க இடமின்றி உயிரி
ருக்கும் இடம் நாடி அழைத்த
வாறோ
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல்
ஜானகியை மனச்சிறையில்
சுரந்த காதல்
உள்ளிருக்கும் என நினைந்து
உடல் புகுந்து தடவியதோ-
ஒருவன் வாளி''

(கம்பராமாயணம் - யுத்தகாண்டம்)

''கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் ஜானகியை'' என்று இராமாயணச் செய்யுள் கூறுவதால் தமிழ் நாட்டு தமிழ்ப் பெண்கள் மட்டுமன்றி சீதா போன்ற வடநாட்டு இந்துப் பெண்கள் அனைவரும் கூந்தலில் பூ அணியும் வழக்கமுடையவர்களாக இருந்து வந்தனர் என்று தெரிகிறது.

பெண்கள் தம் கரிய கூந்தலில் மலர் சூடுவதினால் தனி அழகையும் லட்சுமீகர வனப்பையும் பெறுகின்றனர். உலகில் பலநூறு கோடிப் பெண்கள் வாழ்ந்தாலும் கூந்தலில் மலர் சூடும் வழக்கம், இந்துப் பெண்களிடமே இதிகாச பெருமையடன் இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வாழ்க்கையில் 'விதி' எப்படி செயல்படுகிறது?

நீர், நிலம், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐந்தின் அம்சங்களும் ஒருங்கிணைந்து உருவானதே மனித உடல். இந்த உடலுள் ஜீவ சக்தி உயிர் இருந்து உடலை இயக்குகிறது. விதி அல்லது அமைப்பின் படி உயிர் உடலை விட்டு வெளியேறிச் செல்லும் போது உடலுக்கு 'இறப்பு' என்னும் துக்க நிலை ஏற்பட்டு உடல் அழிந்து விடுகிறது.

ஆனால் ஐம்பூதங்களினால் உருவான உடல் அழியுமேயன்றி ஆன்மா அழியாது. முக்திப் பேறு என்னும் மேன் நிலை கிட்டும் வரை உயிர் தொடர்கதைப்போல் பிறந்து, பிறந்து இருவினையாற்றுகின்றது. இருவினை ஒப்பான மேன்நிலை எய்தும் போதே அந்த ஆத்மா பிறவிச் சுழலில் இருந்து விடுபடுகிறது. இனிப்பிறவாத இறைவனோடு ஒன்றிக்கும் வீடு பேறு பேரின்ப நிலையை அடையும் சமய ஞானம் இப்படிக் கூறுகின்றது.

வேதங்களைச் சிந்தித்த ரிஷிகளுக்குள்ளே பிரகஸ்பதி தேவ குரு அல்ல. இவர் வேதப்பாடல்கள் இறைவனைத் துதிப்பதாக அமைந்திருப்பதைக் கண்டு இப்படித் துதிப்பதால் அருள் பெற முடியுமா? என்ற கேள்வி எழுப்பி வேதகாலத்திலேயே ஆத்ம ஞானத்துக்கு எதிராக பிரகஸ்பதி நாத்திக வாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

அவரின் சீடர் சர்வாகார் புண்ணியம் செய்ததால் தான் உயிர்கள் மேலான நிலையில் பிறக்கின்றன என்ற சமயக் கூற்றுக்குக் குதர்க்கமாகக் கையிலுள்ள கட்டை விரலைக்காட்டி இது என்ன பாவம் செய்தது. இந்த விரல் இவ்வளவு கட்டையாக ஏன் இருக்கின்றது? என்று கேட்டுக் கிண்டல் செய்கிறார்.

உயிர் என்று எதுவுமே கிடையாது. நீர் நிலம் காற்று தீ ஆகாயம் எல்லை இல்லாப் பெரும்வெளி. ஆகாயத்தை ஒரு பூதமாய் எண்ண முடியாது.

மேற்படி நான்கு பூதங்களும் ஒன்றிணைந்து உருவாகும் உடலில் பூதங்களின் சேர்க்கையால் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போன்றவைகளை வாயில் போட்டுச் சப்பும் போது ஒரு சிகப்பு உண்டாகிறதே, அது போன்றது தான் இந்த உயிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பிறவி எடுப்பதும் இல்லை. சுவர்க்கம், நரகம் என்று எதுவுமே கிடையாது. இந்த நான்கு பூதங்களையும் சேர்த்து வைக்கக் கடவுள் என்றொருவர் தேவை இல்லை. இரும்பைக் காந்தம் கவர்ந்திழுப்பது போல் அந்த நான்கு பூதங்களும் இணைந்து கொள்வது அவைகளின் குணங்கள் என்றும் கடவுள், உயிர் என்று கூறுவ தெல்லாம் சாதாரண மக்களை ஏமாற்ற சமயவாதிகள் செய்யும் பொய்ப்பிரசாரம் என்று சர்வகர் போன்ற உலகாதயவாதிகள் கூறுகின்றனர்.

உடலுள் குறைந்த காலமும் கூடிய காலமும் இப்பூதங்கள் இருந்து ஒரு நாள் பிரிந்து இறப்பை உண்டாக்குகின்றன. அப்போது இந்தப் பூதங்கள் எப்படிப் பிரிகின்றன. பிரித்து விடுபவர் யார்?

சமயப்பக்கம் இருந்து எழுந்த கேள்விக்கு நாஸ்தீகவாதிகளால் சரியான பதில் அளிக்க முடியவில்லை.

கார்ல் மாக்ஸ் போன்ற மேற்கு நாட்டுப் பொருள் முதல் வாதிகளும் கடவுள் மறுப்புக் கொள்கை உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

திராவிட இயக்க இராமசாமிப் பெரியார் கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்று கரடியாகக் கத்தினாரே, அவரால் தமிழ்நாட்டில் நாஸ்திகத்தை வேரூன்றச் செய்ய முடிந்ததா?

ஆன்மீகமும் நாத்திகமும் வேதகாலத்தில் இருந்து இன்றுவரை ஜனநாயக ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் போல் இருந்தே வருகின்றன. உலகின் பெரும்பான்மை மக்கள் நாஸ்திகத்தைப் புறக்கணித்தே வந்துள்ளனர். இனியும் புறக்கணிப்பார்கள் என்பதில் ஐயமே இல்லை.

இந்த மண்ணுலகில் நடமாடும் உயிர்களை குறிப்பாக மனிதர்களின் இறுதிக்காலத்தில் உடலை விட்டுப் பிரித்து உயிர்களைக் கொண்டு செல்லும் பணியில் தென் திசைக் கோனான யமதேவனும் அவன் ஊழியர்களான கிங்கரர்களும் உள்ளனர் என இந்து சமய புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

இது காரணமாகவே இறந்தவர்களின் உடல்களை தெற்குப் புறமாகத் தலை வைத்து வளர்த்தி தென் திசைக்கடவுளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொடுப்பதாக இந்து சமய மக்கள் இறுதிக் கிரியைகள் செய்கின்றனர்.

யம தேவனுக்குக் கிங்கரர்கள் ஊழியர்களாக இருப்பது போலவே மனிதன் உயிர்வாழும் போது நினைக்கும் செய்யும் பாவ புண்ணியங்களை உடனுக்குடன் எழுதி வைத்திருந்து உரிய காலத்தில் தலைவனுக்கு எடுத்துக்கூறி அந்த உயிர்கள் சுவர்க்கம், நரகம் போன்றவைகளை நுகரச் செய்வதற்கு சித்திர புத்திரர் என்ற கணக்காளர் ஒருவர் உண்டென்றும் நூல்கள் கூறுகின்றன.

ஏனைய மத சமய நூல்களிலும் இறுதிக்காலம் பற்றி இப்படியான ஒரு நிலை இருப்பதாகவே தெரிகின்றது.

மார்க்கண்டன் என்ற சிவபக்தனின் உயிரைக்கவர யமதேவன் கால பாசத்தை அவன் மீது வீசிய போது, சிவனால் உதையுண்டு யமன் இறந்தான் என்றும் மாலயனாதி தேவர்கள் வேண்டியதால் காலன் உயிர் பெற்றெழ இறைவன் அனுக்கிரகம் செய்தான் என்றும் கூறப்படுகின்றது.

அதனால் சிவனுக்குக் கால காலன் என்றொரு காரணப் பெயர் ஏற்பட்டதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இன்னொரு சமயம் கற்பரசியான சாவித்திரியின் கணவன் சத்தியவானின் உயிரைக் காலதேவன் கவர்ந்து சென்ற போது பின் தொடர்ந்த அந்த மாதரசி புத்திசாலித்தனமாகக் கேட்ட வரங்களை வழங்கிய மறல் நாயகன் உயிரைச் சாவித்திரியிடம் கொடுத்து விட்டுப் போனதாகவும் நூல்கள் கூறுகின்றன.

உலகத்தில் உயிர்வாழும் கோடானு கோடி உயிர்களை அவ்வப்போது கைப்பற்றிச் செல்ல யமனாலும் கிங்கரர்களாலும் முடியுமா? கணக்கற்ற எண்ணில் அடங்கா உயிர்கள் செய்யும் பாவ புண்ணியங்களை எழுதுவதென்பது சாத்தியமா? அப்படி எழுதுவதனாலும் இந்த உலகத்தை விட இரண்டு மூன்று மடங்கு பெரிதான ஏடு வேண்டுமே என்று பகுத்தறிவு உடைய மனிதனால் எண்ணிப் பார்க்க வேண்டியே உள்ளது.

மனித குலத்துச் சொகுசு வாழ்க்கைக்கு உதவும் கம்பியூட்டர் போன்றவைகளைச் செய்து குவித்துக் கொண்டிருக்கும் விஞ்ஞானம் மனித குலத்தின் அந்தியக்கால மர்மமான மறைவு பற்றித் துருவி ஆராயவில்லை என்றே துணிந்துரைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடி வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் திடீர் என்று இறந்து கட்டைபோல் ஆகிவிடுகிறானே. இது எப்படி, ஏன் நிகழ்கின்றது.

இறந்த பின் என்ன நடக்கிறது? என்ற கேள்விகளுக்கு ஆற்றல் மிகு விஞ்ஞானம் பதில் அளிக்கும் நிலை இல்லையே. காலம் கடந்து பிரிட்டிஷ் சொசைட்டி ரீசர்ச் நிறுவனமும் ஐரோப்பிய அமெரிக்க நிறுவனங்கள் இறந்தவர்களின் நிலை என்ன என்பது பற்றி ஆராயத் தொடங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

பாரத நாட்டுத் தவ சீலர்களும் மனிதனின் பிறப்பு-இறப்பு பற்றி ஆராய்ந்து அதன் வழி முறை இரகசியங்களைக் கண்டறிந்து பலவிதமான சித்துகள் செய்து சித்தர்கள் என்ற காரணப் பெயர்களையும் பெற்றிருந்தனர்.

சமீபத்தில் வாழ்ந்த பன்மொழிப் பேரறிஞர் மறைமலை அடிகள், ''மரணத்தின் பின் மனிதர் நிலை'' என்ற ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளார்.

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள், ஆதீனம் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தம் ஞான உணர்வால் ஆராய்ந்து அறிந்து மனிதனின் இறப்பு நிகழும் நிலை பற்றி நூல்கள் எழுதியுள்ளார்.

விதி எப்படிச் செயல்படுகிறது என்பது பற்றி நாரதர் ஒரு முறை அசுபதி மன்னனுக்குக் கூறினார்.

மனிதனின் ஆயுள் முடிந்து உயிர் பிரிந்து இறப்பு ஏற்படுவது பற்றி ஒரு பழைய பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

''பேர் இளமை-துன்பம்-பிணி-மூப்பு-சாக்காடு. இந்த ஆறும் கருவில் அமைப்பு'' என்பதாகப் பாடல் கூறுகின்றது.

நல்ல பிரசித்தமான-பேர். ஆனந்தமயமான-இளமைக்காலம். மனித வாழ்வில் மாறி மாறி வரும்-இன்பத்தை அடுத்து-துன்ப காலம், பிணி நீண்ட கால-நோய், வயோதிப காலமான-முதுமை, சாக்காடு முடிவு.

மனித வாழ்க்கையிலுள்ள மிக முக்கியமான இந்த ஆறு நிகழ்வுகளும் வெளியில் இருந்து வருபவையல்ல. பிறக்கு முன்னே தெய்வ கட்டளையாகக் கருவில் அமைக்கப்பட்டுப் பூமிக்குக் கொண்டு வந்த மூல தனங்களாகும். இதுவே பேராற்றல் வாய்ந்த ''விதி'' என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிமக்களே உயிர் அரசு வெறும் உடலே

சிங்கபாகு தன் பிரஜைகளை உயிராகக்கருதிச் செங்கோலோச்சி வந்தான். மன்னன் தான் விரும்பியபடி நடக்கக் கூடிய முடியாட்சி தான் செய்தான். ஆயினும் காவலன் மக்களின் நல்வாழ்வே தன் சந்தோஷ வாழ்வு என்று கருதினான். இத்தகைய நேர்மைச் சிறப்புடைய கருணை வேந்தனின் குமாரன், தான் ஒரு அரசகுமாரன் என்பதை விட ஒரு துர்த்தர் கூட்டத்தின் தலைவன் என்று எண்ணப்படுவது தான் சிறப்பு என்று எண்ணித் தன்னைப்போல் அக்கிரம நோக்கு உடையவர்களைத் தோழர்களாகச் சேர்த்துக்கொண்டு அழகுள்ள ஆரணங்குகளைச் சிறைப்பிடித்துத் தீச்செயல்கள் புரிந்து வந்தான்.

முடிக்குரிய இளவரசனின் கீழ்த்தரச் செயல்களைக் கேட்டுக் கோபத்தில் கொதித்த வேந்தன் அவனை கொன்று விடுமாறு உத்திரவிட்டான். அரசகுமாரனைக் கொல்ல அமைச்சர்களும் அதிகரிகளும் அஞ்சிப் பின்னடைந்தனர். இளவரசன் பற்றி தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்து வந்ததால் தன் குடிகளுக்குத் துயர் விளைவிக்கும் அவனைக் கொல்வதற்கு தன் முன் கொண்டு வந்து நிறுத்துமாறு அரசன் காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

அரசர்களும், அமைச்சர்களும் சேர்ந்து எடுத்த முயற்சியின் விளைவாகவே விஜயனும், தோழர்களும் கடல்வழியாக நாடுகடத்தப்பட்டு இலங்கை வந்து சேர்ந்தனர் என்று சரித்திரத்தில் படித்தோம். சிங்கபாகு மன்னன் தன் குடிகளின் நலன் கருதித் தன் சொந்த மகன் எங்கே போவானோ? உயிர் பிழைத்து வாழ்வானோ? என்று ஒன்றும் அறியாத நிலையில் கடல் வழியே நாடுகடத்தினான் என்று அறிகிறோம்.

கவலையீனமாகத் தேர்ச்சவாரி செய்து ஒரு பசுக்கன்றின் உயிரைப் போக்கினான் என்ற குற்றத்துக்காக தமிழ் மன்னன் தன் மகனைத் தேர்ச்சில்லால் நசித்துக் கொன்றான் என்பதை அறியும் போது தன்னவர் பிறர் என்று பாராது நீதி வழங்கும் பெருமை கண்டு மகிழ்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொடர்ந்து குடியாட்சியே நடைபெற்று வருகிறது. இலங்கையில் குடியரசு பெரும்பான்மையினருக்குச் சொந்தமாக மதித்துக் காரியங்கள் தாறுமாறாகக் கொடுங்கோன்மையாக நடக்கிறது. கண்டி மன்னன் ஸ்ரீவிக்கிரம சிங்கன் அவன் ஒரு தமிழன். அவன் அரசை அவனிடம் ஊழியம் புரிந்து வாழ்ந்தவர்கள் வஞ்சனையாக ஆங்கிலேயரைக் கொண்டு பறிக்கச் செய்தார்கள்.

இலங்கையின் பூர்வீக ஆட்சியாளர்கள் இராவணன் என்று இராமயாணமும் இயக்கர், நாகர் என்ற திராவிட இனத்தவர் என்று சரித்திர மூலம் அறிய முடிகிறது. எல்லாளன், ராசேந்திரசோழன் கலிங்கு, விஜயபாகு போன்றோர் இடையிடையே ஆட்சிசெய்துள்ளனர். இந்த நிலையில் இலங்கையருக்குச் சொந்தம் என்று கூற முடியும்.

இந்த நிலையில் இன்றுள்ள ஆட்சித்தலைவர்கள் குடிகள் அனைவரும் தங்கள் இரு கண் போன்றவர்கள் என்று எண்ணாமல் எங்கே தங்கள் உரிமை சுற்றத்தினவர்களுக்குச் சிறுபான்மையினரால் கேடு விளைந்து விடுமோ என்று அப்பாவிச் சிறுபான்மையினரை ஓரவஞ்சகமாக நடத்துகிறார்கள்.

இந்த சிறுபான்மைச் சமூகத்தை அடக்கி நிரந்தர அடிமையாக வைத்திருந்த உலக பொலிஸ்காரன் அமெரிக்காவின் துணையை நாடுகிறார்கள். தங்கள் சொந்தக் குடிமக்கள் மீது ஆகாயத்தில் பறந்து குண்டு போட்டு துடிதுடித்து சாக வைக்கிறார்கள்; ஆயினும் இந்த வல்லாளர் செய்த கொடுமைகளை இறைவன் கண் திறந்து பார்க்கிறான்.

ரணில் நல்லவர். அவரின் துணைவர்களும் நல்லவர்களே. குடிமக்களே உயிர், அரசு வெறும் உடலே எனற நல்ல கருத்து ஆட்சித்தலைவர்களிடையே நிலை பெறட்டும். அப்போது தலைவர் களிடையே நிலை பெறப்படும். அப்போது குடிகளாகிய நாம் மகிழ்ந்து அரசைப் போற்றுவோம், பாராட்டுவோம். சிவனொளிபாதமலைக்கு எத்தனை வண்ணம் பூசிமறைத்தாலும் இலங்கை ஆதித்தமிழரின் தாயகம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ் அல்ல?

நன்றாகக் கற்றால் தான் மேதையாக முடியும் என்று எண்ண வேண்டியதில்லை. படிக்காதவரிடத்தும் மேதைத்தனம் இயற்கையாக அமைந்திருந்தால் அது உரிய சமயத்தில் வெளிப்பட்டு ஒளிவீசிப் பிரகாசித்து உலகப் புகழைத் தேடித்தரும் என்பதற்கு ஓவிய நிபுணர் ராபர்ட் ரிப்ளே சிறந்த சான்றாவர். ராபர்ட் ரிப்ளே சிறுவயதிலேயே பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆனால் படிப்பில் அவர் கவனம் செல்லவில்லை. ஆசிரியர்கள் கட்டுரை எழுதுமாறு பணித்தால் ரிப்ளே ஓவியம் வரைவார். ஒருநாள் அவர் வகுப்பாசிரியர், அவர் ஓவியம் வரைவதைப் பார்த்து விட்டார். "நான் கட்டுரை எழுதச் சொன்னால், நீ சித்திரம் எழுதுகிறாய். நல்லது தான் நீ கட்டுரைக்கு பதிலாக ஓவியம் வரைந்து தா நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். அவர் கூறியதைக் கேட்டதும் அந்தச் சின்னஞ் சிறிய ஓவியர் மகிழ்ச்சியில் திளைத்தார். அந்த அன்பான ஆசிரியரின் மொழிகள் தான் ரிப்ளேயின் ஓவிய வாழ்க்கையை ஒளிமயமாக்கியது எனலாம்.

அன்றிலிருந்து படங்களில் வரும் கதாபாத்திரங்களின் படங்களைத் தீட்டிக் குவிக்கத் தொடங்கி விட்டார். ரிப்ளேயின் ஓவியங்களை எல்லோரும் பார்த்து பாராட்டினர். முக்கியமான பத்திரிகையில் படம் தீட்டிக் கொடுக்கும் வேலையில் அமர்ந்திருந்ததுடன் பிரபலமான செய்திதாள்களுக்குப் படம் வரைந்து கொடுத்து வந்தார். ரிப்ளேயின் தந்தை ஒரு தச்சர். மகன் ஓர் ஈய வேலை செய்பவனாகவோ, கொத்தனாகவோ வரவேண்டும் என்று விரும்பினார். சிறுவயதிலேயே ஓவியக் கலையில் கருத்தைச் செலுத்திவரும் தன் மைந்தனை நோக்கி ஓவியனாக விரும்பினால் உணவின்றிச் சாக வேண்டித்தான் வரும் என்று எச்சரித்தார். ஆனால், ஓவியக் கலையில் சென்று கொண்டிருந்த ரிப்ளேயின் கரை கடந்த ஆர்வத்தைத் தந்தையின் எச்சரிக்கையால் தடுத்து நிறுத்த முடியவில்லை மாறாக அமெரிக்கப் பத்திரிகைகள் அவர் ஓவியங்களைப் போட்டியிட்டு வெளியிட்டு பணத்தையும் அனுப்பின. பணமும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியத் தொடங்கியது. அவரோ ஓவியக் கல்லூரியில் சென்று பயின்றவரல்ல. இன்று ஓவியக் கலையில் அவரைப் பின்பற்ற உலகம் முழுவதும் முயன்று வருகிறது. இன்று ரிப்ளேயின் ஓவியங்கள் உலக நாடுகளில் முந்நூற்றுக்கும் அதிகமான செய்தித்தாள்களில் முப்பத்திரெண்டு அயல் நாடுகளில் பிரசுரமாகி உள்ளன. அவர் இதுவரை நூற்றுத் தொண்ணூற்று ஏழு நாடுகளில் நடமாடி உள்ளார் என அவரது பிரயாண வரலாறு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ரிப்ளேக்கு ஆண்டொன்றுக்குப் பத்து இலட்சம் கடிதங்கள் வந்தன. 1932ஆம் ஆண்டில் மட்டும் உலகின் நாலா பக்கங்களிலும் இருந்து. வந்த கடிதங்கள் முப்பது இலட்சம் என்றும் ஒரு நாளைக்கு எண்ணாயிரம் கடிதங்களுக்கு மேல் வரும் என ராபர்ட் ரிப்ளேயின் செயலாளரால் கணக்கிடப்பட்டுள்ளது. இப்படி அவருக்குப் புற்றீசல் போல வரும் கடிதங்களைக் கண்டு சினங்கொண்ட அமெரிக்க நாட்டு போஸ்மாஸ்டர் ஜெனரல் கடிதம் அனுப்பியவருக்கே கடிதங்களைத் திருப்பி அனுப்புமாறு உத்தரவிட்டும் பலன் ஏற்படவில்லை. போஸ்மாஸ்டர் ஜெனரலின் உத்தரவைக் கத்தரித்து வைத்து ரிப்ளேக்கே அனுப்பி வைத்தார்களாம். அமெரிக்காவில் எங்கே ரிப்ளேயின் பெயரை உச்சரித்தாலும் ஆ, அந்த அண்டப்புளுகன் ரிப்ளேயா! அவர் மகா புளுகர் அல்லவோ என்று கூறுவது வெறுப்பினால் அல்ல. அன்புடன் கூறப்படுவது ஆகும். அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ் என்று உலகம் முழுவதும் பரிபூரணமாய் நம்பிக்கொண்டிருக்க ரிப்ளே அமெரிக்காவைக் கண்டு பிடித்த முதல் மனிதர் கொலம்பஸ் அல்ல என்று ஒரு வெடி குண்டைத் தூக்கி வீசினார். இது என்ன பொய் ஏமாற்றுக்காரர் என்று உலகம் கண்டனமாரி பொழிந்தது. ஆனால், ரிப்ளே அமைதியாக கொலம்பஸ் பிறக்க முன்னே ஆயிரம் ஆண்டகளுக்கு முன் சீனாவைச் சேர்ந்த ஹோஷீயன் என்னும் புத்த ப்க்ஷி அமெரிக்காவைக் கண்டறிந்தார். அது மட்டுமல்ல கொலம்பஸ் பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் லீப் எரிக்ஸன் என்ற நோர்வே நாட்டான் அமெரிக்காவில் குடியேறினான் என்று பல உண்மையான ஆதாரங்களை அடுக்கினார். ஆ. அப்படியா? என்று உலகம் மூக்கில் கரம் வைத்து வியந்தது. எனவே தான் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறிந்த மூன்றாவது மனிதர் என்று கூறுகிறேன் என்றார் ராபர்ட் ரிப்ளே.

அத்துடன் அவர் நிற்கவில்லை.

அட்லாண்டிப் பெருங்கடலை விமானம் மூலம் கடந்து சாதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தவர் லிண்டன் பார்த் என்று உலகப்பிரசித்தமாக இருக்கும் போது அட்லாண்டிக் பெருங்கடலை முதலில் கடந்தவர் லிண்டன் பார்க் அல்ல. அந்தக்கடலைக் கடந்த அறுபத்து ஏழாவது மனிதரே லிண்டன் பார்க் என்று ரிப்ளே கூறினார். ரிப்ளே மீது உலகம் சீறி எழுந்தது. ஆனால், ரிப்ளே அமைதி குலையாமல் அசைக்க முடியாத ஆதாரங்களை அடக்கினார். லிண்டன் பார்க்கை உலகம் தெரிந்து கொள்ளுமுன் ப்ரௌன், அல்காக் என்னும் இருவர் அட்லாண்டிப் பெருங்கடலை விமான மூலம் கடந்தனர். அதன்பின் ஆர் 34 என்ற ஆங்கில விமானத்தில் முப்பத்தொரு பேர் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து சென்றனர். zR3 என்ற ஜெர்மன் விமானம் முப்பத்து மூன்று பேர்களுடன் அட்லாண்டிக்கைத் தங்கு தடங்கலின்றி கடந்து சென்றது. அவ்விதமானால் அட்லாண்டிப் பெருங்கடலை விமானமூலம் கடந்தவர்களில் லிண்டன் பார்க் எத்தனையாவது மனிதர் என்று நீங்களே சொல்லுங்கள் என்று ராபர்ட் ரிப்ளே உலகத்துக்குச் சவால் விட்டார்.ஆ! அவ்விதமானால் நீங்கள் சொல்வது சரிதான். அட்லாண்டிக்கைக் கடந்தவர்களில் லிண்டன் பார்க் அறுபத்து ஏழாவது மனிதர்தான் என்ற சொற்கள் ஒவ்வொரு ஐரோப்பியர் வாயில் இருந்தும் வெளிவந்தன.

பாடசாலையில் அதிகம் படிக்கா விட்டாலும் இவ்வளவு உலக விசயங்களைத் தன்னுள் நிறைத்து வைத்துக் கொண்டிருக்கும் ராபர்ட் ரிப்ளே ஒரு உலக மேதை என்று அவர்கள் வாய்கள் முணு முணுத்தன. உலக அறிஞர்கள் மகாமேதை ராபர்ட்ரிப்ளேக்குத் தங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டனர்.

(தினக்குரல் இதழ்)

(ஆதாரம்: அப்துல் ரஹீம் எழுதிய
உலக மேதைகள் நூலில் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடகெடுவாய் பல தொழில்கள் இருக்கக் கல்வி
அதிகமென்றும் கற்று விட்டோமறிவில்லாமல்

# ஒரு புலவரின் மனஅங்கலாய்ப்பு

உலகில் பல கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தத் தொகையான மக்கள் செய்து ஊதியம் பெற்று உயிர் வாழவும் உலகில் பல விதமான தொழில்கள் இருக்கின்றன; ஆயினும் சிலர் உலகில் உள்ள எல்லாவற்றிலும் கல்வியே சிறந்த தென்று ஆராய்ந்து அறிந்து கல்வியை கசடறத் துறைபோகக் கற்று பாண்டித்தியம் எய்தி ஆற்றல் மிக்க கவிவாணர்களாக அழகும் அறிவுமிக்க கவிதைகள் புனைந்து மனித குலத்தை நெறிப்படுத்தும் பெரும்தொண்டு புரிந்து வருகின்றனர். மானிட சமுதாயத்தின் சீலமான நல்வாழ்வுக்காக தங்கள் முழுக்காலத்தையும் செலவிட்டு வரும் படித்த மேதைகளான புலவர் பெருமக்கள் தங்கள் வாழ்வைக் கழிக்கும் நோக்கில் பொருள் தேடுவதென்பது இயலாத காரியம்.

அப்படி புலவர்கள் உழைக்கும் நிர்ப்பந்தம் நேர்ந்தால் சமுதாயத்தின் நலனுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் சிந்தித்து நல்ல பொருள் சேர்ந்த பாடல்களை எழுதவும் முடியாது. புலவர் பெருமக்களும் பொது சனங்களை மகிழ்விக்கும் நாடக நாட்டிய நடிகர்களைப் போன்ற கலைஞர்களேயாகும். புலவர் பெருமக்கள் மனித குலத்தின் மேம்பாட்டுக்காக ஆற்றிவரும் தொண்டுகளை நன்கறிந்த பழம் தமிழ் வேந்தர்கள் இந்த நன் மக்களை தம்மைப் போல் சரிசமமாக மதித்துப் போற்றியதுடன் அவர்களது சிறப்பு மிக்க கவிதைகளுக்கு பொற்காசுகளை வாரி, வாரி வழங்கி பொருளாதார கஷ்டம் ஏற்படாமல் மகிழ்ச்சியாக வாழ வழிசெய்து வந்தனர். மன்னர் ஆட்சியின் மறைவுக்குப் பின் சமுதாயத்தில் கற்றறிவும், கருணையும் மிகுந்த பெரும் செல்வந்தர்கள் இப் புலவர் பெருமக்களை மன்னன் மதித்தது போல் கௌரவித்துச் சன்மானங்கள் வழங்கி போஷித்து வந்தனர். காலப்போக்கில் பொருள் குவிக்கும் பேராசையால் மனித சமுதாயத்தில் இருந்து வந்து வள்ளல் தன்மை என்னும் நல்ல பண்பு குறைந்து எச்சில் கையால் காக்காய் ஓட்ட விரும்பாத கஞ்சத்தனம் மேலோங்கி வளர்வதாயிற்று. இதன் காரணமாக மன்னர்களாலும் வள்ளல்களாலும் பாராட்டி உற்சாகமூட்டி வளர்க்கப்பட்ட கற்றறிந்த புலவர்கள் பசி, பட்டினியால் வாடி நலிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் கல்வியே சிறந்ததென்று எண்ணித் தங்கள் வாழ்வைக் கழிப்பதற்கென வேறு எந்தத் தொழிலையும் கற்காமல் கல்வியை கசடறக்கற்ற பொறக்களந்தை படிக்காசுத் தம்பிரான் என்னும் புலவர் பெருந்தகை ஆதரிப்பார் அற்று வறுமை அரக்கனின் கோரப் பற்களுள் சிக்கி மனம் வருந்தி பின்வருமாறு கூறுகின்றார். களைக்கூத்தாடுதல், செப்பிடு வித்தை செய்தல், மோகவித்தை செய்தல் போன்று உலகில் எத்தனையோ தொழில்கள் இருக்கும் போது அவைகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளி விட்டுக் கல்விதான் மேன்மை உடையது என்று எண்ணிய மூடமனமே! இந்தச் சனியான தமிழில் ஆசை வைத்துக் கற்றாயே. இந்த தமிழ்க் கவிதைச் சுவையில் உனக்கு யார் பொருள் தந்து ஆதரிக்கப் போகிறார்கள் நீயும் உன்னைப் போன்ற புலவர் கூட்டமும் பட்டினி கிடந்து சாவதைத் தவிர வேறு வழியே இல்லை. இனியேனும் தமிழ் மொழியை அமிர்தம் என்றெண்ணும் வரட்டுத் தனத்தைக் கைவிட்டு விபசாரம் செய்யும் மாதருக்கு தூது சென்றாவது உன் வறுமைப் பேயை ஒட்ட வழி பார் என்று தமிழ் மொழியை உயிராக மதித்துப் போற்றி கற்ற அப்பெரியார் ஆதரிப்பாரற்று வறுமை சூழ்ந்து வருவதால் அமிர்தம் எனச் சுவைத்துக் கற்ற தனது தாய் மொழியான தமிழைச் சனியன் என்று எண்ணும் அளவுக்கு விரக்தி தோன்றியுள்ளதை எண்ணும் போது வேதனை தருவதாக உள்ளது.

''அடகெடுவாய் பல
தொழில்கள் இருக்கக் கல்வி
அதிகமென்று கற்று விட்டோ
மறிவில்லாமல்
திடமுன் மோகனமாடக்
கழைக்கூத்தாடச்
செப்பிடு வித்தைகளாடத்
தெரிந்தோமில்லை
தடமுலை வேசையராகப்
பிறந்தோமில்லை
சனியான தமிழை
விட்டுத்தையலார் தம்
இடமிருந்து தூது சென்று
பிழைத்தோமில்லை
என் ஜென்மம் எடுத்துலகில்
இருக்கின்றோமே''

(படிக்காசுத் தம்பிரான் புலவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி கவிவாணர் ''வேசையராகப் பிறந்தோம் இல்லை. அவர்களுக்குத் தூது சென்று வருவாயைத் தேடிக்கொண்டோமில்லை. இந்த சனியான தமிழைக் கற்று வீண் காலம் கழித்தேனே! என்று அப்புலவர் பெருந்தகை இரங்குதலைக் காணும் போது நம் இதயம் வேதனையில் ஆழ்கின்றது. நம் தமிழ் சமுதாயத்தில் கற்றவர்கள் பெருக வேண்டும். கவிவாணவர்களுக்கு வாரி வழங்கும் தானவான்கள் தொகை அதிகரிக்க வேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சுவோமாக. புலவர் இராமச்சந்திரக் கவிராயர் கூறுகின்றார் கல்லாத மூடனைக் கல்விமான் என்று பாராட்டினேன். காட்டுமிராண்டியை நாட்டை ஆளும் அரசனாவாய் என்று புகழ்ந்து போற்றினேன். பொல்லாத கெடுமதியுடைய ஒருவனை நான் நல்லாய் என்றேன். போர்முனையை என்றும் அறியாத ஒரு கோழையை ஆண்புலி போன்ற வீரபராக்கிரமன் என்று பாராட்டினேன். சூம்பிய புயமுடைய ஒருவனை மற்போரில் வல்லவன் என்றேன். ஈயாத லோபியை நான் வாய் கூசாமல் வள்ளல் என்று போற்றினேன். இப்படி ஒருவனிடம் இல்லாத பெருமைகளைச் சொன்னதால் உனக்கு ஒன்றும் தரமாட்டேன் போ என்று என்னை விரட்டினான். நான் செய்த தவறுகளை எண்ணி இப்போது வருந்துகிறேன் என்று பல கொடாக் கண்டர்களிடம் போய் பாட்டிசைத்து வெறுங்கையுடன் திரும்பிய இராமச்சந்திர கவிராயர் பின்வரும் பாடல் மூலம் தன் கசப்பான அனுபவத்தைக் கூறுகிறார்.

''கல்லாத ஒருவனை நான்
கற்றோனென்றேன்
காடெறியும் மறவனை
நாடாள்வாய்யென்றேன்
பொல்லாத ஒருவனை நான்
நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப்
புலியே யென்றேன்
மல்லாகும் புயமென்றேன்
சும்பற்றோனை
வழங்காத கையானை
வள்ளலென்றேன்
இல்லாத சொன்னனுனக்கில்லை
யென்றான்
ஏங்குகிறேனென் குற்றத்தை
எண்ணி எண்ணி.....
(இராமச்சந்திர கவிராயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் இரட்டையர் தம் அனுபவத்தைக் கூறுகின்றபோது ஆடும் தெய்வமான இறைவனை மத்திஸ்தத்துக்கு அழைக்கிறார். அவர் சொல்கிறார் ''தென்புலியூரில் அமர்ந்து அருள் பாலிக்கும் இறைவா மகாலட்சுமி போன்ற அழகுவாய்ந்த பெண்ணை சிங்காரித்து மேலும் அழகுறச் செய்தாலும் அவள் கணவன் இரண்டு கண்களும் பார்வை இழந்த குருடனாக இருந்தால் அந்தப் பெண்ணின் வனப்பால் யாது பயன்-அதுபோல் கல்லாத மூடரிடம் சொற்சுவை, பொருட்சுவை மிகுந்த பாடல்களைப் பாடுவதில் யாது பயன் என்று எண்ணி மனம் நொந்த புலவர்களில் பெரும்பாலர் இனி அற்ப மனிதர்களை ஏற்றிப் பாடுவதில்லை. மகா தேவனான இறைவனைப் பாடுவதில் தான் ஆன்ம திருப்தியுண்டு என்று எண்ணி மனம் தேறி அந்தப்புரம் பொருளைப் போற்றிப் பாக்களைச் சொரியலானார்கள்.

மூடர் முன்னே பாடன்
மொழித்தாலறிவானே
ஏடெடுத்த தென்புலியூர்
அம்பலவ ஆடகப்பொருளே
செந்திருவைப் போலணங்கை
சிங்காரித்தென்ன பயன்
அந்தகனே நாயகனானால்.........
(புலவர் இரட்டையர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெல்லும் தேனும் உருவாகிய புதுமொழி !

# களத்து மேட்டிலும் தேன் காட்டிலும் பொலிவை நாடும் புதுவார்த்தைகள்

தமிழ் இனத்தின் தாய் மொழியாகத் தமிழ் இருந்து வருகின்றது; ஆயினும் தம்பலகமப் பகுதி தமிழ் முன்னோர்கள் உயிர்காக்கும் நெல்லைச் சேமிக்கும் களத்து மேட்டிலும் பூலோக அமிர்தம் என்று போற்றப்படும் தேன் எடுக்கும் பொது காட்டிலும் பேசுவதற்கெனத் தங்கள் தாய் மொழியான தமிழில் இருந்து பாஷைகளைத் தோற்று வித்துப் பேசிவந்துள்ளனர். இந்த விசித்திர மொழிகள் இன்று பேச்சு வழக்கற்று மறைந்து கொண்டிருக்கின்றன. கால மாற்றத்தின் காரணமாக களத்து மேட்டில் விவசாயிகள் பேசிவந்த பாஷை தேவையற்றதாகவும் ஆகியுள்ளது. தமிழ் மொழியில் இருந்து தோற்றிவிக்கப்பட்டவைகளாயினும் இம் மொழிகளின் வார்த்தைகள் தமிழ் மொழியின் நின்று வேறு வேறு அர்த்தமுடையவையாகவும் காணப்படுகின்றன.

<u>**நெற்களத்தில் பேசப்படும் பாஷை**</u>

நெல் வயல் அறுவடை ஆனதும் வயல்களின் மத்தியிலுள்ள களத்து மேட்டில் வட்ட அணியாக சூடு வைக்கப்பட்டிருக்கும். பொங்கி விட்டு இறைவழிபாடாற்றி சூடுமிதிப்பு தொடங்கியதும் சூடுமிதிப்பாளர்களிடையே ஒரு விநோதமான மொழி பேசப்படும். களத்து மேட்டில் பேசப்படும் களத்து மேட்டில் பேசப்படும் இப்புதிய மொழியின் வார்த்தைகள் அதிக நெல்லைப் பெறும் ஆவல் உடையதாகவே அமைந்துள்ளன.உதாரணமாக களத்தில் பேசப்படும் வார்த்தைகளில் சில பின்வருமாறு: நெற்கதிர்கள் சூடு என்று குறிப்பிடுவது வழமை. ஆனால் களப்பாஷையில் சூட்டை - போலன் என்று சொல்வார்கள். சூடுமிதிப்புக்கு ஈடுபடுத்தும் எருமைக் கடாக்களை வாரிக்காலன் என்று அழைப்பார்கள். வாரிக்காலன் என்றால் அதிகமாக நெல்லைத்தரும் கால்களை உடையவை என்பது பொருள். வைக்கோலை விட்டு உதிர்த்த நெல்குவியலை பொலி என்று குறிப்பிடுவார்கள். பொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் பொலிந்து அதிகப்படுவது என்பது பொருள். களத்தில் சூடு மிதிப்பில் ஈடுபடுவோரின் வாய்களில் பொலி,பொலி என்ற சொல் தாராளமாகவே புழங்கும். இதே போல் நெற்கதிருக்கு வயலில் வளைந்து வளைந்து மிதித்து நெல் மணிகளை உதிர்க்கும் எருமைக்கடாக்கள் போடும் சாணியைப் போல் என்றும் வைக்கோலை மிதிஞ்சான் என்றும், நெல்லில் உள்ள பதரைக் கள்ளன் என்றும், சாப்பிடுவதை அல்லது குடிப்பதைப் பெருகுவதென்றும், தண்ணீரைக் கலங்கள் என்றும், தண்ணீர் குடிப்பதைக் கலங்கள் பெருகுவதென்றும், இப்படி களத்திலுள்ள தேவைகளுக்காகப் பேசப்படும் வார்த்தைகள் எல்லாம் தமிழுக்கு வேறான ஒரு புதிய மொழியாகவே தோன்றும்.

**தேன் காட்டுக் காரர்கள் பேசும் மொழி**

பூலோக அமிர்தம் எனப்போற்றப்படுகின்ற தேன் பெறுவதற்காகக் காட்டுக்குச் செல்லும் தேன்காட்டுக்காரர்கள் தேனை ஒரு தெய்வீகப் பொருளாக மதிப்பதால் அவர்கள் காட்டில் பேசுவதற்கென ஒரு புதிய மொழியை உருவாக்கிப் பேசிவந்துள்ளனர். வன வேட்டையில் தேன் காடு போவது தான் மிகவும் அபாயகரமானது என்பது வேட்டைக்காரர்களின் கருத்தாகும். பத்து அல்லது பதினைந்து பேர்கள் ஒருங்கு சேர்ந்து தேன் காட்டுக்குச் சென்றாலும் காட்டில் முப்பது யார், நாற்பது யார் தூரத்துக்கு ஒருவராக காடெல்லாம் பரந்து தனித்தனியாகவே தேன் தேடிச்செல்வார்கள். தேன் காட்டுக்காரர்களின் முழுக்கவனமும் மரங்களில் தேனீக்கள் மேல் நோக்கிப் பார்ப்பதிலே நிலைத்திருப்பதால் கீழே காடுகளில் பதுங்கி இருக்கும் மிருகங்களைக் கவனிக்கத்தவறி விடுவார்கள். ஆகவே புதர்களில் மறைந்திருக்கும் புலிகளினாலோ, கரடிகளினாலோ தேன் காட்டுக் காரர்கள் தாக்கப்படுவது மிகச் சர்வசாதாரண விஷயம். இந்த அபாயகரமான தொழிலைச் செய்பவர்கள் தேன் காட்டில் பேசிக் கொள்ளும் மொழியும் தமிழ் அல்லாத ஒரு புதிய மொழியாகவே தோன்றுகின்றுது.

**இரட்டிப்பு**

முப்பது நாற்பது யார்களுக்கு ஒருவராக காட்டில் வரிசையாகத் தேன் பார்த்து வருபவர்களில் ஒருவர் ஒரு மரக்கொம்பில் தேனைக் கண்டு விட்டாரானால் தன் சகாக்களுக்கு அதை தெரியப்படுத்த ''கோ'' என்று குரல் கொடுப்பார். அவர் குரலைக் கேட்ட சகா ஒருவர் அவர் என்ன சொல்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்காக கோ என்று ஒற்றைக் குரல் கொடுப்பார். அப்பதில் குரல் கேட்டதும் தேன் கண்டவர் ''கோ'' ''கோ'' இரட்டையாகச் சமிக்ஞையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவார். இதை இரட்டிப்பதென்று தேன் வேட்டைக்காரர் குறிப்பிடுவார். தேன் கண்டவர் முதல் கோ என்றது நண்பர்களே! என்று காட்டில் தேன் பார்த்து வரும் தன் சகாக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல முயல்வதாகும். அதற்கு அடுத்து வந்தவர் கோ என்றது என்ன என்று கேட்பதைப் போன்று அர்த்தமுடையதாகும். அதற்கு தேன் கண்டவர் கோ கோ என்று இரட்டித்தது தேன் இங்கே இருக்கிறது எல்லோரும் இங்கே வருங்கள் என்று கொடுக்கும் காட்டுச் சமிக்ஞை ஆகும்.

இந்த சமிக்ஞையைக் கேட்டதும் காடெல்லாம் வலையிட்டதைப் போல் பரவி வந்த தேன் காட்டுக்காரர்கள் தேன் இருக்கும் மரத்துக்கு வந்து கூடித் தேன் கூடுகளை வெட்டி வதைகளை எடுத்து பரப்பப்பட்ட இலைகளில் குவிப்பார்கள். எல்லோரும் அமர்ந்திருந்து தேன் வதைகளை உண்பார்கள். தேன் வதைகளை எடுத்துப் புசிக்குமாறு ஒருவருக்கொருவர் சொல்ல விரும்பினால் இன்றுள்ளவர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் இடைக்கிடை கலந்து பேசுவதைப் போல் ''எடுத்துக் கொட்டாப்பி'' என்று சொல்லுவர். எடுத்து என்பதை தமிழ்ச் சொல்லாகவும் கொட்டாப்பி என்பது புரியாத காட்டுப் பாஷையாகவும் தோன்றும். கொட்டாப்பி என்பதற்குச் சாப்பிடு என்பது பொருள்.

கொட்டாப்பி, கொட்டாப்பி என்று ஒருவர் இன்னொருவரை கட்டாயப்படுத்தினால் எனக்கு வேண்டாம் அல்லது என்னால் முடியாது என்று கூறுவது தேன் காட்டுமரபாகாது. ஆகவே முன்னதான் என்று கூற வேண்டும். முன்னதான் என்றால் எனக்கு வேண்டாம் அல்லது என்னால் முடியாது என்பது பொருள். தேன் காட்டிலும் தண்ணீருக்குக் கலங்கள் என்றும் பருகுவதற்கு பெருகுவதென்றும் குறிப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றலுக்கு நிகரான கொண்டல் காற்று

உயிர்க் குலங்களின் உயிர் மூச்சாக பிரதானம் வகிப்பது காற்று. காற்று இன்றேல் இந்த மண்ணுலகில் எந்த ஜீவராசிகளும் உயிர் வாழ முடியாது யாவரும் அறிந்துள்ள ஓர் உண்மையாகும். உயிர் குலத்தின் உயிர் மூச்சாக பிரதானம் வகிக்கும் காற்று நாட்டுக்கு நாடு, தேசத்துக்கு தேசம் வேறு வேறான காலங்களில் வேறு வேறான பெயர்களில் வீசுவது குறிப்பிடத்தக்கதாகும். நாம் வாழும் இலங்கையிலும் காலத்துக்குக் காலம் பலவிதமான காற்றுகள் வீசுகின்றன. இவைகளில் கோடை பருவப்பெயர்சிக் காற்று, மாரிப் பருவப் பெயர்ச்சிக் காற்று என்று இருவகையான நிலை உள்ளன. வடதிசையில் இருந்து வீசும் காற்றை வாடைக்காற்று என்று அழைப்பதுண்டு. இக்காற்றை மாரிப்பெயர்ச்சிக் காற்று என்றும் கூறலாம். இக்காற்று மாரிக்காலத்திலே தான் வீசும். பெரும்பாலும் இக் காற்றுடன் மழையும் சேர்ந்து வருவதால் இக் காற்றை மழைக்காற்று என்றும் சொல்வதுண்டு. வாடைக்காற்று சில சமயம் மழையுடன் பெரும் புயலையும் அழைத்து வந்து பேரழிவுகளையும் ஏற்படுத்தி விடுவதுண்டு. ஐப்பசி மாதம் தொடங்கி தை மாதம் வரையுமுள்ள நான்கு மாதங்கள் வாடைக்காற்றின் உரிமைக் காலமாகும். ஆயினும் அந்த நான்கு மாதங்களும் இக் காற்று தொடர்ந்து வீசுவதில்லை. மழைவரக்கூடிய குழப்பமான வேளைகளில் வாடைக்காற்று புலி போல் பாய்ந்து வருதலைக்காணலாம். இக் காற்று பொதுவாக இலங்கை முழுவதும் வீசும் இயல்புடையது.

**சோளகக் காற்று**

சித்திரை மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாதங்களில் தென் மேல் திசையில் இருந்து பெரிய ஆரவாரத்துடன் தொடங்கி வீசும் காற்று சோளகக்காற்று என்று அழைக்கப்படுகிறது. இக்காற்றின் வரவின் பின் மழை இன்றி வரட்சி நிலவுவதால் கோடைகாற்று என்றும் சொல்லப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திலே தான் இக்காற்றின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. மட்டக்களப்புப் பகுதியில் இக்காற்றை கச்சான் என்று அழைக்கின்றனர். இக்காற்று சிறு புயல் போல் விட்டு விட்டு வீசும். சித்திரை மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி மாதம் வரையும் வருடத்தில் ஏழு மாதங்களுக்கு தொடர்ந்து வீசும் கால அளவு உடையது. திருக்கோணமலை மாவட்டத்தில் குறிப்பாக தம்பலகமத்தில் கமம் செய்வோர் வயல்களை உழுது பண்படுத்தி விட்டு விதைப்பதற்காக சோளகக் காற்றின் வரவை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருப்பார்கள். ஆனால் இக் காற்று விவசாயிகளின் எதிர் பார்ப்புக்கு எதிராக வைகாசி விசாகம் வரை வராமல் இருப்பதும் உண்டு. சித்திரை மாதம் சிரித்தெழும் சோளக ராஜா ஐப்பசி மாதம் அமந்திடுவார் என்று இக்காற்றைப் பற்றி கூறும் பழமொழி வழக்கில் உள்ளது.

**கொண்டல் காற்று**

சோளகக் காற்று கோடைக்காற்று சூடானது. வாடைக்காற்று மழைக்காற்றுக் குளிர் ஆனது. இந்த இரு பெரும் காற்றுக்கும் இல்லாத சிறப்பும் சுகமும் உடையது கொண்டல்க்காற்று. தென்னிந்தியாவில் காதலர்கயைும் கவிஞர்களையும் தனது குளிர்ச்சியான ஸ்பரிசத்தால் கவர்ந்து இலக்கிய புகழ் பெற்ற தென்றல் காற்று வட இந்தியாவில் பிரதானம் வகிப்பதாக தெரியவில்லை. இந்தியாவின் தெற்குச் சமுத்திரத்தில் இக்காற்று தென்றல் என்ற பெயர் பெற்று குளிர்ச்சியாகத் தமிழ் இனத்துக்குச் சுகமூட்டும் சிறப்பை பெற்றுள்ளது. இக்காற்றைத் தமிழர் காற்று என்று கூடச் சொல்லலாம். தென்றல் காற்றைப் புகழ்ந்து பாடாத தமிழ் புலவர்கள் இல்லை என்றே கூறலாம். கல்வியில் பெரியவரான கம்பர் பெருமான் கூட - ''தென்றலே ஏன் வந்தாய் செப்பு?'' என்று கூறுவதை காண முடிகின்றது பெரும் பாலும் காதலர்களை மகிழ்வித்து ஆனந்தத்தில் ஆழ்த்தும் தென்னிந்தியத் தென்றலுக்கு உள்ள சிறப்பும் மகிமையும் இலங்கையில் வீசும் கொண்டலுக்குண்டு என்றால் அது மிகையாகாது.

துரதிஷ்டவசமாக இலங்கை எழுத்தாளர்களும், கவிஞர்களும் நமது நாட்டுக் கொண்டலின் புகழ் கூறாது தென்னிந்தியத் தென்றலையே தங்கள் எழுத்தில் எடுத்து ஆழ்கிறார்கள். பெயரில் கூட இந்த இரு காற்றுக்கும் தென்றல் கொண்டல் என்ற சிறிய வித்தியாசமேயுள்ளது. இக்காற்றுக்கெனக் காலம் குறிப்பிட முடியாது. வருஷம் முழுவதும் மழை தவிர்ந்த காலங்களில் வட கிழக்குத் திசை இருந்து கொண்டல் காற்று வரும். அனேகமாக வசந்த ருதுவான மாசி பங்குனி மாதங்களில் மனிதர்கள் புளுக்கத்துள் அகப்பட்டுத் தவிக்கும் போது பிற்பகல் ஒரு மணி அளவில் ஜிலு ஜிலு என வடகீழ் திசையில் இருந்து வரும் கொண்டல்க் காற்று வெப்பத்தால் புழுங்கித் தவித்த மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தும் வானத்தில் வடகீழ் திசை வெழுத்திருந்தால், கொண்டல் வரப்போகிறது. இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையில்லை என்று தம்பலகமம் விவசாயிகள் திடமாக நம்புவார்கள். இக்காற்று வந்தால் கூடுதல் குறைவின்றி ஒரேசீராக வீசுமாதலால் தம்பலகமத்தில் சூடுமிதிப்பில் ஈடுபட்டவர்கள் நெல்லைக் கூட்டிக் களத்து மேட்டில் குவித்துவிட்டு நெல்லைக் தூற்றுவதற்காகக் கொண்டல் காற்று வரும் திசையையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இந்தக் காற்றில் தூற்றிய நெல் தூசி பதரின்றிச் சுத்தமாக இருக்கும். காரணம் கூடுதல் குறைதலின்றிக் கொண்டல் காற்று ஒரே அளவாகச் சீராக வீசுதல். இக்காற்றில் தூற்றும் நெல் அப்பழுக்கின்றிச் சுத்தமாக இருக்க முடிகிறது. சோளகக் காற்றிலும் நெல் தூற்றுவதுண்டு. இக்காற்று சிறு புயல் போல் பலமாக வீசிக்கொண்டிருக்கும்.

அடுத்த கணம் காற்றே இல்லாமல் சப்பென்று நின்று விடும். மறுகணம் பேய் போல் மூர்க்கமாக வீசும். இப்படி ஒரு சீரின்றிச் சோளகக்காற்று வீசுவதால் இக்காற்றில் தூற்றிய நெல் கும்பத்தின் நடுவிலும் பதர் தூசி இருக்கும். அந்த நெல்லை மீண்டும் தூற்றிச் சுத்தம் செய்ய வேண்டிய நிலை சூடு மிதிப்பாளர்களுக்கு ஏற்படும். இந்த விதமாக கொண்டல்க் காற்றில் தூற்றிய நெல்லில் தூசி பதர் இருக்காது. கானக சஞ்சாரியான குரங்கு ஒன்றை பிடித்தால் அதை விடாது. குரங்குப்பிடி இரும்புப்பிடி என்றொரு பழமொழியுண்டு. இத்தகைய குரங்கை தனது குளிர்ச்சியான வீசுதலால் மயங்கி தூங்கச் செய்து இரும்புப் பிடியாக மரப்பொந்தை பற்றி இருக்கும் பிடியை தளரச் செய்து குரங்கைத் தவறிக் கீழே வீழ்த்தி விடச்செய்யும் இனிய சாமர்த்தியம் கொண்டல் காற்றுக்கு உண்டு என்று நம்பப்படுகின்றது. இனிமையும், குளிர்மையும் உள்ள கொண்டல் காற்று வட கீழ் மாகாணத்தில் வதியும் தமிழ் பேசும் இனத்துக்கே சொந்தமானதாகத் தெரிய வருகின்றது. மத்திய இலங்கை, தென் இலங்கை போன்ற பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இக் காற்றின் குளிர்ச்சி சுகம் அளிப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையின் வட கடலான வங்காளக்குடா கடலில் தவழ்ந்து கொண்டல்க் காற்று இலங்கையுள் புகும் போது முதல் எதிர்படுபவர்கள் தமிழ் பேசும் மக்களே. அவர்களுக்கே காற்று தன் நயம் முழுவதையும் வழங்கி விடுகின்றது. இதே போல் இந்தியாவின் தென் கடலில் தவழ்ந்து வரும் தென்றல் முதல் சந்திக்கும் தமிழ் நாட்டவர்களுக்குத் தன் குளுமையை ஈந்து மகிழ்விக்கின்றது என்று கூறலாம். எல்லாவற்றிற்கும் மேலாகத்தமிழ் மொழியை அமுதம், இனிமை என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படுகின்றது. அதன் காரணமாகக் குளிர்ச்சி மிக்க கொண்டலும் தென்றலும் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைத் தாய்பாஷையாகக் கொண்ட தமிழ் மக்களைத் தேடித்திரிகின்றனவோ என்று எண்ண வேண்டி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற இல்வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க மகான்கள் கையாண்ட வழி

உலக மாந்தர்கள் பேரின்ப நிலையை அடைய இல்லறம் துறவறம் என இரு வழிகளைச் சாத்திரங்கள் எடுத்து இயம்பி உள்ளன. துறவறம் காமம் குரோதம் போன்ற துர்ச் செயல்களை முற்றாகத் துறந்து பிரம்மச்சாரியாக் கடும் தவமாற்றி ஒரு தனிமனிதன் முத்தி இன்பம் பெறமுயலும் கடினவழியாகும். உதாரணமாக பயங்கர முதலைகள் நிறைந்த நீர் நிலையைக் கடக்க ஓர் மனிதன் அந்த ஆற்றில் இறங்கி நீந்திச் செல்வது போன்ற பயம் நிறைந்த தனி மனித முயற்சியாகும். இல்லறம் ஒரு தனிமனித முயற்சி அல்ல. தான் கரை சேருவதுடன் மனைவி, மக்கள் என்று பலரை ஒரு படகில் ஏற்றிக் கொண்டு அபாயங்கள் இன்றி ஆற்றைக்கடந்து கரை சேரும் ஒரு புனித முயற்சியாகும்.

விருந்தோம்பி அறம் ஆற்றும் இல்லற வாழ்வுக்கு மாசற்ற கற்புடைய மனைவி வேண்டும். ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து அவள் இல்லற வாழ்வுக்கு ஏற்றவள் இல்லை என்று கண்டு பின்பு துறவை நாடுவது ஏற்றதாகாது. இதன் காரணமாகவே திருமணம் என்ற விஷப்பரீட்சையில் சிக்காமல் துறவு மிகக் கடினமான வழி என்று தெரிந்தும் வைராக்கிய சீலர்களான சிலர் இளமையில் இருந்தே துறவை மேற்கொண்டு மிகப்பெரிய செயல்களை புரிந்துள்ளனர். மாசற்ற இல்வாழ்க்கைக்கு அச்சாணியாக விளங்குபவள் மனைவியே. எனவே இத்தகைய மாசற்ற இல்லாளை தேர்ந்தெடுப்பதில் பண்டைப் பெரியவர்கள் தீவிரகவனம் செலுத்தி வந்துள்ளனர்.

மௌக்கல்யர் என்ற மகான் தனக்கொரு நல்ல மனைவியைத் தேர்ந்தெடுக்கப் பல இடங்களிலும் அலைந்து ஈற்றில் கிடத நாட்டு மன்னன் மகள் நளாயினியை மணந்தார். திருமணம் முடிந்த பின்பும் தனது மனைவி கற்புடையவளா என்பதைக் கண்டறிய அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரியைப் பல வித சோதனைகளுக்கு உட்படுத்தினார். அம் மாதரசி ''நாளை உதயமாகக் கூடாது'' என்று கதிரவனுக்கு உத்தரவிட்டு தன் கற்பின் ஆற்றலை உலகம் அறியச் செய்தாள் என்று மகாபாரதம் கூறுகிறது. அசோக வனத்தில் சிறை இருந்து மீண்ட ஜானகியின் கற்பைப் பரிசோதித்தறிய இராமபிரான் விரும்பினார். வெந்தழல் புகுந்து சீதா தன் தூய்மையை நிருபித்தாள். மகாகவி காளிதாசனின் உயிர் நன்பனான போஜராசன் தன்மனுஷியான லீலாவதி தேவியின் கற்பு நிலையைப் பரிசோதிக்க அவாவி பழுக்கக்காச்சி செந்நிறம் அடைந்த இரும்புப் பாளங்கள் மீது நடந்து வரப்பணித்தான். அம்மாது சிரோன்மணி அந்த இரும்புத்துண்டங்கள் மீது அவசரமின்றி அன்னம் என நடை பயின்றதைக் கண்டு அரசன் இறும்பூதெய்தினான்.

பண்டையில் கணவன்மார்கள் கற்பென்னும் துலாக்கோலை கொண்டு நிறுத்து எடை கண்டே தங்களின் மனைவிமார்களின் கற்பென்னும் திண்மையை கண்டறிந்தனர் என அறியக்கிடக்கின்றது. கற்புடைய மனைவியோடு அனுஷ்டிக்காத இல்லறத்தால் முத்தி நிலையை எட்டமுடியாது என்பது வேத சாஸ்திரங்களின் ஏகோபித்த கருத்தாகும். வள்ளுவர் தனது நூலில் கடவுள் வாழ்த்து கூறும் போது அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற சாஸ்திரக் கருத்துக் கமைய தனது அன்னை தந்தையரைக் கடவுள் நிலையில் வைத்து இரட்டை அர்த்தமுடையதாக ''அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்று கூறியுள்ளார் என்று கொள்வது தவறாகாது.

அக்காலம் அப்பகுதியில் ஒரு வேதாளம் தோன்றி பயிர்களை அழித்தும், மனிதர்களைக் கொன்றும் பெரும் அட்டகாசம் செய்து வந்தது. காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமியில் கமம் செய்யும் மார்க்க சகாயம் என்னும் வேளாளப் பிரபு இந்த வேதாளத்தை அடக்குவோருக்கு பெருந்தொகைப் பணம் சன்மானமாக வழங்குவதாக அறிவித்தார். தெய்வத்தன்மை வாய்ந்த திருவள்ளுவர் விபூதி, பஞ்சாச்சார ஜெபம் மூலம் அந்த வேதாளத்தின் அட்டகாசங்களை முற்றாக அடக்கி மக்களை இன்புறச் செய்தார். அச் செல்வர் தாம் கூறியப்படி பொருள் கொடுக்க அத்தனத்தை எல்லாம் ஏழைகளுக்கு பங்கிட்டளித்தார்.திருவள்ளுவரின் பெரும் குணத்தையும் தெய்வீகத் தன்மையையும் கண்ட அச்செல்வர் தம் மகள் வாசுகியை மனைவியாக ஏற்றுக்கொள்ளுமாறு வள்ளுவரிடம் வேண்டினார். அச்செல்வர் கூறியதைக் கேட்ட வள்ளுவர் நல்லது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தரும் மணலை உங்கள் பெண் உணவாக சமைத்துத் தந்தால் மணம்செய்ய சம்மதம் என்றார். மௌக்கலய மகாரிஷி, இராமபிரான்,போஜராசன் போன்ற மகாபுருஷர்கள் திருமணம் செய்து கொண்ட பின்பு தங்கள் மனைவியிடம் கற்பென்னும் திண்மம் இருக்கின்றதா? என்று ஆராய்ந்து கண்டறிய முயன்றார்கள். ஆனால் திருவள்ளுவரோ கல்யாணம் ஆகும் முன்பே மணலை சோறாக சமைக்கச்செய்து மனைவியாக வரப்போகிறவளின் கற்பு நிலையை நிருபிக்குமாறு கேட்டிருப்பதைக் காண முடிகிறது. வள்ளுவரின் நிபந்தனையை ஏற்று வெறும் மணலை சோறாகச் சமைத்துப் பக்தாவிற்கேற்ற பதிவிரதையாக வாசுகி விளங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணேஸ்வரனைப் பற்றி அவதூறு பேசுவது கூடாது...!

"இராவணன் சீதை மீது ஆசை கொண்டு கவர்ந்து சென்று இலங்கையில் சிறை வைத்தான்" என்றே எல்லோரும் ஒரு பக்கச் சார்பாக எண்ணுகிறார்கள்; பேசுகிறார்கள்.

மலையைப் பிடுங்கும் பராக்கிரமசாலியான தசமுகனின் தங்கை சூர்ப்பனகை ஒரு குற்றமும் செய்யாதிருந்தும், இராம-லட்சுமணர்கள் மூக்கு, காது போன்ற அவயவங்களை வெட்டி மூளியாக்கி உள்ளனர். இந்தக் கொடுஞ்செயலை, யாருமே எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை.

'வெள்ளெருக்கம் சடை, முடியான் பெற்றெடுத்த திருமேனி..... என்று கம்பரே இராணவன் மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றதைப் பாடலில் கூறுகிறார்.

இப்படியான வீர பராக்கிரமனின் தங்கை அடாத்தாக மூளியாக்கப்பட்டால் வீரனான அண்ணன் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பானா? தங்கை மூளியாக்கப்பட்டதற்குப் பதில் நடவடிக்கையாகவே அவன் சீதாவைப் பிடித்துக் கொண்டுபோய் சிறை வைத்தான். சீதா நீண்டகாலம் இலங்கையில் இருந்தாலும் எந்தவிதமான இம்சையும் இன்றி அண்ணன் வீட்டில் இருந்தது போலவே இருந்தாள். இராவணனோ அநியாயமாக மூக்கறுபட்ட சூர்ப்பனகையோ சீதாவிடம் வந்து ஒரு கிண்டல் வார்த்தை தன்னும் பேசியதாகச் சரித்திரமில்லை.

சீதா சிறை இருந்தே சிவபக்தனாகிய திருநீறு அணியும் செந்தமிழ் வேந்தன் இராவணனது ஒழுக்க மேம்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அரசகுலப் பெண்களைச் சிறைப்பிடித்தல், பசு மந்தைகளை மடக்குதல் என்பன போரை வருவிக்க அரசர்கள் கையாண்ட வழிமுறைகள். தன் தங்கைக்குச் செய்த பாதகத்துக்குப் பதில் நடவடிக்கையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று சிறை வைத்தான் என்பதே ஏற்புடையதாகும்.

செல்வத்தின் அதிபதி குபேரனின் தம்பி இராவணன் குணக்கேடு உடையவனாக இருந்திருந்தால் தெய்வத்தன்மை மிக்க திருஞானசம்பந்தர் "இராவணன் மேலது நீறு" என்று சிவபக்தர்களுக்கு இலக்கணமாகப் பாடியிருப்பாரா?

இதைச் சிந்தனையில் கொண்டால் உண்மை விளங்கும். இராவணன் வேதாகமங்களைத் துறைபோகக் கற்றவன். பெரிய வீணை வித்துவான். சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்துத் தாயார் வழிபடச் சிவலிங்கம் பெற்றவன்.

இத்தகைய மேன் மக்களிடம் பெண்களுக்குத் தீங்கிழைக்கும் இழி குணம் இராதென்பது தெளிவு.

இராவணன் தந்தை விஸ்ஸிரவஸ் பெரிய சிரேஷ்டர். தாய் நிசித்திரி அம்மையார். அரச மாதாவாக இருந்தாலும் அரண்மனையில் தங்கி அரசபோகங்களில் ஆளாமல் மகாவலிகங்கைக் கரைக்காட்டில் ஆச்சிரமம் ஒன்று அமைப்பித்து அங்கு வாழ்ந்தவர். ஆண், பெண் காவலர்கள் துணையுடன் தங்கி ஒவ்வொரு நாளும் உலக்கை பிடித்து நெல்லுக் குற்றி மாவாக்கி அந்த மாவில் திருக்கோணமலையில் உறையும் கங்கை சூடிய கோணேஸ்வரப் பெருமானை லிங்க வடிவில் செய்து பூசித்துக் கங்கையில் விடுவதைத் தவமாகச் செய்து வந்தார்.

இராவணனின் தேவி மண்டோதரிதேவி திருப்பெருந்துறை மேவிய பிரானின் பேரருள் பெற்றவர் என்று மகாமிக்கவர்களாகவே காணப் படுகின்றனர்.

திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில் திருமலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் க.துரைரெத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொண்ட பேரறிஞர் க.பாலசுப்பிரமணியத்தின் இராவணேஸ்வரன் பற்றிய ஒரு நூல் வெளியீடு நடைபெற்றது. பொன்னாடை போர்த்தல், 50க்கு மேற்பட்ட உபசரிப்பு நிகழ்வுகள் என்பன அங்கு இடம் பெற்றன. கவிஞர் புதுவை இரத்தினதுரையும் விழாவில் கலந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வளர்கலைமன்றம் நடாத்திய இவ்விழாவில் வட கிழக்கு மாகாண ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் குலவீரசிங்கம் தலைமை உரை நிகழ்த்தினார்.

இராவணன் குறையுடையவனாக இருந்திருந்தால் சிவபக்தர்களுக்கு இலக்கணமாக சைவசமய குரவர் திருஞான சம்பந்தர், "இராவணன் மேலது நீறு" என்று பாடி இருப்பாரா?

ஆயினும் "தென் திசையைப் பார்க்கிறேன். அங்கு என் இனத்தவனான "இராவணன் ஆண்ட ஈழத்தைக் காணும் போது என் தோள்கள் வீங்கிப் பூரிக்கின்றன" என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். வரலாறு அறியாமல் இராவணன் என்ற மாவீரன் பற்றி கண்டபடி பேசுவது தவறு என்று தமிழ் நாட்டின் முதல்வராகப் பலமுறை அரசுகட்டில் ஏறிய கலைஞர் மு. கருணாநிதி பிரமுகர்களிடம் கூறியிருந்தார்.

இராவணன் பேராற்றல் மிக்க ஒரு தமிழன் என்று எண்ணிப் பெருமைப்படுபவர்களும் உலகில் இல்லாமலில்லை.

திருக்கோணமலை முத்தமிழ் வளர்கலைமன்றத் தலைவர் சி.சிவபாலன், செயலாளர் கலாவினோதன், த. அமரசிங்கம், அவரது நண்பர்களும் விழா சிறப்பாக நடைபெற உதவினர்.

திருக்கோணமலையின் பழம் பெரும் இலக்கியவாதியும் பெரியாளருமான காந்தி ஆசிரியர் ஐயாவும் கௌரவிக்கப்பட்டார். பல பேச்சாளர்களின் உரைகள், திருமலையில் நடந்த தமிழ்ப் பெரும் விழாவாகவே இந்நிகழ்வை எடுத்துக் காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப் பற்றி

1917 இல் பிறந்த தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் வீரகேசரி நாளிதழின் நீண்டகால நிருபராக கடமையாற்றியவர். மித்திரன், தினபதி, சிந்தாமணி, சுடர், சுதந்திரன், தினக்குரல், தினகரன், ஆத்மஜோதி, சிவநெறி, இந்தியக்குமுதம், பக்தி இதழ் என பல நளிதழ்கள், சஞ்சிகைகளுக்கு அனுப்பிய சிறந்த ஆக்கங்கள் மூலம் வாசகர் மனங்களில் தடம்பதித்தவர்.

தம்பலகமம் என்ற வளம் பொருந்திய கிராமத்தினை தனது பெயருடன் இணைத்து பயன்படுத்தி தனக்கு இருக்கும் மண்பற்றினை உலகிற்கு தெரிவித்தவர். இன்று இரண்டாவது நூலாக இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் பல வரலாற்று ஆக்க கட்டுரைகளைக் கொண்டிருப்பதால், வரலாற்று ஆய்வா ளர்களுக்கு இந்நூல் உறுதுணையாக இருக்கும்.

தம்பலகாமம்
பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம்

ISBN 955-1098-00-5
9 789551 098001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org